www.padippakam.com

Registered as a News Paper in Sri Lanka

பக்கம் 20

ஒக்.30-நவ.05,1994

ரூபா 9/00

# வாரமலர் தினமுரசு

THINAMURASU SRI LANKA'S NATIONAL TAMIL முரசு 74




## நூலக எரிப்பு காரணம் யார்?

## காமினியின் இறுதிப் பேட்டி

## முரசுக்கு இறுதிப் பேட்டி







-சினி- விசிட்

## மணமகள் தேடும் மலை மகன்!

சூடு - சுவை - சுவாரசியம் அது தான் தினமுரசு

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்

# முரசம்

அன்புள்ள உங்களுக்கு,
வணக்கம்.
முதலில் பாராட்டவேண்டிய
இரு விசயங்கள் இருக்கின்றன.

ஒன்று; பிரதமர் சந்திரிக்கா அவர்கள்
பி.பி.சிக்கு வழங்கிய
மனம் திறந்த சிறந்த பேட்டி.

ஜனாதிபதித் தேர்தல் நெருங்கும் நேரத்தில்
அப்படியொரு பேட்டியை வழங்க
நிரம்பத் துணிச்சல் வேண்டும்.
அத்தோடு நேர்மையும் வேண்டும்.
இரண்டுமே நமது பிரதமரிடம்
நிறைந்திருப்பதை வரவேற்கவே வேண்டும்.

இன்றைய கால கட்டத்திற்குரிய
காத்திரமான சிந்தனைப் போக்கு
பிரதமரின் பேட்டியில் வெளிப்பட்டிருக்கிறது.
இனப் பிரச்சனையே இல்லை என்ற
இங்குதவாப் பேச்சைக் கேட்டு
வெறுப்புற்ற தமிழ் பேசும் மக்களுக்கு
பிரதமரின் பேச்சு பேருவகை தரும்.

அரசின் வெகுஜனத் தொடர்பு சாதனங்களே
அதிக முக்கியத்துவம் கொடுக்க
சற்றுத் தயங்குமளவுக்கு
பிரதமரின் பேட்டியில்-
வெளிப்படையான கருத்துக்கள் அதிகம்.

வாக்குகளைப் பற்றி மட்டுமே
சிந்திப்பவராக இருந்திருந்தால்
இழப்புக்களை சந்திக்க வேண்டி வருமே என்று
பட்டும் படாமல் பதில் சொல்லியிருப்பார்.

படையினர் பற்றிய கேள்விகளுக்கும்
மனதில் பட்டதை சொல்லியிருக்கமாட்டார்.

தீர்வு முயற்சிகளில்-
மனம் திறந்த போக்கே முக்கியம்.
அது பிரதமரிடம் இருப்பது
நம்பிக்கை தருகிறது; எதிர்பார்க்க வைக்கிறது.

நமது தலைமுறைக்கு மட்டுமின்றி
நாளைய தலைமுறைக்கும்
நாம் விட்டுச் செல்லக்கூடிய
மிகப் பெறுமதியான சொத்து
நிலையான-கௌரவமான சமாதானமே.
அதனை நோக்கிய பாதையில்
பிரதமர் உறுதியோடு நடந்தால்-
இன்றைய உறுதி தொடர்ந்தால்
தோள் கொடுத்து துணை நிற்பது
நம்மனைவரதும் கடமையாகும்.

□□

உங்களோடு பகிர்ந்து கொள்ளும்
மகிழ்ச்சியான செய்தி இது:
முரசின் உதவியாசிரியர்
ஐயா.இரா.பத்மநாதன் அவர்களுக்கு
'கலைமணி' விருது வழங்கி
இந்து சமய கலாசார திணைக்களம்
கௌரவித்துள்ளது.

நம்மவர் என்பதால் மட்டுமல்ல
நல்லவர்-வல்லவர்-
மீன்பாடும் தேனாடு தந்த இனியவர்,
இலங்கை வானொலியில்
வானொலி மாமாவாக
வானலைகள் மூலம் மழலைகள்
செவிக்கு தேன் வார்த்தவர்.

வெகுஜனத் தொடர்புத் துறையில்
வெகுகால அனுபவமும்-ஆற்றலும்
அவருக்குண்டு என்பதால்
விருது கொடுக்கப்பட்டிருப்பது
விருப்போடு வரவேற்கப்படவேண்டியதே.

இன்னொரு செய்தியையும்
இந்த நேரத்தில் சொல்ல வேண்டும்.
'இராஜகுமாரன்' என்னும் பெயரில்
மகாபாரதத்தை
அழகு தமிழில் தருவதும் அவரே!

வாழும்போது வாழ்த்துவது
ஆற்றலை ஆமோதிப்பது
நம்மிடையே குறைவுதான்.
அந்த வேண்டாத முறைக்கு மாறாக
நாம் அவரை வாழ்த்துவோமே!

□□

முன்கூட்டியே முரசின்
தீபாவளி வாழ்த்துக்கள்!
எப்போதும்
பண்டிகை வரும் பின்னே
முரசின் வாழ்த்துவரும் முன்னே
என்பதே வழக்கமாகிவிட்டதல்லவா?

புத்தாடைகளுக்கு ஒரு வாசமுண்டு
கூடவே பட்டாசுகளின் வாசனையும்
தீபாவளியை அமர்க்களமாக்கிவிடும்.

போர் மூண்ட பின்னர்
வடக்கு-கிழக்கில்
முன்னர் போல் அமர்க்களமில்லை.

தீய அசுரனை விடவும்-
தேவையற்ற கொடிய யுத்தம்
நிம்மதியின் குரல் வளையை
நெரித்துக் கொண்டிருக்கும்போது
வழக்கமான அமர்க்களமாக
துப்பாக்கி வெடியோசைகளே
விழா நடத்திக்கொண்டிருக்கின்றன.

இந் நிலை மாறுமோ-தீருமோ
கொடிய போர் ஒழியுமோ
என்பதே-
நம்மவர்கள் சிந்தையில்
தினம் ஒலிக்கும் கேள்விகளாகும்.
விழாக்கால சந்தோசங்களுக்கும்
போர் சூழல் வேட்டு வைத்துள்ளது.

மறுபடி சகல சந்தோசங்களும்
மக்களின் வாழ்வில் சூழும்
சமாதானம்-
மலர வேண்டும்-மலர வேண்டும்
என்று வழக்கம்போல் விரும்பிக்கொண்டு
முரசின் தீபாவளி வாழ்த்துக்கள்!

□□

என்றென்றும் அன்புடன்
—ஆசிரியர்—

## ஒளியில் நடப்போம்

காரிருள் நேரம்

கொலை, கொள்ளை, விபச்சாரம் போன்ற அருவருக்கத்தக்க பாவச் செயல்கள் அரங்கேறும் நேரம்.

காரிருள் பரவுகிறது என்றாலே மனதிற்குள் பயம் பரவுகிறது. இந்நேரத்தில் என்ன நடக்குமோ என்ற கவலை இதயத்தினுள் அரங்கேறுகிறது.

இத்தகைய இருளில் நடக்கும்போது நாம் திசை மாறிச் செல்ல நேரிடலாம். ஆனால் ஒளியென்னும் வெளிச்சம் மனதிற்கு ரம்மியமாக இருப்பதோடு, பாவச் செயல்களைக் கட்டுக்குள் கொண்டு வருகிறது. இத்தகைய ஒளியின் பாதையில் நடக்கும்போது நமது பயணம் இலகுவாகவும், சுகமாகவும் அமைகிறது. அதுபோல்தான் ஆன்மீக வாழ்க்கையும்.

சாத்தானின் பாதையில் நாம் நடப்போமானால் அது இருளில் நடப்பதற்குச் சமமானது. இடறி விழுவோம். காயம் அடைவோம். அத்தோடு கடவுளின் கோபாக்கினைக்கும் ஆளாவோம்.

இறைவனின் வழியில்-ஆன்மீகப் பாதையில் நமது வாழ்க்கைப் பயணம் அமையுமானால், அது ஒளியில் நடப்பதற்கு ஒப்பானது.

"கடவுள் ஒளியே, அவரில் இருள் எள்ளளவேனும் இல்லை" (1 யோவான் 1:5) என்கிறது திருமறை.

கடவுளிடம் நாம் அன்பு கொண்டு வாழும்போது பாவ இருள் நம்மிலிருந்து அகன்று விடுகிறது. ஏனெனில் அவர் ஒளியாய் இருக்கிறார். மெய்யான ஒளியாய் கடவுள் பிரகாசிக்கிறார்.

ஜி. டானியல்-நீர்கொழும்பு.

## ஆன்மீகம்



## நேசம் இதனால்!

- மனிதன் தன்னை விரும்புகிறான். அதனால் தன்னைப் படைத்த அல்லாஹ்வை விரும்புகிறான்.
- அல்லாஹ்வின் அருளின்றி மனிதன் எதனையும் அடைய முடியாது.
- நன்றி செய்தவன் தனக்கு நன்றி செய்தோரை நேசிக்கிறான்.

ஆனால் மனிதனுக்கு நன்றி செய்வோர்கூட அல்லாஹ்வின் அருளாலேயே செய்கிறார்கள். அத்தகைய அருளாளனை நாம் ஏன் நேசிக்கக்கூடாது?

நல்ல செயல் உடையோனை மனிதன் நேசிக்கின்றான். வலிமை, அறிவு, அழகு இவற்றையுடைய அல்லாஹ்வை அவன் ஏன் நேசிக்கக் கூடாது?

ஒருவனின் இயற்கை மற்றொருவனின் இயற்கைக்கு ஒத்திருந்தால் அவன் இவனை நேசிக்கின்றான்.

அல்லாஹ்வுடைய குணங்களால் உங்களை அலங்கரித்துக்கொள்ளுங்கள்.

அழகு மனிதன் அழகை நேசிப்பது அழகுக்காகவே. எனவே அல்லாஹ்வின் நாமம் எனும் பேரழகுக்காக அவனை நேசிப்பது இயற்கையாகும்.

நிச்சயமாக நம்பிக்கையுள்ளோர் வெற்றி பெற்றார்கள்.

### இமாம் ஷாபிஈ (ரஹ்) வழங்கிய அறிவுரைகள்

- நீ செய்ய வேண்டிய வேலைகள் அதிகமாக இருந்தால் முக்கியமானது எதுவோ அதனை முதலில் செய்.
- உன் நண்பனின் குறைகளை அவனுக்கு தனிமையில் சொல்.
- வறுமையில் சிக்கித் தவிப்பவனிடம் யோசனை கேட்காதே!
- உன் நண்பனின் நண்பனையும் உளமார நேசிப்பதே உண்மை நட்பு.
- நன்மை செய்யவேண்டும் என்னும் நாட்டத்துடன் கல்வி கற்காதவனுக்கு அவன் தேடும் கல்வி பயன்தரா.

ஜொஹரா ஹுஸைன்-தியத்தலாவ.

## கவிதைப்போட்டி இல-71

வந்து குவிந்தவற்றில் வாகை சூடியதும்
வியக்கப்பட்டவற்றில் இடம் பிடித்தவையும்

### பரிசுக்குரிய கவிதை

**கனவுகளில் தானோ!**

கறந்தபால் அருந்துமுன்
காலன் வருவானோ?
கலவரங்கள் ஓய்ந்த பின்
வாழவிடுவானோ?
அமைதிவரும் விரைவில் வரும்
பேச்சளவில் தானோ?
ஆவலுடன் எதிர்பார்ப்பு
கனவுகளில் தானோ?

கே. இஸ்மத் இப்திகார்
ஏறாவூர்-02.

**தண்டனை**

கறந்தவர்கள்
யாவருக்கும்
கை விலங்கு
பரிசளிக்க
காத்திருக்காம்
புது அரசு-
என்னை மட்டும்
நிராகரித்து.

பூ.இதயரெத்தினம்
ஆரையம்பதி.

**?!**

அடடா
அரசியல்வாதியும்
ம(ா)க்களும்.

என்.சதீஷ்வரன்
கண்டி.

### வியக்கப்பட்டவை

போரில் வறண்ட
பூமி கண்டு வறண்டமடி
புதிய சமாதானம் கண்டு
ஊற்றெடுத்ததோ உன் மடி
பொங்கிச் சுரக்க வேண்டுமடி
சமாதானம் பால்போல்.

என்.எம்.சித்தீக்-மூதூர்.

**ஏன்?**

ஐந்தறிவு ஜீவன்கூட
நன்றி மறவாத
நன் மண்ணிலே
ஆறறிவு மானிடம்
மட்டும் ஏன்..?

அஞ்சலி
ஆரையம்பதி-01.

பாருக்கு தாயாகி
பால் சுரந்து
ஊருக்கு சேவகியாய்
உயர்வு தந்து
பேருக்கு வாழாத
பெருமை கண்டு
ஊருக்குள் எந்நாளும்
புகழும் உண்டு

புவனேஸ்வரி ஆறுமுகம்
பசறை.

**சத்துணவுத்திட்டம்!**

ஆகாரமில்லாமல்
அகதி முகாமில்
அல்லல்பட்ட
அகதிகளுக்கு
சந்திரிகா அம்மையாரின்
சத்துணவுத்திட்டமோயிது?

கவிக்குயில்- ஆரையம்பதி.



**சந்திக்கலாமோ?**

வயல் வாடி சென்று
அயல் ஆற்றில் குளித்து
கயல் பிடித்துக்
கறி சமைத்து
கமுகு சம்பா சோறாக்கி
உடன் கறந்த பாலை
உருசியான தயிராக்கி
உண்டு களிக்கிருந்த
சந்தோஷ நாட்களை
மீண்டும்
சந்திக்கலாமோ?

ரேணுகா றிபாய்தீன்
ஏறாவூர்-2.

**பயமேன்?**

வந்தமாட்டைக் கறந்துவிட்டு
வங்கருக்குள் நுழைவதற்கா?
அந்தரத்தில் இருந்து
அவசரமாய் கறக்கிறாய்?

எஸ்.செல்வராஜ்-மகிழடித்தீவு.

**எது நன்றி?**

பாலைக் கொடுக்கும் பசுவே நீ
பண்பை மறக்கும் இவ்வுலகில்
நாளையக் கறிக்காய் ஆவாயே
நன்றியைக் கொல்லும் மனிதருக்கே!

ச.மகாலிங்கம்-வெளிமடை.

**சொந்தம்**

தேசம் துரத்தியபின்
தேடிக்கொண்ட
சொந்தம்.....!

ஏ.எச்.எம்.பாஸில்
ஹிஜ்ராபுரம்.

**மிருகாபிமானம்**

ஆறறிவோ சுடுகாட்டைக்
காட்டுது
ஐந்தறிவோ
பிழைக்க வழி
சொல்லுது
இதற்குப் பெயர்
மிருகாபிமானம்!

ரம்ஸானியா பரீட்-அக்குறணை.

## கவிதைப் போட்டி இல-74



சிந்தனைகள் சூழலைப் பிரதிபலிக்கட்டும். சொல்லும் கருத்தில் தெளிவும் சுருக்கமும் இருக்கட்டும். எண்ணத்தில் உருவாகும் கவி வரிகளுக்கு தபாலட்டையில் வடிவம் கொடுத்து அனுப்பி வையுங்கள். சிறந்த கவிதை ஒன்றுக்கு பரிசு ரூபா நூறு. அனுப்பவேண்டிய கடைசித் திகதி 05.11.1994.

—முகவரி—
கவிதைப் போட்டி இல: 74
தினமுரசு வாரமலர்
த.பெ.இல-1772,
கொழும்பு.

## வாசகசாலை

அன்புக்கினிய தினமுரசே!

நீ உன் வர்ண உடல்தனில் தாங்கி வரும் அத்தனை அம்சங்களும் அருமை. இரசனை ஊட்டும் ரசிகனின் இலக்கிய நயம், வியக்க வைக்கும் தகவல் பெட்டி மற்றும் தேன் கிண்ணம், கொலை விழும் நேரம், சிறுகதை அனைத்தும் படிப்போர் உள்ளமதைக் கொள்ளை கொள்ளும் விதத்தில் அமைந்துள்ளன. எமதுள்ளத்தில் ஆழப் பதிந்துவிட்ட உனது பணி தொடர எனது இதயபூர்வமான வாழ்த்துக்கள்.

திருமதி.கிறேஸ் தங்கராசா-வந்தாறுமூலை.

□□

நீ சுமந்து வரும் அத்தனை அம்சங்களும் பிரமாதம். எதனை பாராட்டுவது என்று என் மனம் தள்ளாடுகின்றது. ஒன்றா, இரண்டா? ஓராயிரம் தடவைகள் வாழ்த்தினால்தான் என் மனம் நிறைவு கொள்ளும். உனை ஒரு வாரம் காணவில்லை என்றால் என் தூக்கம் கலைந்து விடுகிறது.

ஜெயா செல்லத்தம்பி-கிண்ணியா-01.

□□

முரசே நீ பல்சுவைகளைச் சுமந்து வருகிறாய். அது உனக்கு சுமையாக இருந்தாலும் எனக்கு சுவையாக இருக்கிறது. சுவையை சுமந்து வரும் முரசே, உனக்கு என் நல் வாழ்த்துக்கள்.

சு.துளசிமணி-அப்புத்தலை.

□□

மை டியர் தினமுரசே,

வாரம்தோறும் வலம் வரும் முரசே, உன் ஆக்கங்கள் மிகவும் இனிமையானவை. கொலை விழும் நேரம், தேன் கிண்ணம், அரசியல் அலசல், சூப்பர். மகாபாரதம், சிறுகதைகள், தொடர் கதைகள், இலக்கிய நயம் மிகவும் சூப்பர். இதே போன்று என்றும் நீடூழி காலம் பிரகாசிக்க வேண்டும் என்று என்றும் அன்புடன் வாழ்த்துகிறேன். வளர்க உன் பணி.

இரா.தேவன்-மஸ்கெலியா.

□□

அன்பின் முரசே,

வாரம் ஒருமுறை உன்னை நோக்கி வழி நோக்கும் எங்கள் மனதிற்கு இதமான அம்சங்களை தட்டிக்கொடுக்கும் நீ உன் வண்ண இதழ்களை விரித்து உண்மை நிகழ்வினை எண்ணற்ற வாசகர் முன் வைக்கிறாய். உனது சேவை வாரந்தோறும் மேலோங்க என் இனிய வாழ்த்துக்கள்.

பரீனா ஜபார்-ஹொரவபொத்தான.



அன்பின் தினமுரசு வாரமலருக்கு என்றும் எனது வந்தனங்கள். நீ தாங்கி வரும் ஒவ்வொரு அம்சங்களும் என்றும் என் மனதை கவருகின்றன. என்றென்றும் உன் சேவை ஓங்கி வளர வாழ்த்துக்கள்.

பி.சிவஞானம்-நானுஓய.

□□

என் அன்பின் முரசே,

நீ என்னை தேடி வாகனத்தில் வாரம் ஒரு முறை ஓடி வந்து என்னிடம் பல அம்சங்கள் சொல்லுகிறாய். நான் அனைத்தையும் பார்த்து சந்தோசமடைகிறேன். அடுத்த வாரம் நீ வரும் வரை வீதியில் நின்று தவிக்கிறேன். அடுத்த இதழ் காண காத்து இருப்பதோடு உன் சுவையான அம்சங்களுக்கு என் இதயம் கனிந்த நல்வாழ்த்துக்கள்.

கபீபா இஸ்மாயில்-ஒல்லிக்குளம்.

□□

அன்பின் முரசே,

எக்ஸ்ரே ரிப்போர்ட், சினிவிசிட், இலக்கிய நயம், அதிரடி அய்யாத்துரை, மகாபாரதம் அதையெல்லாம் பார்த்தால் என்னை வியக்க வைக்கிறது. உனது முன் ஏட்டில் சூடு, சுவை சுவாரசியம் என்பது உனக்கே சரி. அதனால் நீ நீடூழி வாழ்கவென வாழ்த்துகிறேன்.

எஸ்.ஷாஜித்-றக்வான.

□□

அன்பின் முரசே,

நீ ஒரு ரோஜாப்பூ. ரோஜாவில் முள் உண்டு. உன்னில் முகப்பு உண்டு. ரோஜாவில் அழகு உண்டு. உன்னில் அறிவுண்டு. ரோஜாவில் மணம் உண்டு. உன்னில் என்னை மயக்கும் சக்தி உண்டு.

சுரேஷ் பிரியா-மட்டுநகர்.

□□

நீ சுமந்து வரும் சுவை மிகு செய்திகளும் ஆன்மீகம், மகாபாரதம், தகவல் பெட்டி, கவிதைப்போட்டி, பாரபட்சம் இல்லா அரசியல் அலசல் ஏன் (முரசம்) படுஜோர்!

கே.வீ.மூர்த்தி-தில்லையடி.

□□

முரசே,

முதலில் உன்னில் எதைப் பாராட்டுவதென்றே புரியவில்லை. சிரிக்கவும்-சிந்திக்கவும்-திகைக்கவும் வைக்கும் புதிய தகவல்கள், சிறுகதைகள், சினிவிசிட், மகாபாரதம், எக்ஸ்ரே ரிப்போர்ட் என யாவுமே திகட்டாத அறுசுவை. குறுகிய காலத்திற்குள் எண்ணற்ற இதயங்களில் இடம் பிடித்துவிட்ட நீ மேலும் தரம் ஓங்க வஞ்சியவள் வாழ்த்துகின்றேன்.

சிபானா அஷ்றப்-பாணந்துறை.

□□

என் அன்புக்குரிய முரசே!

அள்ளிக்கொண்டு வந்து என் மனதை கொள்ளையடித்துவிட்டாய். உனக்கு நிகர் நீயே! உன் திறமையும், அழகும் இன்றுபோல் என்றும் நிலைத்திருக்க வேண்டும் என்பதே என் அவா. உனக்கு என் இனிமையான வாழ்த்துக்கள்!

றபாய்டீன் சீனத்துல் முபீனா
பண்டாரவளை.

□□

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்

# "நல்லவரல்ல-ஆனால் நமக்கு சம்பந்தமில்லை"

## குண்டு வெடிப்பும்- 'புலிகளின் குரல்' செய்தியும்

காமினி திசாநாயக்கா படு கொலை குறித்து யாழ்ப் பாணத்தில் 'புலிகளின் குரல்' செய்தி வெளியிட்டது.

வெளியிடப்பட்ட செய்திகள் காமினி திசாநாயக்கா மீதான தவறுகளை மக்களுக்கு தெரிவிப்பதாகவே அமைந்துள்ளன.

முன்னர் லலித் அத்துலத் முதலி கொல்லப்பட்டபோதும் இதே விதமாகவே புலிகளின் குரல் செய்தி வெளியிட்டது.

வடமராட்சி தாக்குதல் நடவடிக்கைக்கு லலித் தலைமை தாங்கியவர். செல்வச் சந்நிதி ஆலயத் தேரும் அப்போது எரிக்கப் பட்டது என்று லலித் பற்றிய நினைவூட்டல் வெளியிடப்பட்டது.

காமினி திசாநாயக்கா பற்றி புலிகள் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் பின்வருமாறு குறிப்பிடப்பட்டுள்ளது:

(வர்மா)

### புலிகளின் குரல் 24.10.94 காலைச் செய்தி

சிறிலங்காவின் ஜனாதிபதி வேட்பாளர் காமினி திசாநாயக்கா கொழும்பில் இடம் பெற்ற குண்டு வெடிப்பில் கொல்லப்பட் டுள்ளார். நேற்று நள்ளிரவுக்கு சற்றுப் பிந்திய நேரத்தில் இச் சம்பவம் நடை பெற்றது.

இச் சம்பவத்தையடுத்து இலங்கை முழுவதும் அவசரகால சட்டமும், ஊரடங்கு சட்டமும் அமுல் படுத்தப்பட்டுள்ளதாக சிறிலங்கா அரசு அறிவித்துள்ளது.

காமினி திசாநாயக்கா 1970ம் ஆண்டு தேர்தலில் வென்று சிறிலங்கா அரசில் இடம்பெற்றார். 1977ம் ஆண்டு காணி, மகாவலி அபிவிருத்தி அமைச்சராக ஜே. ஆரின் ஆட்சியில் பதவி வகித்தார். மகாவலி அபிவிருத்தி அமைச்சில் பெருந்தொகைப் பணத்தை கையாடல் செய்தார் என்று அறிவிக்கப்பட்டார்.

1981ம் ஆண்டு யாழ் நூலகம் எரிக்கப் பட்டதற்கு பிரதான காரணமாக இருந்தவர் என்று பிரேமதாசாவால் குற்றம்சாட்டப் பட்டார்.

52 வயதான காமினி திசாநாயக்கா ஒரு சட்டத்தரணியாவார். 1987ம் ஆண்டு இந்திய-இலங்கை ஒப்பந்தத்தை பூரணமாக ஆதரித்த வர். இந்திய இராணுவம் இலங்கை வந்த பின்னும் இந்தியாவை பூரணமாக ஆதரித்தார்.

### புலிகளின் குரல் செய்திகள் 24.10.94 மாலைச் செய்திகள

....காமினி திசாநாயக்காவுடன் மொத்தம் 56 பேர் பலியென சிறிலங்கா அரசு அறிவித்துள்ளது. காமினியின் 16 மெய்ப் பாதுகாப்பாளர்களும் பலியாகியுள்ளனர்.

மகாவலி அபிவிருத்திக்காக பெறப்பட்ட பெருமளவு வெளிநாட்டு பணம் காமினியால் மோசடி செய்யப்பட்டதாக முன்னர் குற்றச்சாட்டுக்கள் எழுந்தன.

லஞ்ச ஊழல் திணைக்களம் காமினி மீது லஞ்ச, வழக்கு ஒன்றை தாக்கல் செய்துள்ளது.

காமினியின் ஊழல்களை ஐ.தே.கட்சி பொதுச் செயலாளராக தற்போது இருந்து கொல்லப்பட்ட டாக்டர் காமினி விஜய சேகராவே அப்போது அம்பலப்படுத்தி யிருந்தார்.

1981 யாழ் நூலக எரிப்பின் பின்னணியில் காமினி இருந்ததாக பிரேமதாசா அரசு குற்றம் சாட்டியிருந்தது.

டாக்டர் காமினி விஜயசேகர, காமினியின் ஊழலை அம்பலப்படுத்தியதற்காக ஜே.ஆர். ஜயவர்த்தனாவால் ஐ.தே.கட்சியில் இருந்து முன்னர் விலக்கப்பட்டிருந்தார்.

### ஒத்திவைப்பு

இன்று நடைபெறவிருந்த 2ம் கட்ட பேச்சு தற்போதைய சூழ்நிலை காரணமாக ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் மூலமாக சிறிலங்கா அரசு அறிவித்துள்ளது.

இவ்வாறு 24.10.94 புலிகளின் குரல் வானொலிச் செய்திகளில் தெரிவிக்கப்பட்டன.

ராஜீவ் காந்தி கொல்லப்பட்டபோது புலிகளே காரணம் என்று குற்றம் சாட்டப் பட்டது.

தமக்கும் அதற்கும் தொடர்பில்லை என்றும், ராஜீவ் காந்தி கொலையாளிகளை கண்டறிய இந்திய அரசுக்கு உதவி வழங்க தயாராக இருப்பதாகவும் அப்போது இலண்டனில் இருந்த புலிகளது முக்கியஸ்தர் கிட்டு தெரிவித்திருந்தார்.

அதே சமயம் யாழ்ப்பாணத்தில் 'புலிகளின் குரல்' வானொலியில், பல ஆயிரக்கணக்கான தமிழர்கள் இந்தியப் படையால் கொல்லப்பட்டனர். தமிழ் பெண்கள் கற்பழிக்கப்பட்டனர். ராஜீவ் காந்தியின் உத்தரவு காரணமாக இந்திய இராணுவம் இங்கே வந்தது என்று தெரிவிக்கப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது.

### நினைவூட்டல்

தற்போது புலிகள் அமைப்பிலிருந்து வெளியேற்றப்பட்டுள்ளவர்களில் ஒருவரான புலிகள் இயக்க முன்னாள் முக்கியஸ்தர் யோகி, "ராஜீவ் காந்தி என்ற ஒருவர் கொல்லப்பட்டுவிட்டதாக எல்லோரும் கவலைப்படுகிறார்கள். இங்கே இந்தியப் படை செய்த கொடுமைகளை- மிகப் பெரும் அநியாயங்களைப்பற்றி யாரும் கவலைப்பட வில்லை" என்று பேட்டி ஒன்றில் அப்போது தெரிவித்திருந்தார்.

ராஜீவ் காந்தி, லலித் அத்துலத் முதலி, மற்றும் பிரேமதாசா போன்றோரின் கொலைகளையடுத்து புலிகளின் மீதே சந்தேகம் ஏற்பட்டது.

சில கொலைகளுக்கு புலிகள் உத்தி யோகபூர்வமாக மறுப்பறிக்கை விடுத்தனர்.

அதேசமயம் யாழ்ப்பாணத்தில் புலிக ளின் பிரசார சாதனங்கள் வெளியிட்ட செய்திகளில் கொல்லப்பட்டவர்கள் பற்றிய அனுதாபம் ஏற்படாத வகையில் அவர் களது தவறான நடவடிக்கைகள் பற்றி நினைவூட்டப்பட்டது.

"நாம் சம்பந்தப்படவில்லை, ஆனால் கொல்லப்பட்டவர்கள் நல்லவர்களுமல்ல" என்பதுபோலவே அச் செய்திகள் அமைந் தன. இப்போது காமினி திசாநாயக்கா விவகாரத்திலும் அதையேதான் விடுதலைப் புலிகள் செய்துள்ளனர்.

## தொண்டா முடிவின் பின்னணி!

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் மலையக மக்கள் மனச் சாட்சியின்படி வாக்களிக்க வேண்டும் என்று இ.தொ.கா கூறியுள்ளது.

திரு.தொண்டமானின் சமீபகால பேச்சுக்கள், பேட்டிகள் யாவும் பிரதமர் சந்திரிக்காவை ஆதரிக்கும் கருத்துக் களையே கொண்டிருந்தன.

இ.தொ.கா. ஜனாதிபதித் தேர்தலில் பொதுஜன முன்னணியைத்தான் ஆதரிக் கும் என்றே எதிர்பார்க்கப்பட்டது.

இ.தொ.காவின் புதிய முடிவு திட்ட வட்டமான முடிவை எடுக்க முடியாமல் தடுமாற்றம் அடைந்துள்ள நிலையை பிரதிபலிக்கிறது.

இ.தொ.காவின் பொதுச் செயலாள ரும், திரு.தொண்டமானின் பேரனுமான திரு.ஆறுமுகம் தொண்டமானும் மற்றும் சில பாராளுமன்ற உறுப்பினர்களும் திரு.காமினி திசாநாயக்காவை ஆதரிக்க வேண்டும் என்று விரும்பியதே பொ.ஜ. முன்னணியை ஆதரிக்க முடியாத சூழலை ஏற்படுத்தியதாகக் கூறப்படுகிறது.

திரு.ஆறுமுகம் தொண்டமானது விருப்பத்துக்கு எதிராக செல்லாமலும், பொ.ஜ முன்னணியை பகைத்துக்கொள்ள விரும்பாம லும் இருக்கும் பொருட்டே மக்கள் தமது விருப்பத்தின்படி வாக்களிக்கட்டும் என்ற நிலைப்பாட்டை தொண்டா எடுத்தார் என்று விசயமறிந்த வட்டாரங்கள் கூறுகின்றன.

## தீர்வு முயற்சிகள் தொடர வேண்டும்

### உள்நாட்டு-வெளிநாட்டு ராஜதந்திரிகள் வலியுறுத்தல்

காமினி திசாநாயக்கா உட்பட அரசியல்வாதிகள் பலரும், பொதுமக்களும் அரசியல் கூட்டத்தில் கொல்லப்பட்டதை உள்நாட்டு, வெளிநாட்டு ராஜதந்திரிகள் வன்மையாகக் கண்டித்துள்ளனர்.

இக் கொலை நடவடிக்கை சமாதானப் பாதையில் இலங்கை அரசாங்கமும் மக்களும் கொண்டுள்ள நம்பிக்கையை பாதிக்காது என்று நம்புவதாக அவர்கள் தெரிவித்துள்ளனர்.

பேச்சுவார்த்தை மூலம் இலங்கையின் இனப்பிரச்சனைக்கு தீர்வுகாணும் நடவடிக் கைகளை அரசாங்கம் தொடரும் என்று அவர்கள் நம்பிக்கை தெரிவித்துள்ளனர்.

# காமினி கொலை பேச்சுவார்த்தைக்குத் தடையா?

## புலிகள் உடனடியாகக் கண்டிக்காதது குறித்து கவலை!

(அரசியல் நிருபர்)

காமினி திசாநாயக்கா படு கொலைக்கு புலிகள் காரணமாக இருக்க மாட்டார்கள் என்று கூறுவோர் முன்வைக்கும் காரணங்கள்:

□ பேச்சுவார்த்தை, சமாதானம் என்பவற்றை தமிழ் மக்கள் வரவேற்றுள்ள நிலையில் இவ்வாறான நடவடிக்கை அவர்கள் மத்தியில் விரும்பப்படமாட்டாது.

□ வெளியுலகில் புதிய பிரதமரது சமாதான முயற்சிகள் கவனிக்கப்படுவதால் இந்த நேரத்தில் அதனைக் குழப்பும் விதமாக நடந்துகொள்வது புலிகளுக்கே பாதகம்.

□ காமினிக்கு கட்சிக்குள்ளும் விரோதிகள் இருக்கிறார்கள்.

காமினி கொலைக்கு புலிகள்தான் காரணம் என்று சந்தேகிப்போர் கூறும் காரணங்கள்:

□ பேச்சுவார்த்தை மூலமான தீர்வு பிரபாகரனுக்கு தற்போதைய நிலையைவிட மேலதிகமாக ஒன்றும் வழங்கிவிடாது. இப்போதே அவர் அரசனாகத்தான் இருக்கி றார். மாறாக தீர்வு வருமானால் அவர் கீழே இறங்க வேண்டிவரும்.

அதே சமயம் தமிழ் மக்களும் வெளி யுலகும் பேச்சுவார்த்தை வெற்றி பெறும் என்று நம்புவதால் புலிகளும் ஒத்துழைப்ப தாய் காட்டிக்கொள்கிறார்கள்.

மறுபுறம், தமிழ் மக்கள் தங்களைத்தவிர வேறு எவரிலும் நம்பிக்கை வைப்பதை புலிகள் விரும்புவதில்லை.

குறிப்பாக, தென்னிலங்கை அரசு மீது தமிழ் மக்களுக்கு ஏற்பட்டுள்ள நம்பிக்கை புலிகளுக்கு ஒரு நெருக்கடியாகவே இருக்கிறது.

ஜனாதிபதித் தேர்தலிலும் திருமதி. சந்திரிக்கா வெற்றி பெற்று மேலும் அவர் பலமானால், புலிகள் ஏனைய அரசியல் கட்சிகளும் பங்குகொள்ளும் தீர்வினை ஏற்றுக்கொள்ள வேண்டி வரும்.

எப்படியான தீர்வாக இருந்தாலும் புலிகள் மாத்திரமே யாழ்ப்பாணத்தில் தனித்திருந்து கட்டியாளும் தற்போதைய நிலைக்கு அது ஒப்பாகாது.

எனவே- புதிய அரசை பலவீனப்படுத்தி துரிதமான திட்டவட்டமான தீர்விற்கு வரமுடி யாத இக்கட்டான நிலையை ஏற்படுத்துவது.

அவ்வாறு ஏற்பட்டால் அரசாங்கத்தால் தீர்வுகாண முடியாது என்று கூறலாம். மக்களும் அதை ஏற்பர். புலிகளின் அரசியல் தளம் ஆட்டம் காணாது.

□ யாழ் நூல் நிலைய எரிப்பு விவகாரம் முக்கியமானதாக இருந்தாலும்கூட முன்னர் பிரேமாவோடு நடந்த பேச்சில் புலிகள் ஏன் நூலக எரிப்புப் பற்றிய பிரச்சனையை கிளப்பவில்லை? குறைந்த பட்சம் நூலக புனரமைப்புக் குறித்துக்கூட பேசவில்லை.

இப்போது திடீரென்று நூலக எரிப் பைப் பற்றிப் பேசியதும், விசாரணைக் கமிஷன்கோரியதும், அது பற்றிய செய்தி களுக்கு யாழ்ப்பாணத்தில் புலிகள் முக்கியத் துவம் கொடுத்ததும் காமினி மீதான தமது நடவடிக்கைக்கு மக்களது அதிருப்தி ஏற்படாதவாறு பார்த்துக்கொள்ளும் முன் ஏற்பாடாக இருக்கலாம்.

யாழ் நூலக எரிப்பு பற்றிப் பேசியவர்கள் வெலிக்கடைச் சிறைப் படுகொலைகள், கொக்கட்டிச் சோலை படுகொலையில் சம்பந் தப்பட்டவர்களுக்கு நடவடிக்கை போன்ற மேலும் பல மோசமான நிகழ்வுகள் பற்றி விசாரணை கோரவில்லை என்பதையும் சந்தேகிப்போர் சுட்டிக்காட்டுகின்றனர்.

□ ஐ.தே.கட்சிக்குள் காமினியின் அதிருப்தியாளர் இருக்கிறார்கள். ஆனால் அவர்கள் தற்கொலை தாக்குதல் நடத்து மளவுக்கோ, அல்லது உயிராபத்து ஏற்படுத்தவோ கூடிய பலம் உடையவர்கள் அல்ல.

□ ஜனாதிபதி தேர்தலில் திருமதி. சந்திரிக்காவின் வெற்றி உறுதியாகிவிட்ட நிலையில் அரசாங்கத்தோடோ பொதுஜன முன்னணியோடோ குண்டு வெடிப்பு சம்ப வத்தை முடிச்சுப்போட ஒரு முட்டாள்கூட முனையமாட்டான். குண்டுவெடிப்பால் பொதுஜன முன்னணியும் பாதிப்படைந்தே யுள்ளது.

இவ்வாறு குண்டுவெடிப்புக்கு புலி களே காரணம் என்று கூறுவோர் சந்தே கங்கள் தெரிவிக்கின்றனர்.

பேச்சுவார்த்தை நடைபெறும் சூழ்நிலை யில் குண்டுவெடிப்பு இடம்பெற்றுள்ளது.

புலிகள் குண்டு வெடிப்புக்கு காரண மாக இல்லையென்றால், இந்த நடவடிக் கையை புலிகள் உடனடியாக கண்டித்து அறிக்கை வெளியிட்டிருக்கவேண்டும். பேச்சுவார்த்தையில் உறுதியாக செயற்படும் சந்திரிக்கா அரசாங்கம் சங்கடங்களை எதிர்நோக்குவதை அது தடுத்திருக்கும் என்று அரசியல் பார்வையாளர்கள் கூறுகின்றனர்.

அரச தரப்பினர் புலிகள் மீது ஆதார மில்லாமல் சந்தேகம் ஏற்பட்டுவிடக்கூடாது என்பதில் கவனமாக உள்ளனர்.

ஆனால், புலிகள் அதேயளவு அக்கறை காட்டுவதுபோல் தெரியவில்லையே என்றும் அவர்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

# எழுகிறதா அனுதாப அலை?

## ரணில் ஆதரவாளர்கள் அதிருப்தி!

ஐ.தே.கட்சியின் ஜனாதிபதி வேட் பாளர் காமினி திசாநாயக்கா கொல்லப் பட்டதை அடுத்து, அவரது இடத்திற்கு திரு.ரணில் விக்கிரமசிங்காவை நியமிக்க வேண்டும் என்னும் கருத்தே கட்சிக்குள் நிலவியதாகத் தெரிகிறது.

ஜனாதிபதி வேட்பாளரை தெரிவு செய்யும் ஐ.தே.கட்சிக் கூட்டம் 25.10.94 அன்று நடைபெற்றது.

ஆனால், அதற்கு முன்னரே ஜனாதிபதி டி.பி.விஜேதுங்கா உட்பட கட்சி முக்கியஸ் தர்கள் ரணில் விக்கிரமசிங்கா ஜனாதிபதி வேட்பாளராக வேண்டும் என்று அவரது சம்மதத்தை கோரியதாகவும் அறியப் படுகிறது.

24.10.94 அன்றே கட்சி பிரமுகர்கள் மற்றும் ஆதரவாளர்கள் திரு.ரணிலுக்கு தமது வாழ்த்தை தெரிவித்தும் தமது ஆதரவை தெரிவித்தும் உற்சாகப்படுத் தினார்கள்.

இதே சமயம், காமினி திசாநாயக்கா வின் ஆதரவாளர்கள் காமினியின் பாரியாரே தேர்தலில் போட்டியிட வேண்டும். அதன்மூலமே வாக்காளர்களது அனுதாபத்தை பெறமுடியும் என்று கட்சித் தலைமையிடம் வற்புறுத்தத் தொடங்கி னார்கள்.

25.10.94 அன்று ஐ.தே.கட்சி அலுவலகம் முன் நடந்த ஆர்ப்பாட்டமும் காமினி ஆதரவாளர்களால் முன்கூட்டியே திட்ட மிட்டு நடத்தப்பட்டதாக கூறப்படுகிறது.

திருமதி சிறிமா திசாநாயக்கா மூலமாக அனுதாப வாக்குகளைப் பெறலாம் என்று ஐ.தே.கட்சி கருதுகிறது.

தமிழ்-முஸ்லிம் வாக்காளர்களைப் பொறுத்தவரை திருமதி காமினி திசாநாயக்கா அறிமுகமான ஒருவரல்ல.

எனவே- தமிழ்-முஸ்லிம் மக்களது வாக்குகளை அவர்பெற்றுக்கொள்வது சிரமம் என்றே கருதப்படுகிறது.

சிங்கள மக்கள் மத்தியிலும் அனுதாப அலை பலமாக உள்ளதற்கான அறிகுறிகள் தெரியவில்லை.

திருமதி காமினியை விட திரு.ரணில் வேட்பாளராக நிறுத்தப்பட்டிருந்தால் சாதகம் அதிகம் என்று ஐ.தே.கட்சி முக்கியஸ்தர்கள் சிலர் தெரிவித்தனர்.

எனினும், குண்டு வெடிப்புக்கு முன்னர் இருந்ததைவிட தற்போது போட்டி சற்று கடுமையாகி இருப்பதாகவும், தொடர்ந்து இருதரப்பும் மேற்கொள்ளும் பிரசாரங் களை பொறுத்தே நிலமைகளை கணிப் பிட்டுக் கூறமுடியும் என்றும் அரசியல் பார்வையாளர்கள் தெரிவிக்கின்றனர்.

இதே வேளை ரணிலின் ஆதர வாளர்கள் அதிருப்தி அடைந்து காணப்படு கின்றனர். எதிர்க்கட்சி தலைவர் ஜனாதிபதி வேட்பாளராவதே முறை யாகும். அந்த மரபு மீறப்பட்டுவிட்டது என்கிறார்கள் அவர்கள்.

## திரும்பிவந்தோரை திரும்பிப் பாருங்கள்

(திருமலை நிருபர்)

"அகதிகளாக இந்தியா சென்று 20.09.94ல் தாயகம் திரும்பிய மக்களுக்கு ஏன் இன்றுவரை நிவாரணம் வழங்கப்படவில்லை? இது எமக்கு வழங்கப்பட்ட வாக்குறுதியை மீறுவதோடல்லாமல் எம்மையும் பட்டினி போட்டுக் கொல்வதாகிவிடும்." இவ்வாறு முரசுவிடம் தமது கவலையைத் தெரிவித்தனர், அண்மையில் தாயகம் திரும்பியோர்.

உடனடியாக மீள் குடியேற்றப் பணம் தரப்படும் மாதாந்த உலர் உணவுப் பங்கீ டும் மக்களுக்கு வழங்கப்படும் என்றெல்லாம் கூறி அழைத்து வரப்பட்ட இவர்கள் ஐந்நூறு ரூபாய் பணத்துடன் மட்டுமே வெளியேற் றப்பட்டுள்ளனர். ..

நகரத்தையும் அதனை அண்டியோரும் உடனடியாக வெளியேறிவிட வேண்டும் என்ற அதிகாரிகளின் உத்தரவுக்கிணங்க வெளியேறிய இவர்கள் இருப்பிடங்கள் அற்ற நிலையில் உறவினர்-நண்பர்கள் வீடுகளில் ஒட்டிக் கொண்டு இருக்கின்றனர். சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் பல தடவைகள் கேட்டும் தகுந்த பதிலோ பலனோ கிடைக்கவில்லையாம்.

அடுத்த 75வது முரசில்

வரும் வாரம்

பிரதமர் சந்திரிக்காவின்

அற்புதமான வர்ணப்படம்

முரசின் இணைப்பாக வருகிறது.

உங்கள் ஏஜெண்டுகளிடம் பிரதமரின்

வர்ணப்படத்தையும் கேட்டுப் பெறுங்கள்.

அம்பாறை மாவட்ட ரவுண்டப் செய்திகள்

# நிறைகுறைந்த பாணும் அமைச்சர் அஷ்ரஃப்பும்!

# பசை இழந்த பச்சை அணியும் கட்சிமாறும் பட்சிகளும்!!

### யூ.என்.பி. பாண்!

அம்பாறை மாவட்ட இணைப்புக்குழுக் கூட்டம் அம்பாறைக் கச்சேரியில் நடைபெற்றபோது, திகாமடுள்ள பாராளுமன்ற உறுப்பினர் திரு. சந்திரதாஸ கலப்பத்தி (ஐ.தே.க.) பாண் ஒன்றுடனும், தராசுடனும் வந்து, நிறை குறைந்த பாண் கடைகளில் விற்கப்படுவதை ஆதாரபூர்வமாக நிரூபித்துக் காட்டியதுடன், 3 ரூபா 50 சதத்திற்கு பாண் விற்கும் அரசின் திட்டத்தைச் சாடியும் பேசினார். கூட்டத்திலிருந்த பொ.ஐ.ஐ.மு. பாராளுமன்ற உறுப்பினர் திரு.வீரசிங்க, இதற்குப் பதிலளிக்க முற்பட்டபோது இருவருக்கும் இடையே வாய்த்தர்க்கம் ஏற்பட்டது. நிலமையைச் சமாளிக்க, கூட்டத்திற்குத் தலைமை வகித்த அமைச்சர் அல்ஹாஜ் எம்.எச்.எம். அஷ்ரஃப் "இது ஐ.தே.க. ஆதரவாளரின் பேக்கரியில் தயாரித்த யூ.என்.பி. பாணாக இருக்கலாம்" என்றார். கொல்லென்ற சிரிப்பொலி அங்கு எழுந்தது.

### பி.ஏ. ஆட்சி மட்டுமல்ல!

அம்பாறை மாவட்ட இணைப்புக் குழுக்கூட்டம் நடைபெற்ற போது அங்கு பிரசன்னமாகவிருந்த ஐ.தே.கட்சி எம்.பிக்களான திரு.பீ.தயாரத்ன, திரு.சந்திரதாஸ கலப்பத்தி ஆகியோருக்கும் பொ.ஐ.ஐ. முன்னணி எம்.பி. திரு. எச்.எம்.வீரசிங்கவுக்குமிடையே அடிக்கடி தர்க்கங்கள் ஏற்பட்ட வண்ணமிருந்தன. ஒரு கட்டத்தில் திரு. கலப்பதி எம்.பி.(ஐ.தே.க.),திரு. வீரசிங்கவுடன் தர்க்கிக்கையில் "நடப்பது பி. ஏ. ஆட்சி மட்டுமென்று தலைக்கனம் கொள்ள வேண்டாம். இது முஸ்லிம் காங்கிரசும் சேர்ந்த, அதற்கும் உரிமையான ஆட்சிதான்" என உரத்த குரலில் கூறினார்.

### வெளியேறுவேன்!

அம்பாறை மாவட்ட கரையோரப் பிரதேச தமிழ், முஸ்லிம் கிராமங்களிலுள்ள ஸ்ரீ.ல.சு.கட்சிக் கிளைகளின் பிரதிநிதிகள், அமைப்பாளர்களின் கருத்தரங்கு ஒன்று அண்மையில் கல்முனை இ.கி.மி. வித்தியாலயத்தில் நடைபெற்றது.

"ஆட்சி நமது கைக்கு வந்ததும் நமது அபிலாஷைகள் இப்பிரதேசங்களில் நிறைவுறுவதாக இல்லை. ஸ்ரீ.ல.சு.கட்சி ஆதரவாளர்கள் கைவிடப்பட்ட நிலையில் உள்ளனர்" என்ற கருத்தையே அங்கு பலரும் வெளிப்படுத்தினர். ஆதரவாளர்களின் இந்த மனக் குமுறலைக் கேட்டுக் கொண்டிருந்த ஸ்ரீ.ல.சு. கட்சியின் கிழக்கு மாகாண பிரதம அமைப்பாளரும், முன்னாள் எம்.பியுமான அல்ஹாஜ் ஏ.எம்.சம்சுதீன், ஜனாதிபதித் தேர்தலின் பின் நிலைமை சீராகும் என தமது உரையில் கூறினார். "நேற்று வந்து சேர்ந்தவர்களெல்லாம் அனுபவிக்க, கட்சிக்காரர்களாகிய நாம் சும்மா பார்த்துக்கொண்டிருக்க முடியாது. ஜனாதிபதித் தேர்தலின் பின் நமக்கு விடிவு கிடைக்காவிட்டால் உங்களுடன் சேர்ந்து நானும் கட்சியைவிட்டு வெளியேறுவேன்" என்றும் அவர் கூறினார்.

### ஒரே பாய்ச்சல்

கல்முனைப் பிரதேசத்தில் ஐ.தே.கட்சியின் தீவிர ஆதுரவாளர்களாகத் திகழ்ந்த பலர் தற்பொழுது ஸ்ரீ.ல.சு.கட்சியில் இணைந்து வருகின்றனர். சாய்ந்தமருதுவில் நூற்றுக்கு மேற்பட்ட ஐ.தே.க. ஆதரவாளர்கள், ஸ்ரீ.ல.சு.க.பிரதம அமைப்பாளர் அல்ஹாஜ் ஏ.எம்.சம்சுதீன் முன்னிலையில் இவ்வாறு கட்சி மாறினர். ஸ்ரீ.ல.சு.க. அங்கத்துவப் படிவங்களையும் இவர்கள் பூர்த்தி செய்து சமர்ப்பித்தனர்.

## 55 ஆயிரம் மக்களுக்குரிய வைத்தியசாலையின் குறை!

## உடனே கவனிப்பார்களா கருணையுள்ள உறுப்பினர்கள்?

(ஏறாவூர் நிருபர்)

சுமார் 55 ஆயிரம் பேருக்கு வரமாக அமைந்த செங்கலடி கிராமிய வைத்திய சாலை அத்தியாவசிய வசதிகளின்றி இன்றுவரை காணப்படுகிறது. மட்டக்களப்பு-, பதுளை- கொழும்பு சந்தியைக் கொண்ட கேந்திர முக்கியத்தும் வாய்ந்த செங்கலடிப் பிரதேசம் தற்சமயம் நகரமாக மாறிவருகிறது. எனினும் செங்கலடி வைத்தியசாலை மட்டும் எதுவித முன்னேற்றங்களுமின்றி பழைய நிலையையே பறைசாற்றுகிறது.

மட்டக்களப்பு மாவட்டத்திலேயே மிகக் கூடிய தூரப் பரப்பைக் கொண்ட செங்கலடி பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள இந்த ஆஸ்பத்திரிக்கு 25 மைல் தொலைவிலுள்ள மிக வறிய கிராம மக்களே வைத்திய வசதி நாடி அதிகம் வருகின்றனர். பாம்புக்கடி, மலேரியா, நஞ்சருந்துதல், தொற்றுநோய்கள் மற்றும் அநேக நோய்கள் இப்பிரதேச மக்களைக் கூடுதலாகப் பாதிப்பதுண்டு.

செங்கலடி ஆஸ்பத்திரிக்கு இன்னமும் ஒரு அம்புலன்ஸ் வசதி இல்லை. 10 மைல் தொலைவிலுள்ள மட்டு, வைத்திய சாலைக்கு அபாய நிலையிலுள்ள நோயாளியை எடுத்துச் செல்ல எந்த வசதியுமில்லை. ஏறாவூர் வைத்தியசாலைக்குரிய அம்புலன்ஸ் வசதியையே நாடவேண்டியுள்ளது. துரதிருஷ்ட வசமாக ஏறாவூரில் அம்புலன்ஸ் இல்லாவிடத்து நோயாளியின் பாடு தலைவிதிதான். போதியளவு மருந்து வகைகளும் இல்லை. மருந்து வகைகள் இல்லாதபோது நோயாளிகள் கடைகளில் வாங்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். போதியளவு கட்டில் படுக்கை வசதிகளும் இல்லை. மின் விசிறி வசதிகளும் குறைவு. இருக்கும் ஒருசில மின் விசிறிகள் இயங்குவதுமில்லை. கட்டிட வசதிகளும் போதியதாக இல்லை. அத்துடன் வைத்தியர்களுக்கும் இராக்கடமைக்கு தங்கும் அறைகள், குளியலறைகள், கடமையறைகள் தனியாக இல்லை. இக்குறைகளைப் பாராளுமன்றப் பிரதிநிதிகள் கவனிக்க வேண்டுமென்று இப்பகுதிப் பொதுமக்களும், வைத்தியப் பகுதியினரும் தினமுரசு வாயிலாக வேண்டுகோள் விடுக்கின்றனர்.

## கட்சி மாறும் தோரணம்

இலங்கை அரசியல் பாரம்பரியத்திற்கு இதோ ஓர் உதாரணம். அது, நுவரெலியா மாவட்டத்தின் ஒரு பிரதேச செயலாளர் பிரிவு.

இரண்டு மாதங்களுக்குமுன் ஆடைத் தொழிற்சாலைத் திறப்புவிழா ஒன்று ஏற்பாடாகி இருந்தது. திறப்பு விழாவுக்கு ஜனாதிபதி வர இருந்தார். ஏற்பாடுகள் அமர்க்களம். பிரதேசத்தின் அரச தாபனமொன்றால் பல ஆயிரம் ரூபா செலவில் வரவேற்புத் தோரணம் ஒன்று அமைக்கப் பட்டது. ஆனால் ஜனாதிபதி வராமலே திறப்புவிழா நிறைவுற்றது.

அதையடுத்து பொதுத் தேர்தல் பிரசாரக் கூட்டங்கள் ஆரம்பமாயின. அப்போதைய ஆளுங்கட்சிப் பிரசாரக் கூட்டத்திற்கு அதே வரவேற்புத் தோரணம் பயன்படுத்தப்பட்டது.

தேர்தல் முடிந்தது.

புதிய அரசு வர நுவரெலிய மாவட்ட அமைச்சர் ஒருவருக்கு சென்ற மாத இறுதியில் வரவேற்பு விழா ஏற்பாடானது. அதிலும் அதே 'வரவேற்புத் தோரணம்' செலவில்லா நிறமாற்றத்துடன் அமைச்சரை வரவேற்கக் காத்திருந்தது.

கொடுத்து வைத்த தோரணம்-

இன்னும் எத்தனை பேரை வரவேற்கப் போகிறதோ?

இத்தனைக்கும் அது மக்கள் பணத்தில் கட்டப்பட்ட ஒரு பொக்கிஷமாக்கும்.

இதுதாங்க நம்ம அரசியல்!

குறிஞ்சிக் கிழார்.

## ஆற்றுநீர் அசுத்தமடைகிறது

(அக்குறணை நிருபர்)

அக்குறணையின் பிரதான பாதையினை ஒட்டியோடும் கிளை ஆறு மிகவும் துரிதமாக அசுத்தமடைந்து வருகிறது. பஸாரில் அமைந்திருக்கும் மரக்கறிக் கடைகளினதும் ஆற்றின் அருகே அமைக்கப்பட்டிருக்கும் கோழிக் கடைகளினதும் கழிவுகள் தினமும் ஆற்றோடு கலக்கப்படுவதனால் பொது மக்களின் சுகாதார நிலமைகளுக்கு பெரும் அச்சம் நிலவுகிறது.

பெருந்தொகையான மக்கள் இந்த ஆற்றினிலே வழமையாகக் குளிப்பவர்களாகவும் இன்னும் சிலர் ஆற்றின் மைய, ஓர இடங்களில் சிறு குழி தோண்டி அதில் ஊறும் நீரைப் பருகக்கூடியவர்களாகவும் இருக்கின்றனர். மேற்படி கழிவுகள் தினம் ஆற்றுநீரோடு சேரும் பொழுது அதனை அறியாத பொதுமக்கள் அசுத்தமான நீரையே பாவனைக்காக உபயோகப்படுத்துகின்றனர்.

எனவே இச் சுகாதாரக் கேடு எனும் அபாயத்திலிருந்து பொதுமக்கள் பாதுகாக்கப்பட வேண்டுமாயின் சம்பந்தப்பட்டவர்கள் பொறுப்புணர்வுடன் நடந்துகொள்ள வேண்டுமென்று பொதுமக்கள் தினமுரசினூடாக வேண்டுகோள் விடுக்கின்றனர்.

## சமூக நல்லுறவுக்கும்-புதுவாழ்வுக்கும் முயற்சி!

(ஏறாவூர் நிருபர்)

ஏறாவூர்-ஆறுமுகத்தான் குடியிருப்பு எல்லைப் பகுதியிலிருந்து கடந்த 1990ம் ஆண்டு வன்முறைச் சம்பவத்தின்போது அகதிகளான குடும்பங்கள் தத்தமது பழைய இடங்களில் குடியமர இருக்கிறார்கள்.

தமிழ்-முஸ்லிம் மக்கள் இரண்டறக் கலந்து அந்நியோந்நியமாக வாழ்ந்த இப்பகுதி கடந்த 4 ஆண்டுகளாக வெறிச்சோடிக் கிடந்தது. மீளக் குடியமரவிருக்கும் இக்குடும்பங்களுக்கான விசேட புனர்வாழ்வுத் திட்டமொன்றை நடைமுறைப்படுத்தி இக்குடும்பங்களுக்கு வேண்டிய சகல வசதிகளையும் செய்துகொடுக்கத் திட்டமிட்டிருப்பதாகவும் ஏறாவூர்ப் பற்றுப் பிரதேச செயலாளர் திரு.என்.ஸ்ரீசங்கர் தினமுரசுக்குத் தெரிவித்தார்.

ஏறாவூர்ப் பற்றில் தற்சமயம் நிலவி வரும் சுமுகமான சமூக நல்லுறவினால் இது சாத்தியமாகியுள்ளதெனவும் இதற்கென இப்பகுதி பாதுகாப்புப் பிரிவினரதும், தமிழ்-முஸ்லிம் சமூக நல்லுறவை வளர்ப்போரினரதும் ஆதரவை தான் நாடியிருப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.


விளம்பரப் பகுதி



மலையாள மாந்திரீகம்

27 வருடங்களாக மலையாள மாந்திரீக துறையில் நுணுக்கமாக நான் கற்றறிந்த வகையில் இக்காலங்களில் அவ்வப்போது அவரவர் குறைகளுக்கு என்ன பரிகாரம் என அச்சொட்டாக அவ்வேளைகளிலே மலையாள பகவதி வெளிச்ச வீடாக எனக்கு காட்டிக் கொடுக்கின்றது.

இதையொட்டியே வளர்ந்த எனது நிறுவனம் வரையறுக்கப்பட்ட கம்பனியாக மாறியது. அத்துடன் நவீன உலகத்துக்கு தகுந்தவாறு என்னிடம் மாந்திரீகம், ஜோதிடம், கைரேகை இவைகளுக்கான அதி அற்புத கம்பியூட்டர் உண்டு. உங்கள் குறை என்ன? காதல் தோல்வியா? கல்யாணம் நடக்கவில்லையா? நினைத்தது நினைத்தவாறு நடக்கவேண்டுமா? காதலுக்காக சாவா? வாழ்வா என நினைப்பதை விட்டு என்னை சந்திக்கலாமே.

இவ்வாண்டு மாந்திரீக சக்தியின் வெற்றி பெற்ற ஜபிதா இதோ?

இவ்வாண்டு மலையாள மாந்திரீக காந்த சக்தியும் வெற்றியும்:

நிறைவேறாத காதல் வசியம்- 100/97
கடல் கடந்து செயல் புரியும் காதல் வசியம்- 100/97
கணவன் மனைவி பிணக்கு- 100/45
பெற்றோர் விரும்பாத காதல்-100/87
குத்தகை குடிமிருப்போர் பிரச்சனை-100/33
தீரா ஆஸ்துமா நோய்- 100/100
திருமணத் தங்குதடை நிவர்த்தி-100/97
குடிபோதை நிவர்த்தி- 100/97
கல்வி ஞான விருத்தி- 100/72
சகல வியாபார விருத்தி- 100/83
மீன்பிடி, பண்ணை, ஆடு,மாடு,கோழி வளர்ப்பு- 100/27
புத்திர பாக்கியம்-100/33
பிசாசு தோஷம், சூனிய நிவர்த்தி-100/97

கொழும்பில் மாதந்தோறும் மாதக் கடைசியில் 30,31 திகதிகளில் தான தர்மமும் துர்க்கை உச்சாட பூசை காலை 10 மணிமுதல் மாலை 6 மணிவரை நடைபெறும். அன்று நிச்சயம் உண்மை அறியலாம்.

தலைமைப்பீடம்
P.K.சாமி JDGAN
(மாந்திரீகச் சக்கரவர்த்தி)
சிறீ துர்க்காதேவி ஆலயம்
32, தினச்சந்தை காம்பிளக்ஸ்
நுவரெலியா.
தொலைபேசி: 052-2508, 052-3093

கொழும்பு இல்லம்-
இல: 162,
கொட்டாஞ்சேனை வீதி,
கொட்டாஞ்சேனை.
கொழும்பு-13.
தொலைபேசி: 342463, 342464



ரிஷி அஜமாமிச லேகியம்
(முஸ்லிம் முறைப்படி தயாரிக்கப்பட்டது)



இளமையின் விளைவுகளை அறியாமல் தவறு செய்ததினால் ஏற்படும் இடுப்பு வலி, அசதி, இரத்தக் கொதிப்பு, உஷ்ணம், ஊறல், இருதயத் துடிப்பு, பசியின்மை, திரேக வரட்சி, தூக்கமின்மை, நெஞ்சு நோவு, துடிப்பு, முதுகு வலி, வயிற்று நோவு, உடம்பு, கால் கை வலி, நாட்பட்ட வாய்வு, மறதி, மயக்கம், மூளை பலவீனம், நரம்பு பலவீனம் முதலிய சகல வியாதிகளையும் தீர்த்து, திரேக வலிமையையும் தேஜஸ்சையும் கொடுக்கும். ஒரே பாட்டிலில் குணம் அறியலாம்.

விலை ரூபாய் 175/=,95/=
தங்க பஸ்பம் கலந்தது 975/=
வெள்ளி பஸ்பம் கலந்தது 875/=

ஞான சுந்தர வைத்தியசாலை
187, செட்டியார் தெரு,
கொழும்பு 11,
போன்: 421398


## நம்மவர் பெற்ற விருது



கொழும்பில் கலாசார சமய, அலுவல்கள் அமைச்சும், இந்து சமய கலாசார திணைக்களமும் சமீபத்தில் தமிழ் அரங்கியலும், மரபும் மாற்றங்களும்' தொடர்பான மூன்று நாள் கருத்தரங்கை நடாத்தியது. அக் கருத்தரங்கில் தினமுரசின் உதவியாசிரியர் திரு.இரா.பத்மநாதன் அவர்களுக்கு தொடர்பியல் துறையில் 'கலைமணி' விருது வழங்கி கௌரவிக்கப்பட்டது. வெளிநாட்டமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் 'கலைமணி' விருதை வழங்கிக் கௌரவிக்கிறார்.


நேரடியாக முரசு கரம் சேர இதோ ஒரு வாய்ப்பு!

தினமுரசு உள்ளூர் சந்தா விபரம்:

| | |
|---|---|
| ஒரு வருடத்திற்கு ரூபா 440/= | (52 வாரங்கள்) |
| ஆறு மாதங்கள் ரூபா 225/= | (26 வாரங்கள்) |
| மூன்று மாதங்கள் ரூபா 115/= | (13 வாரங்கள்) |

சந்தாதாரராக விரும்புவோர் தங்களது சுயமுகவரியிட்ட கடிதமூலம் தொடர்பு கொள்ளவும். சந்தாப்படிவம் எம்மால் அனுப்பிவைக்கப்படும்.

தினமுரசு வாரமலர் THINAMURASU VAARAMALAR
த.பெ.இல:1772 P.O.BOX: 1772
கொழும்பு COLOMBO

என்ற முகவரிக்கு கடிதங்களை அனுப்பிவைக்கும்படி கேட்டுக் கொள்கிறோம்.



## பெயர் மாற்றம் பற்றிய அறிவித்தல்

சாய்ந்தமருது-03, ஜமாகிரியா வீதி, 613ஆம் இலக்கத்தில் வசிக்கும் மீராமுகிதீன் ஹவசியா ஆகிய நான் 1994.05.01 ஆம் திகதியில் இருந்து எனது பெயரை மீராமொகிதீன் ஹாலிதா ஷிரீன் என மாற்றம் செய்துள்ளேன். இதன் பின்னர் எனது பெயர் மீராமுகிதீன் ஹாலிதா ஷிரீன் என அழைக்கப்படும் என்பதை இத்தால் இலங்கை அரசாங்கத்துக்கும், பொதுமக்களுக்கும் அறியத் தருகிறேன்.

இவ்வண்ணம்,
1994.10.10ஆம் திகதி மீ.மு.ஹாலிதா ஷிரீன்.



முரசுடனான சகல தொடர்புகளுக்கும்-
தினமுரசு வாரமலர்
த.பெ.இல.1772
கொழும்பு.
என்ற முகவரியைக் குறிப்பிடவும்.
பதிவுத் தபால்கள் எக்காரணம் கொண்டும் ஏற்கப்படமாட்டா. அனுப்பப்படும் ஆக்கங்கள் எவையும் திருப்பி அனுப்பப்படமாட்டா.

www.padippakam.com

நன்றி - நூலகத்திட்டம்

# "புலிகள் ஜனநாயக வழிக்கு வருவது ஒரு கனவு"



# "இனப்பிரச்சனைக்கு தீர்வு அதிகாரமுள்ள மாகாணசபை"

## காமினி திசாநாயக்காவின் இறுதிப் பேட்டி

கொழும்பு குண்டு வெடிப்பில் கொல்லப்படுவதற்கு மூன்று நாட்களுக்கு முன்னர் எதிர்க்கட்சித் தலைவரும், ஐ.தே.கட்சியின் ஜனாதிபதி வேட்பாளருமான காமினி திசாநாயக்கா முரசிற்கு பேட்டியளித்தார். கொழும்பு கொள்ளுப்பிட்டியிலுள்ள தனது இல்லத்தில் அவர் வழங்கிய பேட்டியின்போது அவரது பாரியாரும் கூட இருந்தார். ஐ.தே.கட்சி துணைச் செயலாளர் டாக்டர் ஜெயலத் ஜெயவர்த்தனவும் அங்கிருந்தார். சுமார் 45 நிமிடங்கள் காமினி மனம் திறந்து பேசினார். பத்திரிகைகளுக்கான அவரது சடைசிப் பேட்டி இதுவாக இருக்கும் என்று நினைக்கிறோம். அவரது பேட்டியின் முக்கிய பகுதிகள் இவை. பேட்டி முழுவதும் ஒலிப்பதிவு நாடாவிலும் பதிவில் உள்ளது.

**கேள்வி: யாழ்ப்பாணம் நூல் நிலைய தீவைப்புச் சம்பவத்தில் நீங்களும் தொடர்பு பட்டிருந்த தாக வடக்கு-கிழக்கு வாழ் தமிழ் பேசும் மக்களில் சிலர் பேசிக்கொள்கிறார்களே! அதுபற்றி தங்களின் பதில் என்ன?**

**பதில்:** இது பிழையான அபிப்பிராய மாகும். இந்த நூல் நிலையம் எரிக்கப் பட்ட தினம் நான் யாழ்ப்பாணத்தில் இருக்கவே இல்லை! அன்றைய தினம் நான் கொழும்பில் உலக வங்கிப் பிரதிநிதிகளுடனும் வெளி நாட்டுப் பிரதிநிதிகளுடனும் பேச்சுவார்த்தை யில் ஈடுபட்டிருந்தேன்.

இச் சம்பவம் ஏற்பட்ட பின்பு யாழ்ப்பா ணத்தில் நடந்த மாவட்ட சபைத் தேர்தலின்போதே நான் யாழ்ப்பாணம் சென்றிருந்தேனே தவிர யாழ் நூல் நிலையம் எரிக்கப்பட்ட தருணம் நான் அங்கிருக்கவில்லை. அத் தருணம் நான் அங்கிருந்திருந்தால் எனது உயிரைக்கூட மதியாது அந் நூல் நிலையத்தை பாதுகாப்பதற்கு என்னால் முடிந்தவற்றை செய்திருப்பேன்.

இந்த நூல் நிலைய எரிப்பு சம்பவத்தை பற்றிய விபரங்கள் அடங்கிய ஆவணங் கள் சமீபத்தில் எனக்கு கிடைக்கப் பெற்றுள்ளன. அதன்படி அந் நூல் நிலைய எரிப்பு சம்பவத்தில் யார் ஈடுபட்டனர்- ஏன் அதைச் செய்தனர் என்பன போன்ற விபரங்களை தெரிந்துகொள்ளக் கூடியதாக அவ் ஆவணம் அமைந்துள்ளது. இந்த யாழ் நூல் நிலைய எரிப்பு நடந்த காலப் பகுதியில் சட்டம் ஒழுங்குகள் சீர் குலைந்து பொலிசாரும், பொதுமக்கள் சிலரும் கொல்லப்பட்ட சம்பவங்களும் தீ வைப்பு சம்பவங்களும் சரளமாக இடம்பெற்ற வண்ணம் நிகழ்ந்து கொண்டிருக்கக் காணப்பட்டது. இந்தச் சூழ்நிலையில் அரசாங்கம் நடத்தத் திட்டமிட்டிருந்த யாழ்ப்பாண மாவட்ட சபைத் தேர்தலை தள்ளி வைக்கும்படி சில தமிழ் தரப்பு பகுதியிலிருந்தும் கோரிக்கைகள் விடப்பட்டு வந்தன. ஒரு தருணம் இது குறித்து தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணியினர் அன்றைய ஜனாதிபதி திரு.ஜே.ஆர். ஜயவர்த்தனாவை சந்தித்து பேசிய போது, திரு ஜயவர்த்தனா அவர்கள், தான் இந்த குழப்பச் சக்திகளுக்கு அடிபணியப் போவதில்லையென்றும் திட்டமிட்டபடி மாவட்ட சபைத் தேர்தலை நடத்தியே தீருவேன் என்றும் கூறி தேர்தலை நடத்துவதற்கான தனது முடிவில் உறுதியாக நின்று செயல்பட்டு வந்தார்.

இந்தக் காலப்பகுதியிலேதான் ஐக்கிய தேசியக் கட்சி சார்பாக அத்தேர்தலிலே போட்டியிட இருந்த திரு.தியாகராசா வும் அவருடன் இணைந்த இன்னு மொரு வேட்பாளரும் சுட்டுக் கொல்லப் பட்டிருந்தனர். இவற்றையடுத்து தேர்தல் பணிக்காக நியமிக்கப்பட்ட உத்தியோகத்தர்கள்கூட யாழ்ப்பாணம் செல்வதற்கு அச்சம் தெரிவித்திருந் தனர். இவ்வாறான சூழ்நிலையிலே தான் தேர்தல் பிரச்சாரப் பணிக்காக அப்போது எனது தலைமையின் கீழ் இயங்கி வந்த தோட்டத் தொழிலாளர் சங்க நிர்வாக உறுப்பினர்களுடன் யாழ்ப்பாணம் செல்லும்படி கட்சியின் தலைவர் என்ற முறையில் திரு.ஜே.ஆர். ஜயவர்த்தனா என்னைப் பணித் திருந்தார்.

இதற்கமைய நானும் எமது தோட்டத் தொழிலாளர் சங்க நிர்வாக உறுப்பி னர்களும் தமிழ் பேச்சுக்கள் அடங்கிய ஒலிப்பதிவு நாடாக்கள் பலவற்றுடன் யாழ்ப்பாணம் சென்றிருந்தோம். நானும் எனது தொழிற்சங்க உறுப்பினர்களும் யாழ் சென்றிறங்கியபோது யாழ் நூல் நிலையத்தின் அவல நிலையை காண முடிந்தது. யார் இந்தத் தீ வைப்புச் சம்பவத்தை செய்திருந்தாலும் அவர்களை நான் மடையர் என்றே குறிப்பிடுவேன். இவ்வாறான நூல் நிலையம் ஒன்றுக்குத் தீ வைப்பதன் மூலம் அவர்கள் என்னத்தை சாதிக்க முடியும் என்று நினைத்தார்களோ தெரியவில்லை! இது மிகத் துயரமான சம்பவமாகும். இது குறித்து மேலும் விளங்கிக் கொள்ளவேண்டு மாயின் இச்சம்பவம் தொடர்பாக நடத்தப் பட்ட விசாரணை அறிக்கையையும் அக் காலப்பகுதியில் கடமையாற்றிய உத்தியோ கத்தர்களின் வாக்கு மூலங்களையும் சம்பந்தப்பட்ட ஏனைய ஆவணங்களையும் ஆராய்ந்து பார்க்கும் பட்சத்தில் இச் சம்பவத்துடன் தொடர்புபட்டவர்கள் யார் என்பதை இலகுவாக புரிந்துகொள்ளலாம். இவற்றை இன்றும்கூட மேற்கொள்ள முடியும்.

**கேள்வி: அப்படியானால்... அன்றைய அரசாங்கம் இந்த நூல் எரிப்பு சம்பவம் குறித்து ஒரு விசாரணை ஆணைக்குழுவை நியமிக்கவோ? அல்லது குற்றவாளிகளை கண்டுபிடிக்கவோ முயற்சிக்காததன் காரணம் என்ன என்று கூறுகிறீர்கள்?**

**பதில்:** இச்சம்பவத்தில் ஈடுபட்டவர்களை அறிந்துகொள்ள ஆணைக்குழுதான் அவசியமென்றில்லை. அன்றைய ஜனாதிபதி திரு.ஜே.ஆர்.ஜயவர்த்தனா பாதுகாப்பு அமைச்சர் என்ற முறையில் இந்தச் சம்பவத்தில் ஈடுபட்டவர்கள் யார் என்பதை விளங்கிக் கொண்டிருந்தார். அக் காலப்பகுதியில் இராணுவம் மற்றும் பொலிஸ் துறையில் அமுல் நடத்தப்பட்டு வந்த கட்டுப்பாடு- ஒழுங்கு விதிகளுக்கு எதிராக செயல்பட்டுவந்த சிலரே இந்தச் சம்வத்தின் காரணகர்த்தாக்களாவார்கள்.

இதே சமயம் மறு புறத்தில் பொலிசார்கள் கொல்லப்படுகின்றனர்; அரச உடமைகள் தாக்கப்படுகின்றன, சிவில் கிளர்ச்சிகள் நடைபெறுகின்றன, எதிரணி வேட்பா ளர்கள் கொல்லப்படுகின்றனர். இவ்வா றான சூழ்நிலையில் ஜனாதிபதி அவர்கள் அப்போதய நிலையில் ஒரு பக்கத்தை மாத்திரம் அல்ல இரு பக்கங்களையும் சிந்திக்கவேண்டியவராக இருந்தார். இந்த இரு பக்க பிரச்சனையையும் புரிந்துகொண்டி ருந்த ஜனாதிபதி அன்று நிலவி வந்த பாதகமான சூழ்நிலையில் இருபக்கப் பிரச்சனையில் எதையும் கிளறிக்கொள்ள விரும்பாதிருந்திருக்கக்கூடும்.

இருந்தும் இந்த நூல்நிலைய எரிப்பு பிரச்சனை குறித்து ஜனாதிபதி மறைந்த தலைவர் அமிர்தலிங்கத்துடன் தொடர்பு கொண்டு கலந்துரையாடியதோடு அதை புனரமைப்பது தொடர்பான் பேச்சு வார்த்தை ஒன்றையும் கொழும்பு கோல்பேஸ் விடுதியில் ஒழுங்கு செய்தி ருந்தார். இப்பேச்சுவார்த்தைக்கு தமிழர் விடுதலைக் கூட்டணியினர் அனைவரும் அழைக்கப்பட்டிருந்ததோடு இந்த நூல் நிலைய நிர்மாணப் பணிக்கு (நிதி சேகரிப்பு பணியில் ஈடுபட்டிருந்த) யாழ்ப்பாண பிரமுகர்கள் நூறுபேர்கள் வரை பங்குபற்றியிருந்தனர். அக்கூட்டத்திற்கு நானும் அழைக்கப்பட்டிருந்தேன். அங்கே நூல் நிலையப் பிரச்சனையே முழுமையாக ஆராயப்பட்டது. இவ்வாறான புரிந்துணர் வின் அடிப்படையிலேயே யாழ் நூல் நிலையப் பிரச்சனை கையாளப்பட்டு வந்தது. இதன்பின்பு அங்கு நிலவிவந்த அமைதியின்மையின் காரணமாக இவற் றின் பெறுபேறுகளை அடையமுடியாது போயிற்று.

**கேள்வி: நிறைவேற்று ஜனாதிபதி நிர்வாக முறையை விமர்சித்த நீங்கள் ஏன் நிறைவேற்று ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுகிறீர்கள்?**

**பதில்:** நமது நாட்டிற்கு ஜனாதிபதி முறை கூடாதென்று நான் கூறவில்லை. அப்பதவியுடன் இணைக்கப்பட்டுள்ள அதிகாரம் குறித்தே பிரச்சனைகள் மேலோங்கியுள்ளன. எவ்வளவுதான் நல்ல மனிதராக இருந்தாலும்கூட அவர் தன்னிடம் அளவுக்கதிகமான அதிகாரங்கள் குவிக்கப்படும் பொழுது அவரின் தனிக் கருத்தே சரியானதென நிலைநிறுத்த முற்படுவது இயல்பானதாகும். தனி மனித அதிகாரப் பெருக்கத்தின் நிமித்தமே இன்று மூன்றாம் உலக நாடுகளில் பெரும்பாலா னவற்றில் அரசியல் இழுபறிகள் நிலவி வருவதை நாம் அவதானிக்க முடிகிறது. நாட்டின் ஜனாதிபதி முறையை மக்கள் எற்றுக்கொள்ளும் வண்ணமும், ஜனாதிபதி நிர்வாக அலகுகள் மாத்திர மன்றி ஏனைய நிர்வாகக் கூறுகளும் சட்ட வலிமை பெற்றிருப்பது அவசியமாகும். எமது உத்தேச மாற்றங்களை நடைமுறைப் படுத்துவதற்கு இத் தேர்தலில் பங்கு கொள்வது அவசியமென முடிவு செய்யப் பட்டுள்ளது.

**கேள்வி: நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலில் நீங்கள் வெற்றி பெறும் பட்சத்தில் எவ்வாறான நிர்வாக மாற்றத்தை செய்வதற்கு உத்தேசித்துள்ளீர்கள் என்று கூறமுடியுமா?**

**பதில்:** நான் இங்கே குறிப்பிட்டிருந்ததைப் போல் தெரிவுக் குழுவின் சிபாரிசுகளுக் கமையவும் சகல தரப்பு மக்களின் கருத்துக்களையும் கலந்தாலோசித்து, குறிப்பாக சிறுபான்மை மக்களின் கருத்துக் களையும் அறிந்து இந் நாட்டு மக்கள் எவ்வாறான அரசியலமைப்பை விரும்பு கிறார்களோ அவற்றிற்கு இசைவான அரசியலமைப்பை உருவாக்குவதே எமது நோக்கமாகும்.

இவ்வாறு உருவாக்கப்படும் அரசியல மைப்பு சக்திமிக்கதாகவும்- அனைத்து அரசியல் பிரச்சனைகளிலும் தயக்கமின்றி செயலாற்றக்கூடிய வலிமையைக் கொண்டதாகவும் அமையப்பெறும் என்று நம்புகிறோம். இப்போது இருந்து வரும் அரசியல் அமைப்பின் பலவீனத்தின் நிமித்தமே நிறைவேற்றப்பட்டுள்ள சட்ட மூலங்களை நடைமுறைப்படுத்த முடியாத நிலைமை இருந்து வருகிறது.

இதற்கு உதாரணமாக இலங்கை-இந்திய உடன்படிக்கை மூலம் உருவான ஏற்பாட் டைக் கூறலாம். பெரியதொரு தேசிய பிரச்சனை தொடர்பாக மேற்கொண்டு சட்டமாக்கப்பட்டிருந்த அவ் ஏற்பாடுகள் சில தனிமனிதர்களின் கருத்துக்களுக்கு செவி சாய்த்து கைவிடப்பட்ட சம்பவங் களை நாம் இங்கே காண முடிந்தது.

பல மக்களின் எதிர்ப்புக்கு மத்தியிலும் கன்டலம் உல்லாச விடுதியை அமைப்ப தற்கு அரசு தனது சக்தியைப் பிரயோகப் படுத்தி அமுல் நடத்தியதையும் நாம் காண முடிந்தது.

எனவே - இவற்றைப் போலில்லாமல் எனக்கு கிடைக்கப்பெறும் சக்திகளை நான் நல்லவற்றையும், நேர்மை யானவைகளை யும் நடைமுறைப்படுத்துவதற்கு பயன் படுத்துவதே எனது நோக்கமாகும். நான் உத்தேசிக்கும் அரசியலமைப்பு மூலம் உருவாகும் அரசாங்க நிருவாகம் சக்தி மிக்கவையாகவும் ஜன நாயக ரீதியாகவும் வெளிப்படையாகவும் இயங்குவதையே நான் விரும்புகிறேன். சிறுபான்மை மக்களின் பிரச்சனையிலும் கூட தனி மனிதர்களின் கருத்துகளுக்கு இடமளிக் காது தளர்ந்தும் விடாமல். பொதுவாக முடிவு செய்யும் சரியான தீர்மானங்கள் வலுவாக நடைமுறைப்படுத்தப்பட வேண்டுமென்பதே எனது கருத்தாகும்.

**கேள்வி: இன்றைய பொதுசன முன்னணி அரசாங்கத்தை பற்றியும் அதன் பிரதமரான திருமதி சந்திரிக்கா குமாரணதுங்கா அவர்களைப் பற்றியும் தங்களின் அபிப்பிராயத்தை கூறமுடியுமா?**

**பதில்:** பொதுசன முன்னணி அரசாங்கம் ஒரு அனுபவமற்ற அமைப்பாகும். அவர்களின் கண்டனங்களில் அர்த்தங்க ளையோ அரசியல் நெறிகளையோ காண முடியாதுள்ளது. பல்வேறு வகையான கொள்கை கோட்பாடுகளைக் கொண்ட பலர் ஒரே ஒரு நோக்கத்தை கொண்டே ஒன்றுகூடியுள்ளனர். ஒரு நோக்கத்தின் நிமித்தம் ஒன்று கூடிய இவர்களால் பரந்த நோக்கோடு செயல்பட முடியாது. தவிரவும் கூட்டு அரசு ஒன்று நீண்டகாலம் நிலைத்திருக்க முடியாது.

அவர்களின் கூட்டமைப்பில் வெவ்வே றான கொள்கைகளைக்கொண்ட திரு சந்திரசேகரன், திரு அஷ்ரப், ஈழ வாதத்தை ஆதரிக்கும் திரு.வாசுதேவ, ஈழ வாதத்திற்கு எதிரான சிங்கள தீவிரவாதிகள், கம்யூனிசக் கட்சி, சமசமாஜக் கட்சியினர், திரு. அத்துலத் முதலியின் அனுதாபிகள் என்று பல வேறு பிரிவினர் இடம்பெற் றிருக்கின்றனர். இவ் அத்தனை பிரிவினரும் ஒரு நோக்கத்தில் நின்று செயல்படுவ தென்பது மிகச் சிரமமான காரியமாகும். இவ்விதம் அமையப்பெற்றுள்ள கூட்டு அரசாங்கத்தினால் மக்களின் பிரச்சனை களுக்கு நிரந்தரத் தீர்வு கிடைக்கப்பெறும் என்று எதிர்பார்க்க முடியாது.

திருமதி சந்திரிக்காவை பொறுத்து கூறுவதானால் இவ்வாறுதான் குறிப்பிட முடியும்: திருமதி சந்திரிக்கா எனக்கு மிக அறிமுகமானவர், அவர் தனதுதரப்பு வெற்றிக்காக திட்டமிட்டு செயற்பட்டு தனது திறமையை வெளிப்படுத்தியுள்ளார். அவரும் நானும் வெவ்வேறான அரசியல் நிலைப்பாடுகளை கொண்டிருந்தாலும்கூட எம்மிடையே உள்ள நட்புறவு தொடர்ந்தும் நிலவி வருகிறது.

**கேள்வி: வடக்கு-கிழக்கு மாகாணங்களில் தற்போது நிலவி வரும் அரசியல் நிலைகளைப் பற்றியும் தற்போது மேற்கொள்ளப்பட்டுவரும் சமாதான முயற்சிகளைப் பற்றியும் தங்களின் அபிப்பிராயம் என்ன?**

**பதில்:** வடக்கு-கிழக்கு என்று நீங்கள் குறிப்பிட்டதில் கிழக்கு என்ற வார்த்தையை நீக்கிக்கொள்ளுதல் வேண்டும். ஏனென்றால் கிழக்கு மாகாண அரசியல் சூழ்நிலைகள் பெரும்பாலும் வழமைக்கு திரும்பி யுள்ளன. எனவே, நாம் இப்போது வடக்கு மாகாண நிலைமை பற்றி உரையாடுவோம்.

வடக்கிலே மீண்டும் சமாதானத்தையும் ஜனநாயகத்தையும் ஏற்படுத்தப் போவதாக பொதுசன முன்னணியினர் கூறி வருகின்றனர். இவர்களின் இவ் உத்தேசம் நிறைவேற வேண்டுமானால் வடக்கே சென்று புலிகளுடன் பேச வேண்டும். அவ்வாறான பேச்சு வார்த்தை ஒன்று நடக்கும் பட்சத்தில் புலிகள் தமது ஆதிக்கத்தைப் பற்றிய கருத்துக்களை மாத்திரமே வலியுறுத்தி கூறுவார்கள்.

இவ்வாறான நிலைப்பாட்டைக்கொண் டுள்ள புலிகளுடன் கலந்துரையாடி அவர்களின் நிலைப்பாடுகளை மாற்றி வடக்கிலே மீண்டும் ஜனநாயகத்தை ஏற்படுத்தலாமென பொதுசன முன் னணியினர் நினைத்தால் அது ஒரு வெறும் கற்பனைக் கனவாகும்.

இலங்கை-இந்திய ஒப்பந்தத்தைகூட புலிகள் எதிர்த்தமைக்கு, அந்த ஒப்பந் தம் ஏனைய அரசியல் அமைப்புகளுக் கும் இடமளித்திருந்ததன் நிமித்தம் தமக்கு அவை பாதகமாக அமையலாம் என்று நினைத்ததன் காரணமாக இருக்கக்கூடும்.

இலங்கை முழுவதிலும் சமாதானம் நிலவ வேண்டும் என்று மக்கள் அனைவரும் விரும்புகிறார்கள். ஏனைய மாகாணங்கள் அனைத்திலும் ஜனநாயகம் நிலவும் போது வடக்கில் மாத்திரம் பாசிஸ வாதம் இருக்க முடியாது. தமிழ் ஈழம் என்ற ரீதியில் சிந்தித்து பார்த்தாலும்கூட தற்போது வடக்கிலே நிலவிவரும் சூழ்நிலையில் புலிகள் மாத்திரமே அங்கு நிலைத்திருந்து வருகின்றனர். இவர்கள் எந்தக் கட்சியையும் அங்கு வேரூன்ற அனுமதிக்கப் போவதில்லை.

இவ்வாறான சிக்கலான பிரச்சனைகள் நிறைந்த வடக்கிலே திருமதி சந்திரிக்கா அம்மையாரால் எப்படி சமாதானத்தை யும் ஜனநாயகத்தையும் ஏற்படுத்த முடியும்? எனவே திருமதி சந்திரிக்கா வும் பொதுசன முன்னணி உறுப் பினர்களும் சென்று திரு.பிரபாகரனின் மனதை மாற்றுவதற்கு முயற்சிக்கும் படி கேட்டுக்கொள்கிறேன். அவர் களின் முயற்சி பலனளிக்குமானால் நானும் அங்கு சென்று அவர்களுக்கு வாழ்த்துக்கூற சித்தமாக இருக்கிறேன்.

**கேள்வி: வடக்கு-கிழக்கு இனப்பிரச்ச னைக்கு தீர்வாக தங்களின் பதவிக் காலத்தில் அறிமுகப்படுத்தப்பட்டிருந்த மாகாண சபை நிர்வாக முறை போதுமானதென்று கருதுகிறீர்களா? அல்லது வேறேதும் நிர்வாக முறையை சிபார்சு செய்வதற்கு விரும்புகிறீர்களா?**


**பதில்:** நிர்வாகம் எனப்படும்பொழுது இரண்டு வகையான நிர்வாக முறை களே இருக்கப் பெறுகின்றன. ஒன்று அதிகாரங்கள் ஒருங்கிணைக்கப்பட்ட மத்திய நிர்வாகம். அடுத்தது அதிகாரம் பரவலாக்கப்பட்ட இணைந்த நிர்வாக மாகும்.

இணைந்த நிர்வாகம் எனக் கூறப் படும்பொழுது, ஒன்றில் அது மாகாண மட்டத்தில் அமையப்பெறும் மாகாண சபை நிர்வாகமாகும். அல்லது சமஷ்டி முறை நிர்வாகமாக அமையப் பெறும். இங்கே நிர்வாக அலகுகளைப் பொறுத் தல்ல, அதிகாரம் குறித்தே பிரச்சனை கள் தோன்றியுள்ளன.

எனவே இங்கு நிலவும் இனப்பிரச்ச னைக்கு தீர்வாக அமுல் நடத்தப்பட்ட மாகாண சபை முறையை நடைமுறைப் படுத்தலாம். முன்பும் இந்த மாகாண சபை குறித்து பிரச்சனை தோன்ற வில்லை. ஆனால் அதிகாரம் குறித்தே பிரச்சனைகள் தோன்றியிருந்தன. எனவே இனப்பிரச்சனைக்கான தீர்வின் துவக்கமாக முடிவு செய்யப்பட்டிருந்த அனைத்து அதிகாரங்களுடன்கூடிய இம் மாகாணசபை அமைப்பு முறையை அமுல் நடத்தலாம். அந்த அதிகா ரங்கள் அனைத்தும் கிடைக்கப்பெறும் பட்சத்தில் அம் மக்களுக்கு விருப்பமான மாகாண அரசொன்றை ஏற்படுத்தி அவர்களின் நிர்வாகத்தை அவர்களே நடத்திக்கொள்ள ,, வாய்ப்புக்கள் ஏற்படுகின்றன.

எனவே இனப்பிரச்சனைக்கான தீர்வில் இந்த மாகாண சபை அமைப்பு முறையை நல்லதொரு ஆரம்பமாகவும் அப்பயணத்தின் துவக்க சந்தியாகவும் எண்ணி இதிலிருந்தே அப் பயணத்தை தொடரலாம் என்பதே எனது கருத்தாகும். ●

### நூலக எரிப்பு



"யாழ் நூல் நிலையம் எரிக்கப்பட்ட தருணம் நான் அங்கிருக்கவில்லை..... நூல் நிலைய எரிப்பு சம்பந்தப்பட்ட ஆவணங்கள் சமீபத்தில் எனக்குக் கிடைத்துள்ளன."

### பேச்சுவார்த்தை



"புலிகளுடன் கலந்துரையாடி அவர்களின் நிலைப்பாட்டை மாற்றி, வடக்கிலே ஜனநாயகத்தை ஏற்படுத்தலாமென்பது வெறும் கற்பனைக் கனவாகும்."

### பிரதமர் பற்றி

"திட்டமிட்டு செயற்பட்டு தனது திறமையை வெளிப்படுத்தியுள்ளார். அவரும்-நானும் வெவ்வேறான அரசியல் நிலைப்பாட்டை கொண்டிருந்தாலும் எம்மிடையே உள்ள நட்புறவு தொடர்கிறது."

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்

# ஆட்சிமாறினாலும் தொடரும் ஒரே காட்சிகள்!

கடந்த இரண்டரை மாதமாக இலங்கையின் வெகுஜனத் தொடர்பு சாதனங்கள் சமாதானம் மலரும் நம்பிக்கைகளை வெளியிட்டுவந்தன.

கடந்த 24ம் திகதி அதிகாலையில் கொழும்பு பாலத்துறையில் வெடித்த சக்திமிக்க குண்டு அதே தொடர்பு சாதனங்கள் இரங்கல் இசையையும், பத்திரிகைகள் கறுப்புக் கட்டம் போட்ட அதிர்ச்சி செய்தியையும் வெளியிட வைத்துவிட்டன.

மிக அதிகமாக அதிர்ச்சியடைந்தது அரசாங்கம்தான்.

மிகச் சுலபமான ஜனாதிபதி தேர்தல் வெற்றியை எதிர்பார்த்திருந்த பொது ஜன முன்னணிக்கு பாலத்துறை குண்டு வெடிப்பை விட வேறு எதுவும் இத்தனை பேரதிர்ச்சியை ஏற்படுத்தியிருக்காது.

விடிந்தால் யாழ்ப்பாணம் செல்லும் பரபரப்புடன் தூங்கச் சென்ற அரச பிரதிநிதிகள் குழுவில் உள்ளவர்களை அதிகாலையில் எழுப்பி செய்தியை சொன்ன போது அவர்களால் தம் காதுகளையே நம்ப முடியாதிருந்திருக்கலாம்.

தேர்தலில் சுலபமான வெற்றி குறித்த நம்பிக்கை, பேச்சுவார்த்தை பற்றிய நம்பிக்கை இரண்டிலுமே பாரிய தாக்கம் ஏற்பட்டுள்ளது.

நாட்டின் குறிப்பிட்ட சில பகுதிகளைத் தவிர நீக்கப்பட்டிருந்த அவசர காலச் சட்டம் மீண்டும் தான் விட்டுச் சென்ற இடத்தில் வந்து அமர்ந்துவிட்டது.

புதிய அரசாங்கத்தின் சாதனைகளில் ஒன்றாக இருந்த அவசரகால சட்ட நீக்கம் மீண்டும் கொண்டுவரப்பட்டது அரசுக்கு பிடித்தமான விஷயமல்ல. ஆனாலும் விருப்பத்தை வெளியே உள்ள சூழ்நிலை பணியவைத்துவிட்டது.

அவசரகால சட்டம் இல்லாமல் இனிமேல் எந்த அரசாங்கமும் ஆட்சி நடத்த முடியாது என்பது போன்ற நிலவரம் விரும்பக்கூடியதல்ல. ஆனால் வேறு வழியுமில்லை என்றாகிவிட்டது.

அரசியலில் வன்முறை-அரசியல் தலைவர்கள் படுகொலைகள் என்பவை கடந்தகால ஆட்சியின் மோசமான சாதனைகள் என்று பொது ஜன முன்னணியால் கூறப்பட்டன.

தேர்தல் பிரசார மேடையில் வைத்து லலித் அத்துலத் முதலி கொல்லப்பட்டபோது அன்றைய அரசின் இயலாமை பற்றிய குற்றச்சாட்டுக்கள் பரவலாக எழுந்தன.

அப்போது பிரேமதாசா உயிரோடு இருந்தமையால் கொலைக்கு காரணம் யார் என்றும் பொறுமையான சிந்தனைக்கு பொதுஜன முன்னணி இடமளிக்கவில்லை.

பிரேமாவே காரணம் என்று ஒரு புயல் வேகப் பிரச்சாரத்தில் பொதுஜன முன்னணி வட்டாரங்களே ஈடுபட்டிருந்தன.

தற்போது பலியாகியுள்ள அமரர் காமினி திசாநாயக்காவும் அந்த பிரசாரத்தில் முன்னணியில் இருந்தார் என்பதும் மறக்கமுடியாத விஷயம்.

இன்னொரு விஷயமும் பொதுஜன முன்னணியால் அப்போது சுட்டிக் காட்டப்பட்டது.

பிரேமா-புலிகள் பேச்சுவார்த்தை நடந்த காலகட்டத்தில்தான் கொழும்பில் வைத்து தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர் அமிர்தலிங்கமும், மற்றும் யோகேஸ்வரனும் கொல்லப்பட்டனர்.

அக்கொலைக்கும் தமக்கும் தொடர்பில்லையென்று புலிகள் உடனடியாக மறுத்தபோதும் எதிரணிகள் அதனை நம்பவில்லை.

பிரேமா, புலிகளுக்கு கொடுத்த இடம் தான் அக்கொலைகளுக்கு காரணம் என்று எதிரணிகள் கூறின.

பிரேமா அரசு தாம் பூர்வாங்க விசாரணை நடத்தப் போவதாக தெரிவித்தது. அதனை 'புலிகளை பாதுகாக்கும் தந்திரம்' என்று எதிரணிகள் விமர்சித்தன.

அப்போதே அமுதர் கொலைக்கு புலிகள்தான் காரணம் என்று பிரேமா அரசுக்கு தெரியும்.

அமுதரின் பாதுகாவல் அதிகாரியால் கொல்லப்பட்டவர்களில் ஒருவர் விசு. அவர்தான் புலிகளது உளவுப்பிரிவின் பொறுப்பாளர்களில் ஒருவர் என்பதெல்லாம் அரசுக்கு தெரிந்தே இருந்தது.

ஆனால், அதனை வெளியே சொன்னால் பாதிப்பு புலிகளுக்கு மட்டுமல்ல தமக்கும்தான் என்று பிரேமா அரசு நினைத்தது. அந்த நினைப்பே தயக்கத்திற்கு காரணம்.

பிரேமா-புலிகள் பேச்சு ஒரு திருப்பமாகவும், சாதனையாகவும் அப்போது பிரசாரப்படுத்தப்பட்டது.

அந்த நிலையில் புலிகளுக்கு வரும் கெட்ட பெயர் தம்மையும் பாதிக்கும் என்று பிரேமா அரசு தயங்கியதில் உண்மை இல்லாமல் இல்லை.

புலிகள் மறுத்தபோதும் அமுதர் கொலைக்கு அவர்களே காரணம் என்பது தெளிவான விடயம் என்பதால் எதிரணிகளது குற்றச்சாட்டுக்களுக்கு மதிப்பு ஏற்பட்டது.

பிரேமா அரசோடு பேசிக்கொண்டே இரு ஜனநாயக அரசியல்வாதிகளை புலிகள் கொலை செய்து விட்டனர் என்ற பேச்சு எடுபட்டது.

பொதுஜன முன்னணி மேடைகளிலும் அது சுட்டிக்காட்டப்பட்டது.

ஆனால் இப்போது ஆட்சிமாறி விட்டது.

அரசியல் வன்முறைகளுக்கு முடிவு கட்டும் சபதத்தோடு பொதுஜன முன்னணி பதவியில் அமர்ந்துள்ளது.

அரசியல் வன்முறைகள், படுகொலைகள் என்பவற்றுக்கு முடிவு கட்டுவது பொதுஜன முன்னணியின் வெறும் அரசியல் கோஷமல்ல.

தனது அன்புக்குரிய துணைவர் விஜய குமாரணதுங்காவை வன்முறையிடம் இழந்தவர் பிரதமர் சந்திரிக்கா.

அரசியல் வன்முறைக்கு முடிவு கட்டுவது பிரதமர் சந்திரிக்காவின் உளப்பூர்வமான விருப்பமும் வேகமும் என்றே நினைக்க முடிகிறது.

ஆனால், அரசாங்கத்தின் கண்ணில் மண்ணைத் தூவிவிட்டு வேடிக்கை காட்டும் பலம் அரசியல் வன்முறையிடம் இருக்கிறது.

ஆகவே-ஆட்சி மாறியபோதும் ஒரே நிகழ்ச்சிகள்தான் திரும்பத் திரும்ப நடக்கின்றன.

அன்று பிரேமா அரசு எப்படிப் பேசியதோ அது போலவே இன்று சந்திரிக்கா அரசும் பேச வேண்டியிருக்கிறது.

குரல் வேறு. ஆனால் சொல்லப்படும் காரணம்- கருத்து ஒன்றுதான்.

குண்டுவெடிப்பில் காமினியும் அவரது சகாக்களும் கொல்லப்பட்டவுடன் புலிகளே காரணம் என்னும் கருத்து ஏற்பட்டது.

தற்கொலைத் தாக்குதல் என்பதால் புலிகளைத்தவிர வேறு யாரும் அதனை செய்திருக்க முடியாது என்றே பொலிஸ் தரப்பும் கருத்து வெளியிட்டது.

ஆனால், அரச தரப்பு அதனை மறுத்து பூர்வாங்க விசாரணை பற்றி அறிவித்தது.

"பொலிசுக்கு உடனடியாக எப்படித் தெரியும்?" என்று அமைச்சர் ஒருவரே கேள்வி எழுப்ப வேண்டியதாகிவிட்டது.

உண்மையில் அரசாங்கத்தின் அணுகுமுறையில் பிழை காண முடியாது.

விசாரணை நடத்தி உண்மையைக் கண்டறிவதைவிட்டு ஊகங்களை வெளியிடுவது பொறுப்பான செயல் அல்லதான்.

ஆனால், இதனையே கடந்தகால அரசாங்கம் சொன்னபோது அன்றைய எதிரணியும் இன்றைய ஆளும் கட்சியுமான பொதுஜன முன்னணிக்கு அதனை ஏற்கும் பொறுமையிருக்கவில்லை.

அன்றைய அரசாங்கம் தன்னைக் காத்துக்கொள்ள செய்த தந்திரங்களாகவே அப்போது தெரிந்தன.

இப்போது அதனையே செய்தாக வேண்டிய நிலை புதிய அரசாங்கத்திற்கும் ஏற்பட்டுள்ளது.

காரணம், புலிகளே காமினி கொலைக்கு காரணம் என்றொரு முடிவு உடனடியாக ஏற்பட்டால் அரசாங்கத்தையும் அது பாதிக்கும்.

அதனால்தான் காமினி கொலைக்கும் தமக்கும் தொடர்பில்லை என்று புலிகள் யாழ்ப்பாணத்தில் மறுத்ததை கொழும்பில் அரசின் வானொலியும், தொலைக்காட்சியும் தமது தலைப்புச் செய்தியில் வெளியிட்டன.

இத்தனைக்கும் யாழ்ப்பாணத்தில் புலிகள் மறுத்ததாக வெளிநாட்டு செய்தி நிறுவனங்களே தெரிவித்தன. ஆனால் புலிகளின் தரப்பில் இருந்து யாரால் அந்த மறுப்புத் தெரிவிக்கப்பட்டது என்பதை அவை தெரிவிக்கவில்லை.

பேச்சுவார்த்தை [illegible] நடந்துள்ள அரசியல் [illegible] என்றால் அதனைத் [illegible] தலைவர் பிரபாகரன் தனது [illegible] உடனடியாக வெளியிட [illegible] வேண்டும்.

யாழ்ப்பாணத்தில் வெளிநாட்டு பத்திரிகையாளர்களும் [illegible] சூழ்நிலையில் அதனை [illegible] செய்திருந்தால் பேச்சு வார்த்தையில் புலிகளது அக்கறை [illegible] மானதாகியிருக்கும்.

பிரதமர் சந்திரிகா உடனடியாக மக்களுக்கு செய்தி விடுத்தார். அரச தரப்பு பத்திரிகையாளர் மாநாட்டையும் நடத்தியது.

ஆனால், புலிகள் யாழ்ப்பாணத்தில் உத்தியோகபூர்வ [illegible] அல்லது குறைந்தபட்சம் [illegible] திற்குக்கூட ஒரு அனுதாபத்தையோ வெளியிடவில்லை என்பதும் கவனிக்கத்தக்கது.

புலிகள் தவிர வேறு எந்த அமைப்பு கருத்துத் தெரிவித்தாலும் அதனை வெளியிடுவது யார், அவரது பதவி, பொறுப்பு என்ன என்றெல்லாம் விபரமறிந்தே செய்தி வெளியிடப்படுவதுண்டு.

ஆனால், புலிகளின் [illegible]

அந்தச் செய்தியை வெளியிட்டது 'ராய்டர்' செய்தி நிறுவனம்.

இதே செய்தி நிறுவனந்தான் முன்னர் ஒருமுறை தனது செய்தியில் "பிரபாகரன் காடுகளுக்கு சென்று தனது கெரில்லாக்கள் மத்தியில் உரையாற்றினார். தாக்குதல்களை நிறுத்த உத்தரவிட்டார்" என்று கூறியது.

அச் செய்திக்குப் பின்னரே சாகரவர்த்தன கப்பல் புலிகளால் தாக்கப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

ஆக, புலிகளின் மறுப்பு என்று வெளியான செய்திகளை வைத்து எந்தவொரு முடிவுக்கும் வரமுடியாது.

அதே சமயம் புலிகள்தான் காரணம் என்று விசாரணையில்லாமல் உடனடியாக கூறுவதும் சரியல்ல.

அரசாங்கத்தைப் பொறுத்தவரை மெல்லவும் முடியாத விழுங்கவும் முடியாத நிலை.

புலிகள்தான் செய்தனர் என்று ஜனாதிபதி தேர்தலுக்கு முன்பே முடிவானால் அது பாதகமாக அமையும்.

புலிகள் செய்யவில்லை என்று அடித்து மறுக்கவும் முடியாது. அப்படி மறுத்தால் "செய்தது யார்?" என்ற கேள்விக்கு விடை சொல்லியே ஆக வேண்டும். விடை சொல்லாவிட்டால் தேவையற்ற சந்தேகத்தை அரசாங்கம் எதிர்கொள்ள நேரும்.

எனவே-முன்னைய அரசாங்கம் எதிர்கொண்ட அதே நெருக்கடியே புதிய அரசுக்கும் ஏற்பட்டிருக்கிறது.

ஆட்சி மாறினாலும், தொடரும் அரசியல் வன்முறை உள்ளவரை யார் ஆட்சிக்கு வந்தாலும் இதே நிலைதான் என்று தோன்றுகிறது.

குண்டு வெடிப்புக்கு புலிகள் காரணமா இல்லையா என்பது ஒரு புறமிருக்க, இலங்கையின் அரசியல் தலைவிதி, தேர்தல்களின் நிலவரம் என்பவை தீர்மானிக்கப்படுவது புலிகளோடு சம்பந்தப்பட்டதாக இருப்பது மட்டும் உண்மை.

**1989 பிரேமா-புலிகள் பேச்சு காலத்தின்போது கேட்ட சோகக் குரல்கள்**






**அமுதர், யோகேஸ் இறுதிச் சடங்கில் அனுதாபம் சொல்லும் காமினி**

## எக்ஸ்ரே ரிப்போர்ட்
நாரதர்




## அதிரடி அய்யாத்துரை



மறைந்தவருக்கு பதிலாக புதியவர் நியமனத்தில் முன்னாள் பெரியவரும் முன்னின்று ஊக்கம் கொடுத்தவராம். புதியவர் தொலைக் காட்சி மூலமான பிரசாரத்தை கூடுதலாக செய்யலாம் எண்டு நினைத்துள்ளாராம்.

மீன்பாடும் தகரில் நீல அணிக் கூட்டத்திற்கு எதிர்பார்த்தளவு கூட்டம் இல்லை. வடக்கு-கிழக்கில் முன்னர் அதிகாரத்தில் இருந்த கட்சிச் செயலர் மேடையில் ஏறிய தோசமாக்கும் என்று சொல்லுகினமாம். எப்படியோ தமிழ் சனம் சந்திரமானவருக்குத்தான் போடும். அதை வைச்சு எங்களால்தான் கிடைச்சது எண்டு சென்ற தேர்தலில் பட்ட காயத்தை தடவிக்கொடுக்கலாம் எண்டு நினைக்கினமாம்.

எலக்சனிலை குதிச்சு கலக்கப் போறம் எண்டு அறிக்கை விட்ட தமிழ் அமைப்பு இப்ப குப்பர் பல்டி அடிச்சிருக்குது கண்டியளோ. தமிழ் சனம் ஒரே அணி பக்கம் நிற்குது எண்டு தப்பான அபிப்பிராயம் வரக்கூடாதாம். அதுதான் எதிரணியை தட்டிக்கொடுக்கினமாம். போன தேர்தலிலை சிங்களக் கட்சியளுக்கு வாக்குப் போடக்கூடாது எண்டு நெருப்புப் பறக்க வீர வசனம் கக்கி, கொழும்பிலை போட்டியிடேக்கை உந்த ஞானம் வந்திருந்தா அது நியாயம். வாங்குறதுக்கு ஏற்ப பூச்சுத்த எங்கடை காதோ கிடைச்சிருக்கு?

சாகரவர்த்தன கப்பலை தாக்கினதிலை தலைமை தாங்கிய ரெண்டு எழுத்து பெண் போராளி வீட்டுக்கு ஆறுதல் சொல்ல கடலுக்கு பொறுப்பான ரெண்டு எழுத்து பிரமுகர் போனவராம். பிள்ளையின் தகப்பனார் "ஐயோ தம்பி, சமாதானம் வாற நேரத்திலை பிள்ளையை ஏன் கொடுத்தனீங்கள்?" எண்டு கலங்கினவராம். "ஐயா கவலைப்படாதேயுங்கோ. நாங்களும் உங்கடை பிள்ளைகள்தானே" எண்டு ஆறுதல் சொன்ன பொறுப்பாளர் அடுத்ததாய் கேட்டாராம் ஒரு கேள்வி, "அது சரி ஐயா சமாதானம் வரும் எண்டு யார் சொன்னது?" கூடியிருந்த அயல் சனத்தின்ரை முகங்களிலை ஈயாடேல்லையாம்.

பச்சை உடையினரைக் கண்டிச்ச பிரதம இடத்திலிருந்து பேச்சு வந்தவுடனை தாண்டிக்குளத்திலை வழக்கத்தைவிட இறுக்கமாம். தங்கள் பவரை அவை காட்டுகினமாக்கும். ஆனால் பாருங்கோ சனம் என்ன செய்யிறது? மத்தளம்தான் கொடுத்து வைச்சது. அதுக்கு ஒரு பக்கம்தானே அடி. ஆனால்...

தேனகத்திலை வேதாளம் பழையபடி முருங்கை மரத்திலை ஏறின கதைதானாம். ரெண்டு எழுத்தார் உள்ளே வந்து விட்டதாக கதை திரும்பினதுக்கு காரணம் சொல்லப்படுது. தேனகத்தார் ஒருத்தர் எனக்குச் சொன்னது இது: "சமாதானம் வரப்போகுது எண்ட மாதிரி பேப்பருகளிலைதான் பார்க்கிறம். இங்கே ஒரு எழவும் தெரியேல்லை."

தொட்டில் பழக்கம் சுடுகாடு மட்டும். சுவிசிலை இயக்கங்கள் இரண்டு மத்தியிலை அடிக்கடி மோதலாம். சமீபத்திலை ரெண்டு எழுத்து இயக்க சுவிஸ் பொறுப்பாளர் தாக்கப்பட்டிருக்கிறாராம்.

கொழும்பிலை தேர்தல் பிரசாரத்திற்காக சந்திரமானவரின் 'கட் அவுட்'டும் அருகே கிழக்கின் தனித்துவமான தலைவரின் "கட் அவுட்"டும் அருகருகே காணப்பட்டன. திடீரென்று தோன்றிய ஒரு கோஷ்டி தனித்துவமான தலைவரின் கட் அவுட்டை அகற்றிப் போட்டிதாம். அதே சமூக கொழும்புத் தலைமை தனித்துவமானவர் கொழும்பிலும் செல்வாக்குப் பெறுவதை விரும்பவில்லையாம். பனிப்போர் தொடருது என்று சொல்லுது ஒரு தகவல்.

அறிக்கை விடுறதிலை 'லேட்டஸ்ட் பாஷன்' என்ன தெரியுமோ இருக்கிறது நாலுபேர் எண்டாலும் முடிவெடுக்கிறது ஒருவர் மட்டுமே எண்டாலும், இந்த முடிவு மத்திய குழுவில் பரிசீலிக்கப்பட்டு, பொதுக்குழுவில் கிளறிப் பார்க்கப்பட்டு, அரசியல் பீடத்தால் படித்து கிழித்து பார்க்கப்பட்டது எண்ட மாதிரி குறிப்பிடுறதுதானுங்கோ அது.

சென்றவாரம் மாமியார் புலம்பல். இந்தவாரம் மருமகன் புலம்பல் எழுதினது கண்ணதாசன்.

*"தலைகாணி மந்திரமாம்*
*சங்கதியைக் கேளுங்கடி!*
*பொண்டாட்டி சொல்கேட்க*
*புத்தி இல்லா ஆம்பளையா?*
*வீட்டு மருமகளா*
*விளக்கேத்த வந்தவளை*
*சக்களத்தி போல் நெனைச்சு*
*சதிராடு கின்றாளே!"*

ஜனநாயக உறவுள்ள மாமியார் மருமகளுக்கு இது பொருந்தாது-[illegible]

www.padippakam.com நன்றி - நூலகத்திட்டம்

# சந்திரிக்காவின் புதிய சிந்தனை!

அலசுவது – இராஜதந்திரி

# இராணுவ மேலாதிக்கத்துக்கு தடை!!





இலங்கையில் 'இராணுவத் தர்பார்' வலுவடைந்திருப்பதாக பிரதமர் சந்திரிகா பி.பி.சிக்கு கடந்தவாரம் வழங்கிய பேட்டியில் குறிப்பிட்டிருந்தார்.

சந்திரிகாவின் இக்கூற்று, இராணுவம் வளர்ந்து பெருகியுள்ளதையும் இராணுவ உயர் மட்டத்திலுள்ளவர்கள் அரசின் நடவடிக்கைகளில் கொண்டுள்ள தலையீடுகளையும் சுட்டிக்காட்டுவதாக இருந்தது.

இலங்கையின் முப்படைகளினதும் எண்ணிக்கை கடந்த பதினொரு வருட காலத்தில், அதாவது 1983ம் ஆண்டுக்கும் 1994ம் ஆண்டுக்கும் இடைப்பட்ட காலப்பகுதியில் பெருமளவில் அதிகரித்துள்ளது.

இது தவிர நவீன படைச் சாதனங்கள், மற்றும் ஆயுத தளபாடங்களும் வாங்கிக் குவிக்கப்பட்ட நிலையில் இலங்கையின் வருடாந்த நிதி ஒதுக்கீட்டில் கணிசமானளவு தொகை படை பல விஸ்தரிப்புக்கே செலவிடப்படுவதாகவுமிருக்கின்றது.

இந்நிலையில் பிரதமர் சந்திரிகா இராணுவத்தினர் குறித்து வெளியிட்டுள்ள தகவல்கள் உயர் மட்டப் படையினருக்கும், பேரினவாத சக்திகளுக்கும் அதிருப்தியை ஏற்படுத்தலாம். ஆயினும் சந்திரிகாவின் கருத்துக்கள் யதார்த்தபூர்வமானவையாகவும், காலமறிந்து கூறப்பட்டவையாகவுமே இருக்கின்றன.

1983ம் ஆண்டுக்குப் பின்னர் இலங்கையில் உருப்பெற்ற வடக்கு-கிழக்குப் பிரச்னை குறித்த ஆயுதப் போராட்டம் இன்றுவரை ஒரு பயங்கர நோயாகவே இலங்கையைப் பீடித்திருக்கக் காணப்படுகின்றது.

கூடவே இராணுவ விஸ்தரிப்பானது, இலங்கையின் ஜனநாயக ரீதியிலான அணுகுமுறைகளையும் மழுங்கடிக்கச் செய்வதாகவே இருக்கின்றது.

வடக்கு-கிழக்கில் பெருமளவிலான தமிழ்த் தீவிரவாதிகள், நவீன ஆயுதங்கள் சகிதம் இலங்கையின் ஒருமைப்பாடு, ஐக்கியம் ஆகியனவற்றுக்கு இடையூறாக இருக்கின்றார்கள் என்ற அடிப்படையிலேயே முன்னைய அரசு இராணுவத்தைப் பெரிதாகக் கட்டி எழுப்பி விட்டிருந்தது.

ஆனால் தென்னிலங்கையில் ஜே.வி.பி தீவிரவாதம் வடக்கு-கிழக்கில் போன்று பாரியளவிலான ஆயுதப் போராட்டமாக வெடித்திராத போதிலும் ஆயிரக்கணக்கில் அப்பாவி இளைஞர்கள் கோரமான முறையில் படையினரால் கொல்லப்பட்டமை படையினரது அசுரத்தனமான வளர்ச்சியையே எடுத்துக்காட்டுவதாக விளங்கியிருந்தது.

எனவே வடக்கிலும், தெற்கிலுமாக படைபலம் நாடு முழுவதிலும் பிரமாண்டமான முறையில் அதிகரிக்கப்பட்டுள்ளதுடன், சந்திரிகா குறிப்பிட்டதுபோல இராணுவத்தினர் தமக்குள்ளேயே 'ஓர் இராச்சியத்தை' நடத்துவதாகவும் இருக்கக் காணப்படுகின்றது.

இலங்கையின் சமாதான, சகவாழ்வு, அபிவிருத்தி என்பனவற்றுக்கு வடக்கு-கிழக்கு யுத்தமே இன்று பெருஞ் சவாலாக இருந்து வருகின்றது.

வடக்கு-கிழக்கு யுத்தம் நாளுக்கு நாள் நிலைமைகளை மோசமாக்கிச் செல்கின்றதே தவிர ஒரு நிரந்தர தீர்வுக்கு வழி வகுப்பதாகக் காணப்படவில்லை.

படையினர் மட்டும் ஆயிரக்கணக்கில் இறந்தும், ஊனமாகியும் விடவில்லை. சுமார் 30 ஆயிரம் அப்பாவிப் பொதுமக்களும் கடந்த ஒரு தசாப்தகால கெடுபிடி யுத்தத்தினால் உயிரிழந்துள்ளனர்.

இது தவிர பலகோடிக்கணக்கான சொத்துக்களும் நாசமாகியுள்ளன. இந்நிலையில் வடக்கு-கிழக்கு யுத்தத்துக்கு உடனடியாக ஒரு முற்றுப் புள்ளி வைக்கவேண்டியதே இன்றைய தேவையாக இருக்கின்றது.

கடந்தகால ஆட்சியாளர்கள் வடக்கு-கிழக்கு நிலவரத்தைக் கையாள இராணுவ அணுகுமுறைகளையே பெரிதும் நம்பியிருந்தனர். அரசியல் ரீதியான நடவடிக்கைகளுக்கு சிறிதளவேனும் முக்கியமளிக்கவில்லை.

வட்ட மேசை மகாநாடுகள், பேச்சுவார்த்தைகள், சந்திப்புகள் என்று முன்னைய ஆட்சியாளர்களால் வடக்கு-கிழக்குப் பிரச்னை குறித்து மேற்கொள்ளப்பட்ட அரசியல் ரீதியிலான நடவடிக்கைகள், அனைத்துமே அரைவேக்காடானவையாகவும், அரைகுறைத் தீர்வைத் திணிப்பவையாகவுமே இருந்தன.

ஆனால் மறுபுறத்தே இராணுவ விஸ்தரிப்பு நடவடிக்கைகள் அசுர வேகத்தில் இடம் பெற்றதுடன் குண்டு வீச்சுக்கள், ஷெல் வீச்சுக்கள் என்று வடக்கிலும், கிழக்கிலும் கெடுபிடி யுத்தம் கட்டுமீறியிருந்தது.

பிரதமர் சந்திரிகா பி.பி.சியில் இலங்கையின் இராணுவ விஸ்தரிப்புக் குறித்து குறிப்பிட்டுள்ளவை, போரை வெறுப்போரின் கவனத்தைப் பெரிதும் கவர்ந்ததாக இருக்கின்றது.

ஒரு நாட்டின் பாதுகாப்பு, ஒருமைப்பாடு ஆகியனவற்றை உறுதி செய்வது முப்படைகளினதும் தலையாய பொறுப்பாகும். ஆயினும் அச்சுறுத்தல்களை முறியடிப்பது என்ற

## தோளிலே துப்பாக்கிகளை ஏந்தியபடி பேச்சுக்களை நேர்மையாகத் தொடர முடியாது

ரீதியில் இராணுவம் ஒரு மாபெரும் சக்தியாக- ஜனநாயக நடவடிக்கைகளைத் தீர்மானிக்கும் ஒரு அலகாக மாற்றம் பெறுவதை ஜனநாயக மரபுகளில் நம்பிக்கை கொண்டவர்கள் ஒருபோதும் ஏற்றுக்கொள்ளமாட்டார்கள்.

வடக்கு-கிழக்கு யுத்தம் தற்போது ஒரு பெரும் கெடுபிடி நிலையை எட்டியுள்ளது. வடக்கு-கிழக்கில் படையினரை எதிர்த்துப் போரிட்டு வரும் தமிழீழ விடுதலைப் புலிகள் ஒரு பெரும் ஆயுதப் போராட்ட சக்தியாக வளர்ச்சியடைந்திருக்கக் காணப்படுகின்றனர்.
தரையில் மட்டுமல்ல, கடலிலும் அவர்கள் தமது நடவடிக்கைகளை விஸ்தரித்துள்ளனர். இத்தகைய விஸ்தரிப்புக்கு கடந்தகால ஆட்சியாளர்களின் அணுகுமுறைகளே முக்கிய காரணங்களாக விளங்கியிருந்தன.

ஜனநாயக ரீதியாக தமது கோரிக்கைகளை வலியுறுத்தி வந்த வடக்கு-கிழக்கின் தமிழ் பேசும் மக்களை பலாத்கார அணுகுமுறைகள் மூலுமாக முன்னைய ஆட்சியாளர்கள் அணுகியிருந்தனர்.

அத்துடன் பிரதமர் சந்திரிகாவின் தந்தையாரான அமரர் எஸ்.டபிள்யூ.ஆர்.டி. பாண்டாரநாயக்காவின் ஆட்சிக் காலத்தில்– 1958ம் ஆண்டு தமிழருக்கெதிராக முதல் தடவையாக



நாடு தழுவிய இனக் கலவரம் வெடித்திருந்தது.

தொடர்ந்து 1977ம் ஆண்டிலும் பின்னர் 1983ம் ஆண்டிலும் தமிழ் பேசும் மக்களுக்கெதிராக மூர்க்கத்தனமாக வன்முறைகள் கட்டவிழ்த்து விடப்பட்டன.

இதனையடுத்து 1983ம் ஆண்டில் தமிழ்த் தீவிரவாதப் போராட்டங்கள் முனைப்படைந்த நிலையில் இலங்கையின் அரசியலில் 'இரத்தப் பிரவாகம்' பெருக்கெடுத்திருந்தது.

வடக்கு-கிழக்குப் பிரச்னையைக் கையாள முன்னைய அரசு இராணுவ அணுகுமுறைகளை பெரிதும் நம்பியிருந்தது. ஆனால் 'கிணறு தோண்டப் பூதம் வெளிப்பட்ட' கதையாகவே இன்று இராணுவ நடவடிக்கையின் பிரதிபலன்கள் அமைந்துள்ளன.

கடந்த ஆண்டில் இராணுவ உயர் மட்டத்தில் நிலவிய சர்ச்சை, இலங்கையில் இராணுவ அமைப்பு ஒரு பெரும் சக்தியாக வளர்ச்சியடைந்திருப்பதனையே வெளிப்படுத்தியிருந்தது.

அரசியல்வாதிகளுக்கு நிகரான நிலையில் படை உயரதிகாரிகள் முக்கியம் பெற்றிருந்தனர். அரசியல் விவகாரங்களைவிட இராணுவ நடவடிக்கைகளையே விமர்சிக்கும் கட்டுரைகள், செய்திகள் என்பன பெருமளவில் கடந்த காலங்களில் வெளிவந்திருந்தன.

ஒரு நாட்டைப் பொறுத்தவரை இராணுவத்தின் பங்களிப்பு மிகவும் இன்றியமையாதது. நாட்டின் எல்லைப் புறங்களைப் பாதுகாப்பது, அந்நிய அச்சுறுத்தல்களை முறியடிப்பது, உள்நாட்டு யுத்தங்களை கையாளுவது போன்ற விடயங்களில் இராணுவத்தின் பங்களிப்பு மிகவும் முக்கியமானதாகும்.

ஆயினும் இலங்கையின் இராணுவ விஸ்தரிப்பானது வெளிநாட்டுடனான யுத்தமொன்றில் இலங்கை ஈடுபட்டிருப்பதைப் போன்ற பிரமையை ஏற்படுத்துவதாகவே இருக்கின்றது.

யுத்த டாங்கிகள், கவச வாகனங்கள், போர் விமானங்கள், ஆட்டிலறித்துப்பாக்கிகள், உட்பட ஆயிரக் கணக்கிலான படை வீரர்களுடன் இலங்கை இராணுவம் பாரிய வளர்ச்சியைக் கண்டுள்ளது.

இராணுவக் கட்டமைப்பு என்ற விடயம் தலை முதல் கால்வரை கட்டளைகள், உத்தரவுகள் என்பவற்றையே உயிர் நாடியாகக் கொண்டுள்ளது. இராணுவ அமைப்பின் உயர் மட்டத்தில் எடுக்கப்படும் முடிவுகள் அடி மட்டம்வரை எதுவித பிசகுமின்றி நிறைவேற்றப்பட வேண்டியவையாகவுள்ளன.
இந்நிலையில் எந்தவொரு இராணுவ அமைப்புக்குள் ஜனநாயகம் பற்றிப் பேசுவதோ அல்லது அரசியல் சித்தாந்தங்களை அலசுவதோ எங்குமே நடைமுறையில் இல்லை.

கடந்த 17 வருடகாலமாக நிறைவேற்று அதிகார ஜனாதிபதி ஆட்சிமுறை இலங்கையின் இராணுவ நடைமுறைகளுக்கு உரமூட்டுவதாகவே இருந்தது. ஏனெனில் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியே முப்படைத் தளபதியாகவும் காணப்பட்டார்.

இந்நிலையில் அவரது விருப்பு வெறுப்புகளுக்கு ஏற்ற விதத்திலேயே இராணுவ நடவடிக்கைகள் அமைந்திருந்தன.

இராணுவத்துறைக்கென பெருமளவு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்ட நிலையில் இராணுவ உயரதிகாரிகளுக்கும் விசேட அதிகாரங்கள் வழங்கப்பட்டன.

எனவே இராணுவத்தினர் இன்று கொண்டுள்ள நிலைப்பாடே அரசியல் ரீதியிலான நடவடிக்கைகளுக்கு ஒரு பெரும் சவாலாக இருக்கின்றது.

அரசியல் ரீதியாகப் பிரச்னைகளைத் தீர்க்க முன்வரும் போது இராணுவ நடைமுறைகள் ஓர் இடையூறாக இருப்பதை ஜனநாயகத்தில் முற்று முழுதான நம்பிக்கை கொண்டவர்கள் எவ்வகையிலும் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள்.

வடக்கு-கிழக்கில் தற்போது இராணுவ நடவடிக்கை என்பது ஒரு நியதியாகிவிட்டது. வடக்கு-கிழக்கு மக்கள் ஒரு முற்று முழுதான ஜனநாயகக் காற்றை அனுபவிக்க முடியாதவர்களாக இருக்கின்றார்கள்.

கடந்த காலங்களில் அரசியல் ரீதியிலான அணுகுமுறைகள் முன்னெடுக்கப்படாத நிலையில் வடக்கே தமிழீழ விடுதலைப் புலிகளும் தம்மை ஒரு முற்றுமுழுதான ஆயுதப் போராட்டக் குழுவாகவே வழிநடத்தியிருக்கக் காணப்படுகின்றனர்.

இந்நிலையில் அரசியல் ரீதியிலான அணுகுமுறைகளை மேற்கொண்டு சமாதான முயற்சிகளில் ஈடுபடுவோர் அரசியல், இராணுவ நடவடிக்கைகளை தெளிவாகக் கோடிட்டுப் பிரிக்கவேண்டியது இன்றியமையாததாகின்றது.

துப்பாக்கிகளை தோளில் வைத்துக்கொண்டு இரு சாராரும் முகத்துக்கு முகம் பார்த்துப் பேசும் போது பரஸ்பர விசுவாசத்தை எந்த வகையிலும் பேண முடியாது. மாறாக விட்டுக்கொடுத்தல், சகிப்புத்தன்மை என்பவனவற்றையும் எதிர்பார்க்க முடியாது.

இந்நிலையில் இரு தரப்பினரும் ஒருவர் குறித்து ஒருவர் கொண்டுள்ள சந்தேகங்கள், அச்சங்களை நீக்குவதன் மூலமே அவர்கள் நடத்தும் பேச்சுவார்த்தைகளை ஆரோக்கியமானவையாக்க முடியும்.

பிரதமர் சந்திரிகா, பி.பி.சிக்கு இலங்கை இராணுவம் குறித்து வெளியிட்டுள்ள கருத்துக்கள் இலங்கையில் ஜனநாயக மரபுகள் முற்றிலுமாக புறந்தள்ளப்பட்டுவிடவில்லை என்பதனையே புலப்படுத்துவதாக இருக்கின்றது.

கூடவே இராணுவ வளர்ச்சி குறித்தும், அதன் நடவடிக்கை குறித்தும் வடக்கு-கிழக்கு மக்கள் கொண்டிருந்த பீதியை அகற்றி, அரசியல் நடைமுறைகளில் அவர்களை நம்பிக்கை வைக்கத் தூண்டுவதாகவும் இருக்கின்றது.

தமிழீழ விடுதலைப் புலிகளுடனான பேச்சு வார்த்தைகளை மேலும் அர்த்தமுள்ளதாக்குவதாகவும், இலங்கையில் தோன்றக்கூடிய இராணுவத் தர்பார் அதனோடிணைந்த ஆயுதக் கலாசாரம் என்பவற்றை முடிவு கட்டுவதாகவும் சந்திரிகாவின் பி.பி.சி. கருத்துக்கள் விளங்குகின்றன எனலாம்.

www.padippakam.com
நன்றி — நூலகத்திட்டம்

லேடீஸ் ஸ்பெசல்
பெண்களுக்கு மட்டும்






# வர்த்தக உலகில் முன்னேறுவது எப்படி?

-ராணி அக்கா-

ஆண்களைப் போல் பெண்களால் வாணிகத் துறையில் முன்னேற முடிவதில்லை. இத்துறையில் ஆண்களுடன் ஈடு கொடுக்க முடியாதிருக்கிறது. பெண்களின் இயல்பான சுபாவம் தான் இதற்குக் காரணம். இருப்பினும் விதி விலக்காக சிலர் மேன்மை அடைந்துள்ளனர் என்பதை மறுக்க முடியாது. எனினும் ஆண்கள் வாணிபத் துறையில் முன்னணிக்கு வந்த அளவுக்கு பெண்களால் முன்னேற்றம் காண முடியாமல் இருக்கிறது.

இத்துறையில் பன்னெடுங்காலம் அனுபவமுடையவர்களின் ஆய்வின் அடிப்படையில் உருவான சில அறிவுரைகள் தரப்பட்டுள்ளன. இவற்றைக் கடைப்பிடிக்கும் பெண்களால் இத்துறையில் முன்னேற்றம் காண வாய்ப்பு ஏற்படலாம் என்று அந் நிபுணர்கள் தெரிவித்துள்ளனர்.

வாணிபத்தில் கடைப்பிடிக்க வேண்டிய பல கோட்பாடுகள் உள்ளன. இராணுவத்தில் மற்றும் சில விளையாட்டுகளில் உள்ள கட்டுப்பாடுகளைப் போன்று சில முறைகள் உள்ளன. தோல்விகளை எதிர்பார்க்க வேண்டும். அபவாதங்களை எதிர்கொள்ள வேண்டும். இவற்றையெல்லாம் துச்சமாக மதித்து எதிர்கொண்டால் பட்ட பாட்டுக்குப் பலன் கிட்டும். பதவி உயர்வுகளும் கிட்டும்; பணமும் கிடைக்கும்.

**பெண்கள் வாணிபத் துறையில் முன்னேறக் கடைப்பிடிக்க வேண்டிய சில அடிப்படை அம்சங்கள்:**

• **மேலதிகாரிக்கு 'மேல் அதிகாரம்' செலுத்தலாகாது:** ஒரு வணிக அல்லது வர்த்தக நிறுவனத்தில் சாதாரண ஊழியராகச் சேரும் வாய்ப்பே ஆரம்பத்தில் கிடைக்கும். பலதரப்பட்ட நெருக்கடிகளைச் சந்திக்க நேரிடும். சக ஊழியர்களின் அல்லது உங்கள் பிரிவுக்கு அதிகாரியாக உள்ளவரின் வசவுகளை வாங்கிக் கட்ட வேண்டியிருக்கும். இத்தகைய சிறு சிறு சம்பவங்களுக்குக் கெல்லாம் மேலதிகாரியிடம் முறைப்பாடுகளை எடுத்துச் செல்லலாகாது. நிறுவனத்துக்குரிய சட்ட திட்டங்களை மிக முக்கியமாகக் கவனத்தில் எடுத்துக்கொள்ள வேண்டும். மேலதிகாரியிடம் மதிப்பும் மரியாதையும் கொண்டொழுக வேண்டும். அவரை மீறி அவரை அதிகாரம் செய்யும் அளவுக்குப் போகலாகாது.

• **மேலதிகாரியிடம் பலர் முன்னிலையில் கேள்வி கேட்கலாகாது:** படிப்படியாக உயர்ந்து மேலதிகாரியுடன் நெருக்கமாகப் பழகி, அலுவலகப் பணிகளையிட்டு விவாதிக்கும் அளவுக்கு வந்தாலும் பலர் முன்னிலையில் அவரிடம் கேள்வி கேட்கத் துணியவே கூடாது. அவரிடம் கேட்க வேண்டியவற்றைத் தனித்திருக்கும்போது மட்டுமே கேட்க வேண்டும்.

• **உங்களுக்குரிய பணியினை மட்டுமே செய்தல் வேண்டும்:** உங்களிடம் திறமையும் தகமையும் இருக்கலாம். உடன் பணியிலீடுபட்டிருப்போருக்கு தெரியாத விடயங்களை தாராளமாகச் சொல்லிக்கொடுக்கலாம். ஆனால் மற்றவர்களுடைய பணிகளை நீங்களாகவே செய்து கொடுக்கும் அளவு தாராளம் கூடாது. இந்த அளவுக்கு நீங்கள் போய்விட்டால் உங்களுக்குரியவற்றையே செய்ய முடியாமற் போய்விடும். உங்களைப் பலரும் கசக்கிப் பிழிந்து விடுவார்கள்.

• **சந்தர்ப்பத்தைப் பார்த்துக் காயை நகர்த்த வேண்டும்:** உங்களுக்குத் தரப்பட்ட பணிகளைச் சிறப்புடன் முடித்து மேலதிகாரியைத் திருப்திப்படுத்திவிட்டீர்களானால் உங்கள் உத்தியோக உயர்வுக்கோ ஊதிய அதிகரிப்புக்கோ விண்ணப்பிக்க அதுவே நேரம். இதனையும் கால நேரம் அறிந்தே செயற்படுத்த வேண்டும் என்பதனை மறக்கலாகாது.

• **நிலமையை அனுசரித்து நடத்தல்:** மேலதிகாரியின் மனோநிலை எவ்வாறு இருக்கிறது என்பதனை நன்கு அவதானித்துப் பழகிக்கொள்ள வேண்டும். அந்தந்த நிலமைக்கேற்ப அவருடன் பழகுவதையும் வைத்துக்கொள்ள வேண்டும்.

• **சிறு பிள்ளைத்தனமும் கவர்ச்சியும் தவிர்க்கப் படவேண்டும்:** உயர்ந்த நிலையினை அடைய வேண்டும் என்று கருதும் பெண்கள் அலுவலகங்களுக்குச் செல்லும்போது வேடிக்கையான உடைகள், நகைகள் அணிவதைத் தவிர்க்க வேண்டும். தோற்றத்தில் கண்ணியமும் கடமை உணர்வும் இருக்க வேண்டும். கவர்ச்சியைக் காட்டுவதோ சிறு பிள்ளைத்தனமாக நடந்து கொள்வதோ அறவே தவிர்க்கப் படவேண்டும். ■

---

யார் அந்த 50 அதிஷ்டசாலிகள்?

## முரசின் பரிசு

தினமுரசு நடத்தும் பரிசுப் போட்டி.

* 50 பேர் அதிஷ்டசாலிகளாகத் தெரிவு செய்யப்படுவார்கள்.

முரசின் பரிசு
கூப்பன் இல 13
உண்மை—நேர்மை—வெளிப்படைத்தன்மை

* பெண்கள் மட்டுமே பங்கு கொள்ள முடியும்.
* பரிசுக் கூப்பன்களை 1-25 வரை பத்திரமாக சேர்த்து வைக்க வேண்டும்.
* நாம் அனுப்பச் சொல்லும் போது 25 கூப்பன்களையும் அனுப்பி வைக்கலாம்.
* மிக்ஸி- ரைஸ் குக்கர்கள்-இட்லி குக்கர்கள், கைக் கடிகாரங்கள், நவீன ரக இல்லப் பொருட்கள் என்பன பரிசுகளாக வழங்கப்படவுள்ளன.
* இன்றுமுதல் கூப்பன்களை சேகரிக்க ஆரம்பியுங்கள். உங்கள் அதிஷ்டத்தைப் பரிசீலிக்கலாமே.

---

கைவேலைப் பகுதி- நீங்களும் செய்து பாருங்கள்

## ஒக்கிட் மலர்


எஸ்—எஸ்

**தேவையான பொருட்கள்:**

வெள்ளை நிற ஸ்ரொக்கிநெற் - 1
பச்சை நிற ஸ்ரொக்கிநெற் - 1
தங்க நிறக் கம்பி - 1 டசின்
மகரந்தம் சிறு கட்டு
கம் ரேப்
கட்டுக்கம்பி
நூல்

**எடுக்கப்படவேண்டிய அளவுகள்:**

| | |
|---|---|
| **பெரிய பூவிற்கு** | 8 அங்குல அளவில் 2 துண்டுகள் |
| | 7 1/2 அங்குல அளவில் 1 துண்டு |
| | 7 அங்குல அளவில் 3 துண்டுகள் |
| | 4 அங்குல அளவில் 1 துண்டு |
| | 5 அங்குல அளவில் 1 துண்டு |
| **சிறிய பூவிற்கு** | 7 அங்குல அளவில் 2 துண்டுகள் |
| | 6 1/2 அங்குல அளவில் 1 துண்டு |
| | 6 அங்குல அளவில் 3 துண்டுகள் |
| | 3 அங்குல அளவில் 1 துண்டு |
| | 4 அங்குல அளவில் 1 துண்டு |
| **மொட்டுக்கு** | 6 அங்குல அளவில் 1 துண்டு |
| | 5 1/2 அங்குல அளவில் 1துண்டு |
| | 5 அங்குல அளவில் 1 துண்டு |
| | 4 அங்குல அளவில் 1 துண்டு |
| இலைக்கு | 6 அங்குல அளவில் 3 துண்டுகள் |
| | 5 அங்குல அளவில் 2 துண்டுகள் |




**செய்முறை:**

பெரிய பூவிற்கு என மேற்காட்டப் பட்டுள்ள அளவிலான தங்க நிறக் கம்பிகளை வெட்டி எடுத்து அளவின்படி பிரித்து வைத்துக்கொள்ளவும். பிரித்து வைக்கப்பட்ட கம்பிகளை இரு நுனிகளையும் சேர்த்து முறுக்கவும். 8 அங்குல அளவிலான கம்பிகளை படம் 1ல் காட்டிய படி வடிவத்திற்கும், 7 1/2 அங்குல அளவிலான கம்பியை படம் 3ன் படி அமைத்துக்கொள்ளவும். 7 அங்குல அளவிலான கம்பியில் 3 துண்டுகள் உள்ளன. அவற்றை படம் 2ன் வடிவ அமைப்புக்கு அமைத்துக் கொள்ளவும். 4,5 அங்குல அளவிலான இரு இதழ்களையும் படம் 1ன் அமைப்பில் அமைக்குக. இவ்வாறு அமைக்கப்பட்ட இதழ்களுக்கு வெள்ளை நிற ஸ்ரொக்கிநெற் போட்டு முறுக்கப்பட்ட பகுதியில் நூலினால் கட்டவும். கட்டிய பின்னர் எஞ்சிய பகுதியை வெட்டவும்.

இவ்வாறு அமைத்த பின்னர் கட்டுக் கம்பியில் மகரந்தம் 5 நெட்டுகளை எடுத்து கட்டுக் கம்பியில் வைத்து குறட்டினால் முறுக்கவும். முறுக்கிய மகரந்தத்துடன் 4,5 அங்குல இதழ்களை ஒன்றையொன்று பார்க்கும் வண்ணம் வைத்து நூலினால் கட்டவும். அதன் பின்னர் 7 அங்குல அளவிலான 3 கம்பிகளை- அதாவது படம் 2ல் அமைக்கப்பட்டவாறு உள்ளவற்றை V,வடிவ இடைவெளியைப் பார்த்து அந்த கம்பிகளை வைத்துக் கொண்டு அடுத்து 7 1/2 அங்குல அளவிலான இதழை- அதாவது படம் 3ல் உள்ளதை அடுத்து வைத்துக் கட்டவும். அதன் பின்னர் படம் 1ல் காட்டியவாறு இரு இதழ்களையும் V வடிவில் வைத்து நூலினால் இறுகக் கட்டவும். இப் பகுதிகளில் நூல்கள் தெரியாமல் கம் ரேப்பினால் சுற்றிக் கொள்ளவும்.

இவ்வாறு அடுத்துள்ள சிறிய பூவையும் செய்து கொள்ளவும். மொட்டுப் பகுதிக்கென படம் 4ல் காட்டப்பட்ட வடிவில் இதழ்களை அமைத்து வெள்ளை நிற ஸ்ரொக்கிநெற்றினால் கட்டவும். கம்பியில் மகரந்தம் வைத்துக் கட்டி மொட்டு இதழ்களை அமைக்கவும். பூவினை எவ்வாறு கட்டினோமோ அதுபோன்று இதனையும் கட்டவேண்டும்.

**இலை:**

படம் 5ல் காட்டப்பட்டவாறு இலைகளை அமைத்து பச்சை நிற ஸ்ரொக்கிநெற் போட்டு கட்டவும். இவ்வாறு 5 இலைகளை அமைத்து இலைக்கு தண்டுப் பகுதி அமைப்பதற்கு என கட்டுக் கம்பியினால் இலையைச் சுற்றி கட்டி தண்டுப் பகுதியை அமைக்கவும். அப்பகுதிக்கு கம்ரேப் சுற்றவும்.

**கொப்பாக கட்டும் முறை:**

முதலில் தடித்த கட்டுக் கம்பியை எடுத்து அக்கம்பியின் நுனியில் மொட்டையும் இலையில் இரண்டையும் கம்பியில் முறுக்கி கம்ரேப்பினால் சுற்றி இடையில் விட்டு அடுத்த சிறிய பூவையும் இலையில் ஒன்றையும் வைத்து விடப்பட்ட கம்ரேப்பினால் மீண்டும் சுற்றி இடையில் அடுத்த பெரிய பூவினையும் எஞ்சிய இலைகளையும் வைத்து கம்ரேப்பினால் சுற்றிக்கொள்ளவும்.

இப்போது ஒக்கிட் மலர் உங்கள் கரங்களில்.

• **குறிப்பு:** இதழ்களை இலேசாக கீழ் வளைக்கவும். மொட்டிற்கான இதழில் ஒன்றை உள்நோக்கியும் அடுத்துள்ளதை வெளிநோக்கியும் இலேசாக வளைக்கவும்.

---

# பெண்ணின் பெருமையைப் பூமிக்குச் சொல்லும் நாள்

## அருளொளி பரப்பும் ஆனந்தத் திருநாள்

சிவபிருந்தா



ஒளி மயமான எழிலையே உலகம் விரும்புகிறது. மனிதன் ஒவ்வொருவனும் அஞ்ஞான இருளகற்றி அருள் நிறைந்த அன்பான வாழ்க்கையினையே விரும்புகிறான். துன்பத்தைத் தரும் தீய இருளை வெறுக்கிறான். புறத்தே ஒளி விளங்கினால் அகத்தேயும் அறிவொளி பரவும். ஆகவே உள்ளேயும் வெளியேயும் ஒளியினை அவன் எதிர்பார்க்கிறான்.

தன் வாழ்நாள் முழுவதும் ஒளி விளங்க வேண்டும் என்பதையே மனிதன் தன் எண்ணத்திலும் செயலிலும் இருத்தி பிரார்த்திக்கிறான். அதற்காகப் பாடு படுகிறான்.

மனித சமுதாயத்தில் அவ்வப்போது கவ்விக்கொள்ளும் இருளை அகற்றுவதற்காக முன்னோர்களால் வகுக்கப்பட்ட நாளே தீபாவளித் திருநாளாகக் கொண்டாடப்படுகிறது.

தான் பெற்ற மகனையே தன் கையால் ஒரு தாய் கொன்றொழித்த கதையையே தீபாவளித் திருநாளுக்கான விளக்கமாக வேத விற்பந்நர்கள் கூறி வைத்தனர். பண்டு தொட்டு பலகோடி மக்களால் இன்றுவரை நம்பப்பட்டு வரும் அக்கதையில் மாபெரும் உண்மை உட்பொருளாகப் பொதிந்திருப்பதை உணர்ந்தோமேயானால் இத்திருநாள் மனித சமுதாயம் அனைத்துக்குமே ஒரு பொது விழாவாக விளங்குவதைப் புரிந்து கொள்ளலாம்.

பெண் எத்தகைய கொடுமையையும் தாங்கிக் கொண்டிருக்க மாட்டாள். பொறுமைக்கும் அவள்தான் இருப்பிடம். ஆனால் அதற்கும் ஓர் எல்லையையும் அப்பெண்ணே வகுத்து வைத்திருக்கிறாள். தனக்கு மட்டுமல்லாமல் தன்னைச் சார்ந்திருப்போருக்கும் தாங்க முடியாத கொடுமையினை தன் தனையனே செய்தாலும் கொதித்தெழுந்து அவனையே அழித்தொழிக்க முற்படுவாள். நரகாசூரன் வதை இந்த உண்மையினையே நமக்கு எடுத்துக் காட்டுகிறது.

கொடுமை ஒழிந்து, தீமை அகன்று, மனித சமுதாயத்தை வாட்டும் அத்தனை அனர்த்தங்களும் அடியோடு அகலுவதையே நாம் எல்லோரும் விரும்புகிறோம். அதற்காகவே இறைவனையே சக்தியாக வழிபட்டும் வருகிறோம். சக்தியை பெண்ணாக உருவகித்தனர் ஆன்றோர். அந்த மாபெரும் சக்தியை வழிபட்டு அதர்மங்களை அழிக்கவே தீபாவளித் திருநாள் தோற்றுவிக்கப்பட்டது.

ஒவ்வொரு வருடமும் வைகாசி மாத பௌர்ணமியுடன் பல்வகைப் பெயர்களில் சக்தி பூசைகள் தொடங்குகின்றன. விரதங்களும் அனுஷ்டிக்கப்படுகின்றன. கண்ணகி வழிபாடு, மாரியம்மன் சடங்கு, கேதார கௌரி நோன்பு, நவராத்திரி என்று பெண் தெய்வ வழிபாடுகள் இடம் பெறுகின்றன. இவற்றுடன் தீபாவளியும் பெண் தெய்வத்தின் பெருமைக்கு சிறப்பூட்டுகின்றன. எமது முன்னோர்கள் பெண்மைக்கும் தாய்மைக்கும் கொடுத்து வந்த பெருமைக்கு இவை எடுத்துக் காட்டாக விளங்குகின்றன.

சக்தியை வீரத்தின் உருவாக, செல்வத்தின் தெய்வமாக, அறிவின் இறைவியாக வழிபட்டு அஞ்ஞான இருளை அகத்திலிருந்து துரத்தி வெற்றி கண்ட விஜய தசமித் திருநாளைத் தொடர்ந்து வரும் இருத்தை (அமாவாசைக்கு முதல் நாள்) அன்று தீபாவளித் திருநாள் கொண்டாடப்படுகிறது. அன்றைய தினத்தை விரதம் அனுஷ்டித்து, புத்தாடை பூண்டு ஆலயங்களில் வழிபாடு செய்து, குடும்பத்தினர் இனசன பந்துக்களுடன் விருந்துண்டு மகிழ்ச்சி பொங்கக் களிக்க வேண்டும்.

அன்றைய தினம் தங்கள் ஆன்றோரை நினைத்து படையலிடுவோருமுண்டு.

தீபாவளி அன்றிரவு தத்தமது இல்லங்களில் ஒளி விளக்குகளை ஏற்றி இருளகற்றுவார்கள். தங்கள் உள்ளங்களில் இருந்த இருள் அகன்று, அதுபோல் புற இருளும் விலகுவதனை விளக்குவதற்காகவே இத் தீப-ஆவளி என்ற ஒளி வரிசைத் திருநாள் உருவகிக்கப்பட்டது.

அனைவருக்கும் எம் தீபாவளி நல் வாழ்த்துக்கள் உரித்தாகட்டும். ●

---

## சமைப்போம் சுவைப்போம்

தொகுத்துத் தருவது—சுகந்தினி

### பட்டாணி கட்லெட்

**தேவையானவை:**

இறால்- ஒரு கிலோ
தேங்காய்- பாதி
பெரிய வெங்காயம்-1
செத்தல் மிளகாய்- 10
மிளகு- ஒரு கரண்டி
கசகசா- ஒரு கரண்டி
பச்சைப் பட்டாணி- 100 கிராம்
முட்டை-2
மஞ்சள்- ஒரு துண்டு
தக்காளி- 2
மல்லி தழை- சிறிதளவு
பூண்டு-1
தேங்காய் எண்ணெய்- 100 கிராம்
உப்பு-அளவாக

**செய்முறை:**

முதலில் இறாலை வெந்நீரில் போட்டுத் தோலை உரித்து சுத்தம் செய்து நன்றாகக் கழுவிக்கொள்ளவும்.

மிளகாய், மிளகு, கசகசா, தேங்காய், மஞ்சள், பூண்டு இவற்றை அம்மியில் நன்றாக அரைத்துக் கொள்ளவும். கழுவி வைத்துள்ள இறாலுடன், பச்சைப் பட்டாணி, அரைத்த கலவையினை சேர்த்து ஒரு டம்ளர் நீர் விட்டு தேவையான அளவு உப்பு போட்டு வேக வைக்கவும். வெந்தவுடன் இறக்கிவிடவும்.

வாணலியை அடுப்பில் வைத்து எண்ணெய் முழுவதும் ஊற்றி நறுக்கிய வெங்காயம், தக்காளி, மல்லித்தழை இவற்றைப் போட்டு நன்றாக வதக்கவும். இதில் முட்டை இரண்டையும் உடைத்து ஊற்றிக் கிளறி விடவும். இப்பொழுது வேகவைக்கப்பட்ட இறால் கலவையை வாணலியில் கொட்டி நன்கு கிளறி விடவும். கலவை நன்கு கெட்டியானவுடன் இறக்கி விடவும். இப்போது பட்டாணி இறால் கட்லெட் தயார். இதைச் சோற்றுடன் சாப்பிட சுவையாக இருக்கும். செய்வதும் மிகவும் சுலபம். ●

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்

# மலை மகனுக்கு மணமகள் தேவை

## என் எடை 1000 இறாத்தல்
## தேவை 125 இறாத்தல்



ஆயிரம் இறாத்தல் உடம்போடு ஆஸ்பத்திரிக் கட்டிலில் சாய்ந்து கிடக்கிறது மனித மலை.

காம்ஸிமித் என்பதுதான் அவர் பெயர். விரைவில் வீடு திரும்பும் நம்பிக்கையோடு சிகிச்சை பெற்று வருகிறார்.

அவருக்கென்றே அளவெடுத்து விசேஷமாக தயாரிக்கப் பட்ட படுக்கையில் சிகிச்சை நடக்கிறது.

மூச்சுவிடக் கஷ்டப்பட்டார். எடையை சற்று குறைக்கும் முயற்சிக்காக கொண்டுவந்து சாய்த்திருக்கிறார்கள்.

"என் செல்லக்குட்டி ஸிமித் உடல் நிலை தேறி வருகிறான். காலா காலத்தில் அவனுக்கொரு கல்யாணத்தை செய்து வைத்துவிட்டால் வருபவள் அவனை கண்கலங்காமல் வைத்துப் பார்த்துக்கொள்வாள். நான் நிம்மதியாக கண்மூடி விடுவேன்" என்கிறார் ஸிமித்தின் அம்மா.

ஆனால்-ஸிமித் ஒரு நிபந்தனை போட்டிருக்கிறார்.

"நான் மணமுடிக்க வேண்டுமென்றால் மணப்பெண்ணின் எடை-125 றாத்தலாக மட்டுமே இருக்கவேண்டும்."

125 றாத்தலில் மணமகள் தேடுவது ஒன்றும் பெரிய விசயமில்லைத்தான். ஆனால் மணமகனின் எடையைக் கேட்டவுடன் பெண்கள் தலைதெறிக்க ஓடிக்கொண்டிருக்கிறார்கள்.

ஆனாலும் தம்மி ஸ்ரோன் என்னும் பெண் மட்டும் (125தான்) தானாகவே விரும்பி வந்து மலையோடு பழகத் தொடங்கியிருக்கிறாள்.

தம்மியைக் கண்டபின் மலை சந்தோசமாகி வருகிறது. தம்மியும் அந்த செல்ல மலைக்கு வேடிக்கை காட்டியும், விஷமம் புரிந்தும் காதலைக் கொட்டி வருகிறாள்.


வீடு திரும்பியபின் திருமணம் நடத்திவைக்க ஸிமித்தின் அம்மா அடுக்குப் பண்ணிவருகிறார். ■



## தகவல் பெட்டி

## நன்றி-மீண்டும் வருக; வாகனத்தில் அல்ல!

## இங்கிலாந்தில் ஒரு விபத்துக் கிராமம்!!



வட இங்கிலாந்திலுள்ள ரிச்சாட்ஸ் என்னும் கிராமத்திற்கு நீங்கள் செல்ல வேண்டுமானால் நேராகச் செல்ல முடியாது. காரணம் செல்லும் பாதை வளைவு நெளிவானது.

அது மட்டுமல்ல நீங்கள் சைக்கிள் மூலமோ அல்லது நடந்தோ செல்வது தான் உங்களுக்கு நல்லது.

இல்லாவிட்டால் விபத்தில் சிக்கி விடுவீர்கள் என்பது நூற்றுக்கு நூறு வீதம் மகா உறுதியான விசயம்.

வளைவான சாலைகளில் விபத்துக்கள் நடப்பது வழக்கம்தான். ஆனால் ரிச்சாட்ஸ் கிராம சாலைகளில் வாகனத்தில் யார் எவர் சென்றாலும் நிச்சயம் விபத்து நடக்கும். கில்லாடியான சாரதியாக நீங்கள் இருந்தாலும் தப்ப முடியாது.

ரிச்சாட்ஸ் கிராமத்தின் மொத்த சனத்தொகை 358 பேர்தான். அதில் பாதிப்பேரிடம் வாகனம் இருக்கிறது. குறைந்த இரு விபத்திலாவது சிக்காத வாகனமே அதில் எதுவும் கிடையாது.

ரிச்சாட்ஸ் கிராம பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரியே இதுவரை ஆறு தடவை தனது வாகனத்தை ஆங்காங்கே மோத வைத்துவிட்டார். அமைப்பே மாறிவிட்டது பாருங்கள் என்று வருந்துகிறார்.

இந்த விபத்துக்கள் பற்றிக் கூறும் அந்த கிராமத்தவர்களிடம் கேட்டால், "இது டிங்காின் சாபம்" என்கிறார்கள்.

யார் அந்த டிங்கர்? தெய்வமல்ல-மனிதரேதான்.

டிங்கரும் அதே கிராமத்தைச் சேர்ந்தவர். அவரது மனைவி தெருவைக் கடக்கும்போது வாகனம் ஒன்று மோதி மரணமானார். பின்னர் சில மாதங்கள் கழித்து அதே தெருவில் அதே இடத்தில் டிங்கரும் ஒரு வாகனம் மோதிச் செத்துப்போனார்.

அன்றுமுதல் விபத்துகள் சகஜமாக நடப்பதாக சொல்கிறார்கள் கிராமத்தவர்கள். ■

ஆனால், அந்த கிராமத்தில் உள்ள வணக்கத்துக்குரிய மேட் ஹான்ஸ் கிராமத்தவர் பேச்சை மறுக்கிறார். "சாபம் எதுவும் கிடையாது. இதெல்லாம் சுத்தமான மூட நம்பிக்கை" என்கிறார் அவர்.

ஆனால் விசயம் என்னவென்றால் அவரது வண்டியும் விபத்தில் சிக்கியிருக்கிறது.

"சாபமோ கீபமோ அதெல்லாம் கிடக்கட்டும். ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு அந்த கிராமத்திற்கு வாகனம் எதுவும் செல்ல முடியாது என்று தடை விதிப்பது பற்றி ஆலோசிக்கிறோம்" என்று சொல்கிறது போக்குவரத்து பொலிஸ்.

இது விஞ்ஞானத்தால் விடுவிக்கப்படாத புதிரில் ஒன்றுதான். ●

## புதிய பூட்டு இது



பூட்டை உடைக்கும் கில்லாடித் திருடர்கள் பாடு இனிக் கஷ்டம்தான். புது வகையான கம்பியூட்டர் பூட்டு கண்டுபிடிக்கப்பட்டுவிட்டது. ஜெர்மனியில் பாவனைக்கு வந்துள்ள இந்த பூட்டில் என்ன விசேஷம் என்றால்; சாவியை துவாரத்தில் நுழைக்கத் தேவையில்லை. துவாரத்திற்கு நேரே வெளியே சாவியை காண்பிக்க வேண்டும். கதவில் இணைக்கப்பட்டிருக்கும் கம்பியூட்டர் சிக்னலோடு சாவியின் சிக்னலும் ஒத்துப்போனால் மட்டுமே கதவு திறக்கும். ●



## அன்பாய் கொடுத்த முத்தம் ஆபத்தாய் முடிந்ததய்யா!

"பாம்புக்குப் பால் வார்த்து வளர்த்தாலும்.." பாம்பு என்ன செய்யுமோ அதே வேலையைத்தான் தேளும் செய்யும். இரண்டுமே விஷ ஜந்துகள்தான். பாம்பை வளர்ப்பவர்கள் அதன் விஷப் பல்லைப் பிடுங்கிவிட்டே அதனுடன் விளையாடுவார்கள். ஆனால் தேள் செல்லப் பிராணியாக வளர்க்கப்பட்டால் அதன் விஷத்தினை எப்படி அகற்றுவது? இங்கிலாந்திலுள்ள கொஷம் என்ற நகரில் 18 வயதான ஜோக்கெஸ்ரர் ஜோர்டன் லஸெல்லி தனது செல்லப் பிராணியாகத் தேர்ந்தெடுத்தது ஒரு கருந்தேளை. அதற்கு ருவிக்கி என்று பெயரிட்டார். இது கடுமையான விஷம் கொண்டது. இருப்பினும் பக்குவமாக வளர்த்து வந்தார். அன்றொரு நாள் ஜோர்டன் தன் நண்பர்களுடன் ஒரு விருந்தில் கலந்துகொண்டார். மதுபானமும் பாவித்தார். போதை தலைக்கேறியது. எப்போதும் தன்னுடன் எடுத்துக்கொண்டு போகும் தனது அருமைக் கருந் தேளை வெளியே எடுத்தார். அதனைக் கையிலெடுத்து ஆசையுடன் தடவினார். அத்துடன் விடவில்லை. அருமையாக முத்தமும் கொடுத்தார். அப்போது அதனுடைய கொடுக்கால் தேள் மென்மையாக ஒரு சிறு கொட்டுக், கொடுத்தது. ஜோர்டன் என்ன நினைத்தாரோ தெரியவில்லை. தனது நாக்கை நீட்டி அதனை நக்கினார். உடனே அது தன் கொடுக்கால் முழுமையாகக் கொட்டிவிட்டது.

ஜோர்டன் துள்ளிக் குதித்தார். கூக்குரலிட்டார். உணவு விடுதியை விட்டு வெளியேறி தெரு வழியே கத்திக்கொண்டு ஓடினார். வெறி தலைக்கேறியதால் தான் தங்கள் நண்பன் ஆட்டம் போடுகிறான் என்று நண்பர்கள் கருதினர். தெருவால் ஓடியவன் நிலத்தில் விழுந்து துடிதுடித்தான். இதனைக் கண்டதும்தான் நண்பர்களுக்கு ஜோர்டனின் நிலை புரிந்தது. ஓடிச் சென்று அவனை மருத்துவமனைக்கு எடுத்துச் சென்றனர்.

கரும் தேளின் விஷம் இறங்கி ஜோர்டன் குணமடையப் பல நாட்கள் ஆகியது. "என் அன்பு 'ருவிக்கி'யை நான் எத்தனையோ தடவை முத்தமிட்டுள்ளேன். ஆனால் அதன் விஷக் கொடுக்கில் ஒரு போதும் முத்தவிடவில்லை. அன்று தவறுதலாக அதன் கொடுக்கினை நாக்கால் வருடினேன். அது என்னைக் கொட்டிவிட்டது" என்று தனது செயல் பற்றி நண்பர்களிடம் விமர்சித்தார். "இனிமேல் எப்போதும் நான் என் அன்புக்குரிய தேளுக்கு முத்தம் கொடுக்கவே மாட்டேன்" என்று கூறுகிறார் அவர். ■

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்





## தங்கையரே-தம்பியரே!

தங்கையரே.... தம்பியரே!
தங்கமான நண்பர்களே
உங்களுக்கு ஒரு வார்த்தை
உரைத்திடுவேன் கேட்டிடுவீரே!

அம்மா அப்பா சொல் கேட்டிடுங்கள்
அனைவரோடும் அன்பாய்ப் பழகிடுங்கள்
சும்மா சோம்பலென இருந்திடாதீர்கள்
சுறு சுறு ப்புடன் செயல் புரிந்திடுங்கள்.

பள்ளி சென்று படித்திடுங்கள்
பாடங்களை நன்றாய் கவனித்திடுங்கள்
து ள்ளிக் குதித்து விளையாடிடுங்கள்
தோழரோடு கை கோர்த்திடுங்கள்.

பொய்யை என்று ம் பேசிடாதீர்கள்
போக்கிடம் என்பது கிடைக்காது
மெய்யை என்று ம் கூறிடுங்கள்
மேன்மையுடன் வாழ்ந்திடலாம்.

செல்வி. ஏ.ஸீ. மஹீஸா-முதலைப்பாளி அ.மு.வி, பள்ளிவாசல்துறை.

"காற்றை யடைப்பது மனதாலே-இந்தக்
காயத்தைக் காப்பது செய்கையிலே;
சோற்றைப் புசிப்பது வாயாலே-உயிர்
துணி வுறுவது தாயாலே!"
-சுப்பிரமணிய பாரதியார்-

## பாப்பா முரசு சிறுகதை

# நந்திதேவரின் அன்னதானம்

தர்மபுரி நாட்டை நந்திதேவர் என்னும் மன்னர் ஆண்டு வந்தார். நந்திதேவர் மிகவும் நல்லவர். தூய சிந்தனையாளர். கொடை வள்ளல். தெய்வ பக்தி நிறைந்தவர்.



இப்படியான நந்திதேவரின் நாட்டில் ஒரு சமயம் பெரும் பஞ்சம் சூழ்ந்து கொண்டது. மக்கள் உணவும், நீருமின்றி அலைமோதினர். பலர் பட்டினியால் இறந்தனர்.

நந்திதேவர் தமது அரண்மனைக் களஞ்சியத்தில் சேமித்து வைத்திருந்த உணவுப் பண்டங்களை எல்லாம் மக்களுக்கு விநியோகித்தார். இருப்பினும் பஞ்சம் நீங்கிய பாடில்லை. முடிவில் நாட்டு மக்கள் அனைவருமே பட்டினியால் இறக்கும் சூழல் ஏற்பட்டது.

அந்நாட்டு மக்கள் அனைவரும் நாட்டை விட்டு புறப்பட்டனர். நந்திதேவரும் அரண்மனையை விட்டு விட்டு மனைவி, பிள்ளைகளுடன் மக்களைக் கூட்டிக்கொண்டு புறப்பட்டார். வழியில் ஓரிடத்தில் கூடாரம் கட்டி அதில் தங்கினார். அரண்மனையில் சுகவாசிகளாக வாழ்ந்த அவரின் மனைவியும் பிள்ளைகளும் உணவின்றி மிகவும் கஷ்டப் பட்டனர். நந்திதேவரும் அந்த ஊரில் இருந்த சில பண்ணையாளர்கள் வயலில் சென்று கூலி வேலை செய்தார்.

அவர்களை வேலைக்கு வைத்திருந்த பண்ணையாளர்கள், வேலைக்குச் சம்பளமாக சிறிது தானியம், மற்றும் நொருங்கிய பருப்புத் துகள்களையும் கொடுத்தனர். அவற்றை மகிழ்வுடன் பெற்று வந்த நந்திதேவர் தன் மனைவி மக்களுடன் அவை இரண்டையும் சேர்த்து ஒரு பொங்கல் செய்தார். அதனைத் தனது மனைவி, மக்களுடன் சேர்த்து அமர்ந்து உண்ண ஆரம்பித்தார்.

ஆனால் அவர் முதல் வாய் உணவை எடுத்துத் தனதுவாயில் வைக்கும் முன்பாக எங்கிருந்தோ ஒருவர் வந்தார். அவர், "பிரபோ! பசியால் எனக்கு உயிர் போகிறது. தயவு செய்து எனக்கு உண்ண ஏதாவது இருந்தால் தாருங்கள்," என்று கெஞ்சினார்.

உடனே நந்திதேவர் தங்களுடைய உணவில் ஒரு சிறு பகுதியை மகிழ்வுடன் அவரிடம் எடுத்துக்கொடுத்தார். பின் அவர்கள் சாப்பிட நினைத்தனர்.

அந்தச் சமயத்தில் ஆடு மேய்க்கும் சிறுவன் ஒருவன் வந்தான். அவன் பசியால் வாடுவதாக நந்திதேவரிடம் கூறினான். உடனே நந்திதேவர் மீதம் இருந்த உணவில் ஒரு பகுதியை எடுத்து அவனிடம் உண்ணும்படி கொடுத்தார்.

இதைப் பார்த்த அவரின் மனைவி, "பிரபோ! நாமே பசியால் செத்துக்கொண்டிருக்கிறோம். இந்த முறை நாம் பொங்கலை உண்டால், இனி நமக்கு அடுத்து எப்போது உணவு கிடைக்கும் என்று கூறமுடியாது. இப்படியாக இருக்கும்போது, இருக்கும் உணவையும் யாசகர் களுக்குக் கொடுத்து விடுகி றீர்களே. மீதம் இருக்கும் உணவையாவது தாருங்கள் பிள்ளைகள் பசியோடு இருக்கி றார்கள்," என்று வேண்டினாள்.

உடனே நந்திதேவர், "பிறர் பசியென்று கூறியதைக் கேட்ட பின்பும் அவர்களுக்கு ஏதும் கொடுக்காமல் தாம் மட்டும் உண்பவர் மனிதரல்ல. காகம் கூடத் தனக்குக் கிடைக்கும் உணவைத் தான் மட்டும் உண்ணாமல், மற்றக் காகங்களையும் கூவி அழைத்துப் பகிர்ந்து உண்ணுகிறது. ஒரு சாதாரண பறவைக்கு இருக்கும் அறிவுகூட மனிதர்களாகிய நமக்கு இல்லை என்றால் என்ன செய்வது? பசியென்று வந்தவர்க்குப் புசியென்று உணவு தருவதே தர்மம்," என்று கூறினார்.

பின்னர் மீதமிருந்த உணவை உண்ண எத்தனித்தபோது, ஒரு சுடலை காப்பவன் தன்னுடன் பரிவாரம் போல ஒரு நாய்க் கூட்டத்தைக் கூட்டி வந்தான். அவர்கள் கைகளில் இருந்த உணவைப் பார்த்த சுடலை காப்பவன், "தேவரே நானும் பரிவாரங்களும் பசியால் தடுமாறுகிறோம். தயைகூர்ந்து எமக்குச் சிறிது உணவு தாரும்," என்று கெஞ்சினான்.

நந்திதேவர் சிந்திக்கவோ, சிறிது தயக்கம் காட்டவோ இல்லை. மறுநிமிடம் மீதம் இருந்த சகல உணவையும் ஒரு பெரிய இலையில் கொட்டினார். அதனை அப்படியே அந்த ஆளின் கையில் கொடுத்து, "நீரும் உமது பரிவாரங்களும் இந்த உணவை உண்டு மகிழுங்கள்," என்று கூறினார். அவனும் மிக மகிழ்வுடன் புறப்பட்டான்.

அவன் போனவுடன் நந்திதேவரின் மனைவி, "ஏன் இப்படிச் செய்கிறீர்கள்? நாங்கள் உயிருள்ளவர்கள் இல்லையா? எமது பசியை நீங்கள் உணர மாட்டீர்களா? எமக்கும் உணவு தேவைதானே? எம்மைப் பட்டினி போடுவது மட்டும் நியாயமான செயலா?" என்று கேட்டார்.

உடனே நந்திதேவர், "உங்களது பசி எனக்குப் புரிகிறது. முதலில் உங்களது பசியைப் போக்குவது நியாயமில்லை. ஏனென்றால் அது சுயநலம். என் குடும்பத்தாரின் பசியைப் போக்குவது சுயநலம் நிறைந்த செயல். ஆனால் மற்றவர்கள் பசியைப் போக்குவது அப்படியானதல்ல. மேலும் என்னை நம்பி வந்து என்னிடம் உணவு கேட்பவர்களை நான் ஏமாற்ற விரும்பவில்லை" என்றார்.


அப்போது அங்கே சுடலை காப்போனாக வந்த சிவனும், ஆடு மேய்ப்பவனாக வந்த கிருஷ்ணபகவானும், மற்றொரு யாசகனாக வந்த பிரம்மாவும் நந்திதேவர் முன் தோன்றினார்கள். அவர்கள், "நந்திதேவரே உன்னைச் சோதிக்கவே நாங்கள் இப்படி வந்தோம். உனது தரும சிந்தனை எப்படி என்பதை அறியவே இப்படி வந்தோம்", என்று கூறினார்கள்.

மேலும் "நீ உன் நாடு திரும்பு. இனி உனது நாட்டில் மழை மும்மாரி பொழியும். நல்ல வளமாகப் பயிர்கள் விளையும். நாட்டின் பஞ்சம் நீங்கி நாடு சுபீட்சம் அடையும். உனது நாட்டின் புகழும், செல்வாக்கும் வானளாவ உயரும்," என்று வாழ்த்தி மறைந்தனர்.

மும்மூர்த்திகள் கூறியது போலவே நந்திதேவர் தன் நாடு திரும்பினார். அவர் நாடு திரும்பியதும் நாடு வளம் பெற்றது. ஏராளமாக விளைந்த பயிர்களால் மக்கள் பசி பட்டினி இன்றி சந்தோஷமாக வாழ்ந்தனர்.


## வைரங்கள்

- **வைரங்கள் விலை மதிப்பற்றவை என்று கூறப்படுவது ஏன்?**
  *அவை மிக அழகான கற்கள். முற்காலத்தில் வைரங்கள் வியாதிகளை நீக்கும், கெட்டவைகளைப் போக்கும் என்ற நம்பிக்கை இருந்தது. அதனால்தான் விலைமதிப்பற்றவை என்று கூறப்படுகின்றது.*



- **வைரங்கள் முதலில் எங்கு எடுக்கப் பட்டன?**
  *இந்தியாவில் 18ம் நூற்றாண்டு வரை மட்டுமே வைரங்கள் எடுக்கப்பட்டன. பிரேசில் நாட்டில் 1725ம் ஆண்டும் ஆபிரிக்காவில் 1870ம் ஆண்டும் பெரிய வைரச் சுரங்கங்கள் இருப்பது கண்டு பிடிக்கப்பட்டன.*
- **வைரம் மிக உறுதியானதா?**
  *ஆமாம்.*
- **மேற்கத்திய நாடுகளில் திருமணம் நிச்சயம் செய்யப்படும்போது அணியப் படும் மோதிரம் வைர மோதிரமாக இருப்பது ஏன்?**
  *ஐரோப்பாவில் ஆஸ்திரிய நாட்டு இளவரசர் தனக்கு மனைவியாகப் போகும் பெண்ணின் விரலில் வைர மோதிரம் அணிவித்தார். இப்போதும் இந்த பழக்கம் மேற்கத்திய நாடுகளில் பின்பற்றப்பட்டு வருகிறது.*
- **செயற்கை வைரங்கள் எப்போது தயாரிக்கத் தொடங்கினார்கள்?**
  *செயற்கை வைரங்களை 1950ல் தயாரிக்கத் தொடங்கினார்கள்.*

## சிறந்த வர்ணத்திற்குப் பரிசுதரும் எண்ணம்!




மேலே உள்ள படத்திற்கு வர்ணம் தீட்டி தபாலட்டையில் ஒட்டி அனுப்புங்கள். சிறந்த வர்ணம் ஒன்றுக்கு பரிசு ரூபா 25/= காத்திருக்கிறது. அனுப்பவேண்டிய கடைசித் திகதி 05.11.1994.

வர்ணம் தீட்டும் போட்டி இல: 63
தினமுரசு வாரமலர்
த.பெ.இல.1772
கொழும்பு.

### வர்ணம் தீட்டும் போட்டி இல. 61

பரிசுக்குரியவர்
ஆர்.இந்திரதேவி- நுவரெலியா.

பாராட்டுக்குரியவர்கள்

செல்வி-சி.அகிலா-ஸ்ரீஇராமகிருஷ்ண வித்தியாலயம், மண்டூர்.
சந்தியா திவானி லோரன்ஸ்
சவுதம் தமிழ் மகா வித்தியாலயம், தெமோதர.
முன்ஸிபா ஹத்தாத்-தாருல் உலூம் மகா வித்தியாலயம், மாத்தறை.
முஹம்மது இருசாத்-எஹலியகொட.
ராஷிதா ஹுசைன்-முஸ்லிம் மகா வித்தியாலயம், திருகோணமலை.
செல்வி.ப.ஷாலினி-டெமோரியா தமிழ் வித்தியாலயம், பசறை.
ஐ.அஸ்மி அஹமட்- மின்ஹாத் ம.வி, திக்குவல்லை.
ஞா.சூசைதாஸ்-திரேசாள் ஆலயம்-வாழைச்சேனை.

## அறிவோம் மனதில் பதிவோம்



*அமெரிக்காவில் கலிபோர்னியா மாநிலத்தில் உள்ள புகழ்பெற்ற நகரம் லொஸ் ஏஞ்சலீஸ். இதன் முழுப் பெயர், 'எல் புயப்லோ டி நஸ்ட்ரோ செனோரா லா ரீனா டி லொஸ் ஏஞ்சலீஸ் டி போர்சியன்குலா' இதன் சுருக்கம்தான் லொஸ் ஏஞ்சலீஸ். இப்போது இதையும் சுருக்கி எல்.ஏ என்கிறார்கள்.*




*வடதுருவப் பகுதிகளில் வாழும் ஒருவகை விலக்கு உல்வரைன். இது மிகவும் கொடியது. பசி இல்லாவிட்டாலும்கூட கண்ணில்படும் விலங்கைத் தாக்கிக் கொல்லும். அப்பகுதிகளில் வாழும் கரடி, புலி போன்ற விலங்குகள்கூட இதற்குப் பயப்படும்.*

*டர்போஜெட் இன்ஜின்கள் கொண்ட அதிவேக விமானம் 1939ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 27ம் திகதி முதன் முதலாகப் பறந்தது. இந்த விமானத்தை வடிவமைத்தவர் ஜெர்மனியைச் சேர்ந்த டாக்டர் ஹேன்ஸ்.*

## புள்ளிகளில் கைவண்ணம்

இனிய சிறுவர்-சிறுமியரே! படத்தில் ஒளிந்திருப்பது என்னவென்று தெரிகிறதா? 35 புள்ளிகளையும் இணைத்துப் பார்த்து தெரிந்து கொள்ளலாமே!



## விடுகதைகளும் விடைகளும்

01. அங்கமுத்து வாசலிலே தங்கமுத்து காய்கிறது. அது என்ன?
02. மந்திரி வாசலில் முந்திரி பூக்குது. அது என்ன?
03. இறைவன் போட்ட பெட்டி. எத்தனை போட்டாலும் நிரம்பாது. அது என்ன?
04. இரவிலே பூந்தோட்டம், காலையிலே வெறும் தோட்டம். அது என்ன?
05. கண் உண்டு ஆனால் பார்க்க மாட்டான். அது என்ன?
06. செம்பு நிறையக் கொம் புண்டு. அது என்ன?

**விடைகள்**

01. மிளகாய் 02. விளக்கு
03. வயிறு 04. நட்சத்திரம்
05. தேங்காய் 06. பல்லு.

க.ரசிகலா
விவேகானந்தாக் கல்லூரி.

01. யானை படுக்க நிழலுண்டு. மிளகு உருட்ட இடமில்லை. அது என்ன?
02. சேலத்துச் செம்புறா, செல்லமாம் பச்சைப்புறா, மாடத்து மணிப்புறா. அது என்ன?
03. கோப்பை நிறைய வெள்ளை முத்து. அதுவென்ன?
04. வளைக்கலாம், சத்தம் காட்டலாம், இதைக் கொண்டு உண்ணலாம். ஆனால் பிடுங்கி எடுக்க முடியாது. அது என்ன?
05. அடிக்காமல் அழுவான். அவன் யார்?
06. வெயிற்காலங்களில் வீட்டின் மூலையில் கிடப்பான். மழை வந்ததும் உலாவி வருவான். அவன் யார்?

**விடைகள்**

01. கள்ளி
02. பாக்கு, வெற்றிலை, சுண்ணாம்பு
03. பல் 04. விரல்
05. ஐஸ்கிறீம் 06. குடை

முஹம்மட் இர்பான்ஸாலி
மாளிகாஹேன முஸ்லிம் மகா வித்தியாலயம், பேருவளை.

## கணித விநோதம்

16 சதுரங்களை சச்சதுரமாக, (4X4) அமைத்து 01 தொடக்கம் 16 வரையுள்ள இலக்கங்களை பயன்படுத்தி குறுக்காகவும், நீட்டாகவும் மூலைவிட்டமாகவும் கூட்டும்போது கூட்டுத்தொகை 34 பெறும்படும் முறையைப் பாருங்கள்.

| | | | |
|---|---|---|---|
| 16 | 2 | 3 | 13 |
| 5 | 11 | 10 | 8 |
| 9 | 7 | 6 | 12 |
| 4 | 14 | 15 | 1 |

கந்தப்பெருமாள் இதயவேனி
மாங்காடு ச.வி.
செட்டிபாளையம்

# தேன் கிண்ணம்

### துடுப்பு தேடும் ஓடங்கள்!

குருதிமைதொட்டு
மண்ணின் மேனியில்
போர் ஓவியம் வரையும்
ஆயுதத் தூரிகைகளினால்
ஆயிரம் காரிகைகளின்
கண்ணீர்த் துளிகளாலேயே
என் தேசமெங்கும்
ஓடுகின்ற வறுமையாற்றில்
எங்களின் வாழ்க்கைப்படகு
சந்தோஷத் துடுப்பிழந்து
தள்ளாடுகின்றது.

ஆயுதங்கள்
தகர்த்துப்போட்ட
எங்களின் வீடுகளை
புனரமைப்பதற்காய்
ஊருக்குள்
கற்கள் தேடும்
எங்கள் கரங்களில்
கிடைப்பதெல்லாம்
மண்டையோடுகளே...

சமாதானத்திற்காய்
அனுப்பப்படுகின்ற
வெண்புறாக்களும்
எங்களின்
சோகங்கள் கேட்டு
பறந்துபோய்
பயங்கரவாத
முருங்கைகளில்
ஏறிக்கொள்கின்ற
வேதாளங்களாகின்றன.

விடிவை நோக்கி
விழித்திருக்குமெங்கள்
விழிகளின் முன்னே
கிழக்குகள் தகர்க்கப்படும்
வழக்குகளை விசாரிக்கும்
நீதிமன்றங்களின்றி
அநாதைகளாய்
அகதிமுகாம்களில்
உருகிக்கொண்டிருக்கும்
பல ஜீவ மெழுகுவர்த்திகள்
எப்போது ஒளி வீசமென்று
தீபங்களுக்கே தெரியாது.


நேற்றுகளில் வாழ்வின்
நம்பிக்கையோடு பிறந்தும்
இன்றில் பிறப்பையும்
நம்ப முடியா சலனங்கள்!

எங்கள் சலனங்கள்
சலவை செய்யப்பட்டு,
சந்தோஷம் விதைக்க
எங்களுக்கோர்
சமாதானக் காணி வேண்டும்.

நாங்கள்
மனுஷவேட்டையாடும்
ஆயுத மிருகங்களை
கேட்கவில்லை..
இயற்கையே நீயாவது
உதவுவாயென்றுதான்..
.........
.........
.........!

பூண்டுலோயா
மெய்யன் நட்ராஜ்.

### படுத்திருக்கும் கவிதை....



நான்
செத்துப் போனவன்

••

இத்துப் போயிட்டு
என்
இருதயம்.

••

ஆனால்
நீ...இருந்துபோன
ஓரம் மட்டும்..

••

பனித்துளிகளை
உடுத்துக்கொண்டு
குப்புறப் படுக்கிறேன்
உன்–நினைவில்....

••

இப்போது
நீ இல்லாத
இதயத்தில்
உன் நினைவு
சூடாகும் நேரம்
இது..!



••

நீ...முத்தமிட்ட
கன்னங்கள்
நிலாக்காயும் நேரம்
இது...!

••

ஏன்–உன்
வாய்க்குள்
மௌனத்தை
சுருட்டி வைத்திருக்கின்றாய்?

••

என்னோடு
எவ்வளவோ பேசியிருக்கிறாய்
நான் சொல்லித்தான்..

••

என்
கைகளை
உடைத்தெறி
கவிதை எழுதமாட்டேன்.
என்
கால்களை
வெட்டி எறி
உன் வீட்டு வாசலுக்கு
வரமாட்டேன்.
என்
கண்களைத் தோண்டி
எடு
உன்னைப் பார்க்கவே
மாட்டேன்.
ஆனால்..

••

என்...உயிர்

••

உன் மௌனத்தின்
ஓரத்தால் பதுங்கி
வரும்.

••

உன் முரட்டுக் கோபத்தின்
சுவர் வழியாக
எட்டிப் பார்க்கும்.

பொத்துவில்
பௌர்ணமி நிலா.

### நதி செதுக்கிய மரண ஓவியம்...!

அந்த...
நதிக்கரையின்
கற்பாறை யொன்றில்
குந்திக்கொண்டு...
மணிக் கணக்காக
சிந்திக்கிறேன்..!

•

வானம்; சூரியன்
மலை முகடுகள்
வளைந்து நெளிந்தோடும்
இந்த அழகான நதி..
எல்லாமே என் கண்களுள்
ஊடறுத்துக்கொண்டன..!

•

மனப்பிரளயத்தில்
முட்டி மோதித் திரும்பும்
சிந்தனையலைகளுக்கு
என் வாழ்வின்–
அர்த்தங்களை சொல்லிவிட
முடியுமா...என்ன..?

•

மரணத்தின்
நெற்றியில் வாழ்வை
எழுதிய பிரம்மனை
நான் எப்படி நோவது..?

•

அப்படியிருக்க
சூரியனை மலை
விழுங்கி விட்டதாக
வானம் அழுதது..

•

வானெங்கும்
ஓரே கும் மிருட்டு
இரவு பகல்,
ஆண் பெண் என..
பிரித்தறிய முடியாத
இருட்டு..

•

இறந்துபோன
உயிர்கள் எழுந்து
தம் சொந்தங்களை தேடும்
கடுமையான இருட்டு..

•

சர்வமும் தூங்கிவிட்டது
போலும்,
நான் மட்டும்
கற்பாறையிலிருந்து
எழுந்து..
உழன்று நடக்கிறேன்..!

•

இறைவன்
இருக்கிறானா இல்லையா?
என்பதுகூட
ஞாபகத்திலில்லை
ஆனால்;
மனிதர்களிருப்பதாய்
ஒரு சந்தோஷம்...!

பொத்துவில் ஏ.மஜீத்.

### என்னைச் சுமந்து செல்!

காற்றில்
உன்
முந்தானை என்னை
உரசாமல் உரசுது!

உன்
அகலமான விழிகள்
என்னை
பந்தாக தடவுது!

உன்
ஒய்யார நடையில்
நான்
இல்லியானேன்!

உன்
சிங்காரச் சிரிப்பில்
சில்லறையானேன்!

முகக் கட்டில்
முகக் குறியானேன்!

மதி முகத்துக்கு
முன்னால்
தேய் பிறையானேன்!

குழி விழும்
கன்னத்தில்
புதைந்து போனேன்!

வர்ணச் சேலையில்
வானவில்லானேன்!

பூங்கொடி இடையில்
நாத்து ஆனேன்!

நீ
படிக்கும் விழிக்கு
தினசரியானேன்!

பள்ளிக்கூடப் பாவையே..
புத்தகம் சுமக்கும்
மார்பில்
என்னைச் சுமந்து செல்!

ஷஹிர்ஷா தாஸிம்
தர்கா நகர்.

### மண் சரிவு

மழை
மனிதர்கள்
நடந்து போன சுவடுகள்!

### சேறு

மழைக் குழந்தைகள்
மண்ணில்
விளையாடியதன் பயன்!

### முதலாளி

ஒவ்வொரு...
தொழிலாளியின்
முதுகுகளிலேறி...
பத்தாவது மாடியில்
குடியிருப்பவர்!

### புதுக்கவிதை

மரபுகளை மறந்து
புதுமையாய்...
உடையணிந்து
எளிமையாயிருந்தாள்!

சிலரவளை
உரசிச் சென்றனர்!
பலரவளைப்(ப்)
பற்றிப் பிடித்தனர்!
நான்
மட்டும் என்னவாம்?
நானும்
அவள் மடியில்தான்!

சோ.ஸ்ரீதரன்
பொகவந்தலாவை.

# தீபாவளிச் சிந்தனை




# எவருக்கு எது?

நம் அரசியல் தலைவர்களை எந்தெந்த படங்கள் பார்க்க அனுப்பிவைத்தால் நல்லாயிருக்கும் என்று யோசித்தபோது தோன்றியவை:



டி.பி. விஜேதுங்கா– தப்புத் தாளங்கள்
சந்திரிக்கா– அம்மா பொண்ணு
காமினி– மணல் கயிறு
பிரபாகரன்– உன்னால் முடியும் தம்பி
தொண்டமான்– தனிக்காட்டு ராஜா
அஷ்ர.்.ப்– நீ பாதி நான் பாதி
சிறிமா– தாய்ப்பாசம்
அநுரா– விதி
சந்திரசேகரன்– நல்லநேரம்



"அந்த மருந்துப்புட்டி மேலே ஏன் சிலுக்கு சுமிதா படம் போட்டிருக்கு?"

"மருந்தைக் குலுக்கிச் சாப்பிடணும்னு அர்த்தம்."

# இந்த வாரம் உங்கள் பலன்

(30.10.94 முதல் 05.11.94 வரை)

சோதிட மாமணி 'தில்லை'

### மீனம்: சுப நேரம்

(பூரட்டாதி, நாலாங்கால், உத்திரட்டாதி, ரேவதி)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | தொழில் சிறப்பு, கௌரவம். | பி.ப. 2 மணி |
| திங்கள்- | அந்நியர் உதவி, அதிகார விருத்தி. | காலை 7 மணி |
| செவ்வாய்- | பொருள் வரவு, இடமாற்றம். | பி.ப. 1 மணி |
| புதன்- | கடன் தொல்லை, காரியத்தடை. | காலை 8 மணி |
| வியாழன்- | தெய்வானுகூலம், மனப்பயம் நீங்கும். | பி.ப. 2 மணி |
| வெள்ளி- | தொழில் மந்தம், பணத்தட்டுப்பாடு. | காலை 6 மணி |
| சனி- | அதிகார விருத்தி, மனமகிழ்ச்சி. | பகல் 12 மணி |

அதிஷ்டநாள்-வியாழன், அதிஷ்ட இலக்கம்- 1

### மேடம்: சுப நேரம்

(அச்சுவினி, பரணி, கார்த்திகை முதற்கால்)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | தொழில் மந்தம், பணச் செலவு. | பி.ப. 2 மணி |
| திங்கள்- | முயற்சி பலிதம், காரிய நன்மை. | காலை 6 மணி |
| செவ்வாய்- | பெரியோர் உதவி, பொருள் வரவு. | பகல் 12 மணி |
| புதன்- | எதிர்ப்பு நீங்கும், சுபகாரிய மகிழ்ச்சி. | காலை 7 மணி |
| வியாழன்- | அந்நியர் நட்பு, அரச சன்மானம். | பி.ப. 1 மணி |
| வெள்ளி- | தொழில் விருத்தி, உயர்ந்த நட்பு. | காலை 8 மணி |
| சனி- | மனக்குறை நீங்கும், கௌரவம். | பி.ப. 1 மணி |

அதிஷ்டநாள்-செவ்வாய், அதிஷ்ட இலக்கம்-9

### இடபம்: சுப நேரம்

(கார்த்திகைப் பின்முக்கால், ரோகிணி,மிருகசீரிடத்துமுன்னரை)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | பொருள் வரவு, காரியசித்தி. | காலை 7 மணி |
| திங்கள்- | தொழில் சிறப்பு, முயற்சி வெற்றி. | பகல் 12 மணி |
| செவ்வாய்- | மறைமுக எதிர்ப்பு, புதிய முயற்சி. | காலை 6 மணி |
| புதன்- | அந்நியர் நட்பு, செலவு மிகுதி. | பி.ப. 1 மணி |
| வியாழன்- | திடீர் பிரயாணம், தேகசுகம் பாதிப்பு. | காலை 7 மணி |
| வெள்ளி- | கடன்தொல்லை, மனக் கவலை. | பகல் 12 மணி |
| சனி- | தொழில் சிறப்பு, பணக்கஷ்டம். | காலை 8 மணி |

அதிஷ்டநாள்-வெள்ளி, அதிஷ்ட இலக்கம்-6

### மிதுனம்: சுப நேரம்

(மிருகசீரிடத்துப் பின்னரை, திருவாதிரை, புனர்பூசத்து முன் முக்கால்)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | பெரியோர் நட்பு, மனமகிழ்ச்சி. | பி.ப. 2 மணி |
| திங்கள்- | குடும்ப சுகம், புதிய முயற்சி. | காலை 6 மணி |
| செவ்வாய்- | அந்நியர் சகவாசம், மனக் கலக்கம். | பகல் 12 மணி |
| புதன்- | உறவினர் பகை, கடன் சுமை. | காலை 6 மணி |
| வியாழன்- | மனக்குறை நீங்கும், முயற்சி பலிதம். | பி.ப. 1 மணி |
| வெள்ளி- | தொழில் சிறப்பு, பொருளாதார நன்மை. | காலை 7 மணி |
| சனி- | தன லாபம், குடும்ப சுகம். | பி.ப. 2 மணி |

அதிஷ்டநாள்-புதன், அதிஷ்ட இலக்கம்-3

### கும்பம்: சுப நேரம்

(அவிட்டத்துப் பின்னரை, சதயம், பூரட்டாதி)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | பொருள் வரவு, மனமகிழ்ச்சி. | காலை 6 மணி |
| திங்கள்- | வெளியிடப் பயணம், பொருள் இழப்பு. | பி.ப. 1 மணி |
| செவ்வாய்- | குடும்ப சுகம், தேகசுக நன்மை. | பி.ப. 3 மணி |
| புதன்- | கடன் தொல்லை நீங்கும், செலவு மிகுதி. | பகல் 12 மணி |
| வியாழன்- | செய்தொழில் விருத்தி, முன்னேற்றம். | காலை 7 மணி |
| வெள்ளி- | உறவினர் கலகம், மனப்பயம். | காலை 6 மணி |
| சனி- | காரியசித்தி, பொருள் வரவு. | பகல் 12 மணி |

அதிஷ்டநாள்-புதன், அதிஷ்ட இலக்கம்- 7

### மகரம்: சுப நேரம்

(உத்தராடத்துப் பின்முக்கால், திருவோணம், அவிட்டத்து முன்னரை)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | உறவினர் கலகம், வீண் பகை. | பகல் 12 மணி |
| திங்கள்- | துயர் நீங்கும், பொருள் பேறு. | காலை 8 மணி |
| செவ்வாய்- | வெளியிட வாழ்க்கை, மனக்குறை. | பி.ப. 1 மணி |
| புதன்- | பொருளாதார நன்மை, கௌரவம். | காலை 9 மணி |
| வியாழன்- | அந்நியர் நட்பு, செல்வாக்கு. | பி.ப. 2 மணி |
| வெள்ளி- | காரியசித்தி, பொருள் வரவு. | பகல் 12 மணி |
| சனி- | மறைமுக எதிர்ப்பு,பணக்கஷ்டம். | காலை 6 மணி |

அதிஷ்டநாள்-சனி, அதிஷ்ட இலக்கம் -5

### நவக்கிரக சஞ்சாரம்

| | |
|---|---|
| துலாம் | - சூரியன், வியாழன், வெள்ளி, இராகு |
| கும்பம் | - சனி |
| மேடம் | - கேது |
| கர்க்கடகம் | - செவ்வாய் |
| கன்னி | - புதன் |

சந்திரன்– சிம்மம், கன்னி, துலாம் ஆகிய இராசிகளில் சஞ்சரிப்பார். (03.11.94ல் துலா புதன். 4.11.94ல் விருட்சிக வியாழன்)

### கர்க்கடகம்: சுப நேரம்

(புனர்பூசத்து நாலாம் கால், பூசம், ஆயிலியம்)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | தொழில் சிறப்பு, முயற்சி வெற்றி. | காலை 7 மணி |
| திங்கள- | பெரியோர் நட்பு, மனமகிழ்ச்சி. | பி.ப. 1 மணி |
| செவ்வாய்- | வெளியிடப் பயணம், கௌரவம். | காலை 10 மணி |
| புதன்- | செலவு மிகுதி, கடன் சுமை. | பகல் 12 மணி |
| வியாழன்- | தொழில் இலாபம், உயர்ந்த நோக்கம். | காலை 9 மணி |
| வெள்ளி- | எதிர்ப்புகள் அதிகம், செல்வாக்கு குறைவு. | பி.ப. 1 மணி |
| சனி- | குடும்ப சுகம், உயர்ச்சி நிலை. | காலை 6 மணி |

அதிஷ்டநாள்-திங்கள், அதிஷ்ட இலக்கம்- 2

### சிம்மம்: சுப நேரம்

(மகம், பூரம், உத்தரத்து முதற்கால்)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | பொருள் சிறப்பு, மனக்குறை நீங்கும். | பகல் 12 மணி |
| திங்கள்- | தொழில் உயர்ச்சி, கௌரவம். | காலை 6 மணி |
| செவ்வாய்- | பயனற்ற செயல், செலவு மிகுதி. | காலை 10 மணி |
| புதன்- | இடம் பெயர்வு, மனக் கவலை. | பி.ப. 1 மணி |
| வியாழன்- | வெளியிடவாசம், பணத்தட்டுப்பாடு. | பகல் 12 மணி |
| வெள்ளி- | மனக்குறை நீங்கும், செய்தொழில் விருத்தி. | காலை 7 மணி |
| சனி- | உறவினர் உதவி, முயற்சி பலிதம். | பகல் 10 மணி |

அதிஷ்டநாள்-செவ்வாய், அதிஷ்ட இலக்கம்- 9

### தனு: சுப நேரம்

(மூலம், பூராடம், உத்தராடத்து முதற்கால்)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | தொழில் சிறப்பு, பணவரவு. | காலை 7 மணி |
| திங்கள்- | எதிர்பார்த்த நன்மை, மகிழ்ச்சி. | பகல் 11 மணி |
| செவ்வாய்- | பொருள் நட்டம், வீண் குறைகேட்டல். | காலை 9 மணி |
| புதன்- | திடீர் பிரயாணம், செலவு மிகுதி. | பகல் 1 மணி |
| வியாழன்- | அந்நியர் நட்பு, தொழில் மேன்மை. | காலை 6 மணி |
| வெள்ளி- | பெரியோர் உதவி, கௌரவம். | பகல் 12 மணி |
| சனி- | செலவு அதிகம், மனச் சஞ்சலம். | காலை 8 மணி |

அதிஷ்டநாள்-வியாழன், அதிஷ்ட இலக்கம் -4

### விருட்சிகம்: சுப நேரம்

(விசாகத்து நாலாங்கால், அனுஷம், கேட்டை)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | பொருள் வரவு, முயற்சி வெற்றி. | காலை 7 மணி |
| திங்கள்- | உயர்ந்த நிலை, முன்னேற்றம். | பகல் 12 மணி |
| செவ்வாய்- | தனலாபம், கௌரவம். | காலை 10 மணி |
| புதன்- | வெளியிட வாழ்க்கை, செலவு மிகுதி. | பி.ப. 1 மணி |
| வியாழன்- | மனக் கலக்கம், உறவினர் இழப்பு. | காலை 8 மணி |
| வெள்ளி- | பெரியோர் சகவாசம், மன மகிழ்ச்சி. | பகல் 12 மணி |
| சனி- | செலவு மிகுதி, பணத்தடை. | பி.ப. 2 மணி |

அதிஷ்டநாள்-செவ்வாய், அதிஷ்ட இலக்கம்-8

### துலாம்: சுப நேரம்

(சித்திரையின் பின்னரை, சுவாதி, விசாகத்து முன் முக்கால்)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | தொழில் இலாபம், முயற்சி வெற்றி. | காலை 6 மணி |
| திங்கள்- | அந்நியர் உதவி, தேகசுகம் பாதிப்பு. | பகல் 11 மணி |
| செவ்வாய்- | எதிர்ப்புகள் நீங்கும், பணப்புழக்கம். | பகல் 12 மணி |
| புதன்- | உத்தியோக நன்மை, பணச் செலவு. | காலை 7 மணி |
| வியாழன்- | தெய்வானுகூலம், மன மகிழ்ச்சி. | காலை 6 மணி |
| வெள்ளி- | தொழில் விருத்தி, முயற்சி பலிதம். | பி.ப. 2 மணி |
| சனி- | மனக்குறை நீங்கும், பலவித நன்மை. | பகல் 12 மணி |

அதிஷ்டநாள்-வெள்ளி, அதிஷ்ட இலக்கம்- 6

### கன்னி: சுப நேரம்

(உத்தரத்துப் பின்முக்கால், அத்தம், சித்திரையின் முன்னரை)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | தொழில் சிறப்பு, பொருள் வரவு. | பகல் 11 மணி |
| திங்கள்- | கடன் தொல்லை நீங்கும், மன மகிழ்ச்சி. | பி.ப. 1 மணி |
| செவ்வாய்- | பெரியோர் நட்பு, அரச சன்மானம். | காலை 8 மணி |
| புதன்- | பொருள் வரவு, தேகசுகம் பாதிப்பு. | பி.ப. 2 மணி |
| வியாழன்- | வெளியிட வாழ்க்கை, செலவு மிகுதி. | பி.ப. 1 மணி |
| வெள்ளி- | தனலாபம், உறவினர் உதவி. | காலை 8 மணி |
| சனி- | பொருள் நட்டம், பணத்தடை. | பகல் 12 மணி |

அதிஷ்டநாள்-புதன், அதிஷ்ட இலக்கம்- 5

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்



# மருத்துவ ✚ விந்தைகள்

## அகத்தின் நோய் முகத்தில் தெரியும்

### இலண்டன் டாக்டரின் புதிய கண்டுபிடிப்பு

அகத்தின் அழகு முகத்தில் தெரியும் என்பார்கள். அழகினை மட்டுமல்லாமல் உடலில் ஏற்படும் நோய்களையும் முகம் காட்டிவிடும். கண், காது, மூக்கு, வாய்போன்ற அவயவங்களில் அவ்வப்போது தோன்றும் சில மாற்றங்களும் உடலில் ஏற்படும் நோய்களுக்கான அறிகுறிகளே என்று டாக்டர் ஜொன் சாண்டிஃபெர் கூறுகிறார். இவர் மேலைத்தேய மருத்துவ் முறையில் மட்டுமல்லாமல் கீழத்தேய மருத்துவ முறைகளையும் கற்றறிந்தவர். தற்போது இலண்டனில் மருத்துவராகப் பணி புரிகிறார்.

முகத்திலுள்ள கண், காது, மூக்கு, வாய் போன்ற அவயவங்கள் உடலினுள் தோன்றும் நோய்களுக்கேற்ப மாற்றமடைகின்றன. இதனால் ஆயுர்வேத, சித்த மற்றும் சீனா, ஜப்பான் போன்ற நாடுகளில் நடைமுறையிலுள்ள சுதேச வைத்திய முறைகளைக் கற்றறிந்தவர்கள், ஒரு நோயாளியின் முகத்தை உற்று நோக்கியவுடனே அந்நபருக்குள்ள நோய் இன்னதுதான் என்பதைக் கண்டு பிடித்து விடுகின்றனர். நோய் இன்னதுதான் என்று கண்டு கொண்டால் மருத்துவம் பார்ப்பது மிகமிகச் சுலபமாகிவிடும். இரத்தப் பரிசோதனை மூலமோ வேறு எந்தப் பரிசோதனைகளின் மூலமோ நோயினைக் கண்டுபிடிக்க வேண்டிய அவசியம் கிடையாது. இவ்வாறு டாக்டர் சாண்டிஃபெர் கூறுகிறார்.

அவர் தந்துள்ள விபரங்கள் வருமாறு:

• **கன்னம்**– நுரை ஈரலைப் பிரதிபலித்துக் காட்டும் பணியினை கன்னம் செய்கிறது. இனிப்புப் பண்டங்களை அதிகம் உண்பவர்களின் கன்னங்கள் உப்பிக் காணப்படும். அத்துடன் வேண்டப்படாத புள்ளிகளும் தென்படும். கொழுப்புள்ள பால் மற்றும் பாற்பண்ணைப் பொருட்களான வெண்ணை, பாற்கட்டி மற்றும் பாலோடு அதிகமாக உட்கொள்ளுபவர்களுக்கும் கன்னங்களில் புள்ளிகள் தென்படுகின்றன.

நுரை ஈரலில் இத்தகைய பண்டங்கள் சளி பிடிப்பதற்கு வித்திடுகின்றன. இரத்தத்தையும் வேகமாக ஓடவொட்டாமல் தாமதப்படுத்துகின்றன. இக்கால கட்டங்களில் கன்னங்களில் ஒருவகைச் செந்நிறம் படர ஆரம்பிக்கும்.

• **உதடுகளும் நாடியும்**– மேல் உதடு வயிற்றைப் பொதுவாகவும் கீழ் உதடு குடலையும் பிரதிநிதித்துவப்படுத்துகின்றன. கீழ் உதடு பருத்து வெடிப்புகளுடன் காணப்பட்டால் பெருங் குடலில் ஏதோ பிரச்சனை தோன்றியுள்ளது என்று கொள்ளலாம். மாமிசக் கொழுப்பு, சீனி மற்றும் மாச்சத்துக் கூடுதலாக உண்போருக்கு இத்தகைய அடையாளங்கள் தென்படும்.

ஒரு பெண்ணின் வாயைச் சுற்றியும் நாடியிலும் வரிகள் அல்லது வட்டங்கள், அரைவட்டங்கள் தோன்றுமானால் அவள் கர்ப்பமுண்டாகியிருக்கிறாள்– விரைவில் தாயாகப் போகிறாள் என்று கூற முடியும்.

**மூக்கு:** இருதயத்தின் படப்பிடிப்பாக மூக்குத் தென்படுகிறது. இருதயக் கோளாறு, இரத்த அமுத்தம் ஆகிய பாதிப்புக்குள்ளானோரை மூக்கு காட்டிக்கொடுத்து விடுகிறது. மூக்கில் வெண்மை தோன்றுமானால் இரத்த ஓட்டம் சீராகவில்லை என்று கூறிவிட முடியும். பச்சைக் காய்கறிகளை போதுமான அளவு உண்டால் இரத்த ஓட்டம் துரிதமாகிவிட வழி பிறக்கும்.

அதிகமான மது போதையிலுள்ளவர்களின் மூக்கு சிவந்து போயிருக்கும்.

• **நெற்றியும் புருவமும்:** சிறுநீர்ப் பையிலும் குடலிலும் உள்ள சீர்குலைவுகளை நெற்றி காட்டி விடுகிறது. சீனி, பால், பழரசம் போன்றவற்றாலும் மருந்துகளின் வேகத்தாலும் சிறு குடலும் சிறுநீர்ப் பையும் பாதிப்படையும்போது நெற்றியிலும் புருவத்தின் அருகிலும் கறுப்பு அடையாளங்கள் தென்படுகின்றன. கரும் புள்ளிகள் அதிக கொழுப்பு-இவை இரண்டிலும் சேர்ந்துள்ளதைப் பிரதிபலிக்கின்றன.

• **கண்:** கண்கள் உடலின் பலதரப்பட்ட நோய்களுக்கும் கண்ணாடியாக விளங்குகின்றன. குறிப்பாக பாலியல் ரீதியான தாபம் ஏற்படுவதை கண்கள் தெளிவாகக் காட்டி விடுகின்றன. கண்களைக் கூர்ந்து பார்த்தே ஒரு நபரின் பல வியாதிகளை அனுபவ வைத்தியன் கண்டு கொள்ளுகிறான். இரத்தம் சுத்தமானதாக இல்லை, அதன் ஓட்டம் மந்த கதியில் உள்ளது என்பனவற்றையெல்லாம் கண்களில் கண்டுபிடித்து விடலாம்.

• **காது:** சிறு நீரகத்துக்கும் காதுக்குமிடையில் மிக நெருக்கமான உறவு உண்டு. காது சிவப்பு நிறத்தையுடையதாக மாறி வருமானால் இரத்த ஓட்டத்தில் சிக்கல் தோன்றியிருப்பதை அறியலாம். உணவில் சீனிச் செறிவு அதிகமாகிவிட்டாலும் காது மடல்கள் சிவத்து, உப்பி ஒருவகை மினுமினுப்புடன் காணப்படும்.

#### எச்சரிக்கை

இத்தகைய விளக்கங்களைத் தந்துள்ள டாக்டர் சாண்டிஃபெர் மற்றுமோர் எச்சரிக்கையினையும் விடுத்திருக்கிறார்.

"இத்தகைய அடையாளங்களைக் கொண்டு நோயாளியின் தன்மையை அறிந்து உண்மையினைக் கண்டுபிடிக்க ஓர் அனுபவமுள்ள மருத்துவராலேயே முடியும். ஆகவே, இதனை ஆதாரமாக வைத்துக் கொண்டு சாதாரணமாக எல்லோரும் நோய் பற்றிய முடிவுக்கு வந்துவிடலாகாது."

என்றாலும் நாம் முன்னெச்சரிக்கையாக இருப்பதற்கு இது உதவும் அல்லவா?




## புகைத்தலைத் தவிர்த்தல் எப்படி?

### கடைப்பிடிக்க வேண்டியவை

• புகைப்பதைத் தவிர்க்க வேண்டும் என்பதற்கு நீங்கள் வைத்துள்ள காரணங்கள்; புகைத்தலைத் தொடர வேண்டும் என்பதற்கு உங்களிடமுள்ள காரணங்கள் ஆகியவற்றை வரிசையாக எழுதிக்கொள்ளுங்கள்.

அத்துடன் நீங்கள் எங்கே எப்போது அதிகமாக புகைக்கிறீர்கள் என்ற குறிப்பையும் சேர்த்துக்கொள்ளுங்கள்.

• புகைத்தலை நிறுத்துவதற்கு ஒரு நாளைக் குறிப்பிடுங்கள். இதனை உங்களுடைய குடும்பத்தவர்களுக்கும் நண்பர்களுக்கும் அறிவித்துவிடுங்கள்.

• உங்கள் வீட்டிலோ அலுவலகத்திலோ 'சிகரெட்', சுருட்டு மற்றும் சாம்பலேந்தித் தட்டுப் போன்றவை தென்படாமலிருக்க வேண்டும்.

• நார்ச் சத்துக் கூடிய ஆனால் கலோரி குறைந்த காய் கறி வகைகள், பானங்கள் மற்றும் சீனிச்சத்து அதிகமில்லாத இனிப்பு வகைகளை- புகைக்க வேண்டும் என்ற உந்துதல் ஏற்படும்வேளைகளில் பயன்படுத்துங்கள்.

• வேக நடை, நீச்சல், சைக்கிள் சவாரி போன்ற சுவாச விருத்திக்கான பயிற்சிகளில் ஈடுபடுங்கள். விருப்பமான ஒரு கைப்பணியில் பொழுதைப் போக்கலாம்.

• உங்கள் புகை பிடிக்கும் பழக்கம் உங்களை விட்டுவிட்டால் நிம்மதிப் பெருமூச்சு விடுவதுடன் உங்களை நீங்களே பாராட்டிக்கொள்ளுங்கள். ஒரு நினைவுப் பரிசையும் நீங்களாகவே வாங்கி வைத்துக்கொள்ளுங்கள்.

| கடைசியாக புகைத்ததன் பின்னர் | புகை தவிர்ப்பால் எற்படும் நன்மைகள் |
|---|---|
| 1/2 மணி | இரத்தக் கொதிப்புக் குறைந்து வழமை அடைதல், நாடித் துடிப்பு வழமையடைதல். |
| 8 மணி | இரத்தத்தில் கார்பன் மொனொக்சைட்டின் பரிமாணம் குறைதல், இரத்தத்தில் பிராண வாயுவின் அளவு அதிகரித்தல். |
| 1 நாள் | மாரடைப்பு தடுக்கப்படல். |
| 2–3 நாட்கள் | மோப்பாற்றல் மற்றும் சுவை அறிதல் ஆகியவை வழமைக்குத் திரும்புதல், மார்பிலுள்ள குழாய்கள் சீரடைதல், நுரையீரலின் இயக்கம் இயல்படைதல். |
| 2–12 வாரங்கள் | இரத்த ஓட்டம் சீரடைதல், நடப்பது சுலபமாதல், நுரையீரலின் இயக்கம் 20 சதவீதத்தால் அதிகரித்தல் |
| 4–36 வாரங்கள் | முன்பிருந்த இருமல், மூக்கடைப்பு, சோர்வு ஆகியவை நீங்கி சுவாசம் சமசீரடைந்துவிடும். , நுரையீரலில் பழுதடைந்திருந்த சில அம்சங்கள் சீரடையும். இதனால் நுரையீரலின் செயற்பாடும் சிறப்படையும்., உடலின் மொத்த சக்தியும் விருத்தியடையும். |
| 5 வருடங்கள் | நுரையீரல் புற்று நோயிலிருந்து நூற்றுக்கு நூறு வீதம் விடுதலை |
| 10 வருடங்கள் | புற்று நோய்க் காரணிகளான உயிர்மங்கள் அழிவுற்று புதிய உயிர்மங்கள் விருத்தியடையும். வாய், சிறுநீரகம், தொண்டை, சிறுநீர்ப் பை மற்றும் கணயம் போன்ற உறுப்புக்களில் புற்றுநோய் தோன்றும் வாய்ப்பும் ஏற்படாமற் போய்விடும். |

* புகையிலையில் புற்றுநோய் தோற்றுவிக்க வல்ல 50 இரசாயனப் பொருட்கள் உள்ளன.

### சுவாரசிய செய்தி

## என் கணவர் எனக்கு மட்டும்தானா?

### துப்பறியும் துறையை நாடும் மனைவியர்



சபலப் புத்தியுடைய கணவர்களையிட்டு மேலை நாட்டுப் பெண்களுக்கு மகா கவலை.

"உன்னையன்றி வேறு பெண்ணை எண்ணமாட்டேன், தொட்டுப் பார்க்க மாட்டேன்" என்று சத்தியம் செய்வதையெல்லாம் அவர்கள் நம்பத் தயாராக இல்லை.

உத்தம புருஷன்தானா என்று தீர விசாரித்து அறிந்துவிட ஆசை!

புருஷனது பத்தினியன் தனத்தில் சந்தேகிக்கப்படும் மனைவியருக்கு உதவ மேலை நாடுகளில் துப்பறியும் நிறுவனங்கள் தோன்றியுள்ளன.

நியூ ஜேர்சியில் அப்படி ஒரு துப்பறியும் நிறுவனம் இருக்கிறது. அந்த நிறுவனம் பத்தினியன் தனத்தை பரிசீலிக்க கையாளும் முறையே தனிதான்.

விபரம் கிடைத்ததும் சம்பந்தப்பட்ட புருஷன் எங்கெங்கு செல்கிறார் என்ற தகவல்கள் திரட்டப்படும்.

தகவல்கள் கைக்கு வந்ததும் அந்த துப்பறியும் நிறுவனத்தில் உள்ள 'ஒற்றி'யான சேஷாவிடம் அவை ஒப்படைக்கப்படும். சேஷா படு கவர்ச்சியானவள். படு இளமையானவள். ஆடை அணியும் விஷயத்தில் மிக அலட்சியமானவள். உத்தம புருஷர்களின் உறுதியை பரிசீலிக்க சேஷா புறப்படுவாள். கைப்பையில் ரேப் ரெக்கோடர் ஒன்று தயாராக இருக்கும். கவனிக்கப்பட வேண்டிய நபர் மதுசாலையில் இருந்தார் என்றால் சேஷா நேராக அங்கு சென்றுவிடுவாள். அருகில் போய் காலுக்கு மேல் கால் போட்டபடி ஒரு போதை நகையை வீசுவாள். பலவீன ஆண் என்றால் உடனே சரணாகதியாகிவிடுவார்.

பின்னர் அவரோடு காதல் மொழிகளை பேசிக்கொண்டே கைப்பையில் இருக்கும் ரேப் ரெக்கோடரை உயிர்ப்பித்துவிடுவாள்.



சரசம் முடிய ஒலிப்பதிவு நாடா அந்த நபரின் மனைவியின் கைக்கு சென்றுவிடும். அடுத்து நடக்கும் குடும்பத்தில் மோதல், டமால், டுமீல் காட்சிகள் பற்றி சேஷாவுக்கோ அவளது துப்பறியும் நிறுவனத்திற்கோ அக்கறை கிடையாது.

தரப்பட்ட பணியை முடித்து பணம் பெறுவதே நோக்கம்.

சேஷா சுலபமாக சம்பாதிக்கிறாள் என்று அர்த்தமல்ல.

தனது கணவரோடு சேஷா பேசிய காதல் பேச்சுக்களை ஒலிப்பதிவு நாடாவில் கேட்டுக்கொண்டிருந்த ஒரு பெண் சேஷாவை தேடிவந்து அவள் கன்னத்தில் அகோரமாய் விட்டாளாம் ஒரு அறை.

இத்தனைக்கும் தனது கணவர் பற்றி ஆராயச் சொன்னது அந்தப் பெண்தான்.

இன்னொரு முறை, ஒரு நபரின் பத்தினியன் தனத்தை பரிசோதிக்க ஒரு விடுதி அறைக்கு அழைத்துச் சென்றபோது அங்கு புகார் கொடுத்த மனைவி காத்திருந்து சேஷாவை திட்டித் தீர்த்துவிட்டாளாம்.

இப்படி பல அனுபவங்கள். ஆனாலும் துப்பறியும் தொழிலில் உள்ள 'திரில்' பிடித்திருக்கிறது என்கிறாள் இளமையான சேஷா.

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்

# கொலை விழும் நேரம்



அங்கம் 37

எழுதுவது ரசிகன்-

> வானத்தில் வெண்ணிலவு ஒன்றல்லவா
> என்றும் ஒன்றல்லவா?
> மானத்தில் மங்கையர்கள் மானல்லவா
> கவரி மானல்லவா?
> -கவியரசு கண்ணதாசன்-

அவன் தனது 'ஹொண்டா' மோட்டார் சைக்கிளில் மிதமான வேகத்தில் செல்ல, மிதமான மழையின் துளிகள் மழைக் கோர்ட்டில் பட்டுத் தொட்டு ஈரப்படுத்திக் கொண்டிருந்தன.

மழையைக் கண்டவுடன் காணாமல் போயிருந்த போக்குவரத்துப் பொலிசாருக்கு மனதில் நன்றி சொல்லிக் கொண்டான். எதிர்ப்பட்ட எந்த சிக்னலிலும் வண்டியை நிறுத்தாமல் தொடர்ந்தான்.

நாளையோடு இந்த கறுத்த உடைக்கு விடை கொடுத்துவிடலாம்.

இன்று செய்யப்போகும் ஒரு கொலையோடு-சில சமயம் ஒன்றுக்கு மேற்பட்டதாகவும் இருக்கலாம்- ஆகவே கொலையோடு அல்லது கொலைகளோடு முற்றும் என்ற வாசகத்தை போட்டு விடலாம்.

பாவம் வினோ! பொலிசின் புத்தி இப்படியாகவா போகவேண்டும்? அவனைப்போய் கொலைகாரன் என்று பிடித்து உள்ளே போட்டு...அவனுக்கு சிரிப்பு வந்தது. அதன் அடையாளமாக உதட்டில் புன்னகை வந்தது.

எதிரே ஒரு கார் வந்தது. அது அவ்னை மோதும் விதமாக வந்தது.

சட்டென்று ஹொண்டாவை வளைத்து மோதாமல் தப்பித்தான்.

திரும்பிப் பார்க்க; வீதியால் வந்த ஒரு பெண்மீது மழைத் தண்ணியை வாரி விட்டபடி, அவள் வசையை அலட்சியம் செய்துவிட்டு கார் போய்க்கொண்டிருந்தது.

தண்ணியடித்துவிட்டு ஓடுகிறான். அவ்னைத் துரத்தி நேரத்தை இழப்பதில் அர்த்தமில்லை.

அவன் தொடர்ந்தான். குடி குடியை மட்டுமல்ல, தெருவையும் கெடுக்கும் என்று நினைத்துக்கொண்டான்.

இந்த முறையும் குறி சரியாக அமைந்துவிட்டால் நன்றாக இருக்கும். அவன் நினைக்க வானம் ஒரு முறை மின்னியது.

இருட்டில் தேடினால் தொலைத்தது கிடைக்குமா? வானமே முயன்று பார்! சிலவற்றை தொலைத்துவிட்டால் எப்படித் தேடினாலும் கிடைக்காது- தெரியுமா?

அவ்வாறு தொலைத்தால் கிடைக்காத சில பின்வருமாறு: 1. இனிய காதல். 2. உதிர்ந்துவிட்ட இனிய உயிர்கள். 3. யோசித்துத்தான் சொல்ல வேண்டும். இந்த கொலை, அல்லது கொலைகள் நல்ல விதமாக நடந்து முடிந்துவிட்டால் யோசிக்க அவகாசம் கிடைக்கும். அதன் பின்னர் மூன்று என்பதற்கு அருகிலுள்ள கீறிட்ட இடத்தை நிரப்பலாம் என்று தனக்குள் சொல்லி இரசித்துக் கொண்டான்.

இப்போது வானம் இடித்துக் கொண்டது.

இந்த இடி வசதிதான். சுட்டாலும் சத்தம் பெரிதாகக் கேட்காது என்று நினைத்தான்.

நினைத்தபடியே அவன் தனது ஹொண்டாவை திருப்பிய தெருவில்தான் வினோவின் வீடும் இருக்கிறது.

□□

இந்திரா அலறியதால் அவள் சொல்லிவந்த கதையின் தொடர்ச்சி தடைப்பட்டது.

காயத்திரி கிளாஸில் தண்ணீர் எடுத்து வந்து இந்திராவிடம் கொடுத்தாள்.

தண்ணீரைக் குடித்துவிட்டு, மூச்சை இழுத்து வெளியே விட்டு நிம்மதியாகிக் கொண்டாள் இந்திரா.

"முடியவில்லை என்றால் வேண்டாம் ஓய்வெடுத்துக்கொள்."

என்றாள் ஆதரவாக காயத்திரி.

"ஓய்வா? எனக்கா?" கேட்டுச் சிரித்தாள் இந்திரா. பலவீனமான சிரிப்பு.

தொடர்ந்து சொல்லத் தொடங்கினாள்.

□□

அந்த அறைக்குள் இருந்து திறந்த கதவின் வழியே ஒரு ஆள் வரக்கூடிய வழியிருந்தது.

வந்தது ஆள் அல்ல. ஆள் உயரத்தில் ஒரு நாய்.

அறையின் மங்கலான வெளிச்சத்தில் அந்த நாயின் கண்கள் பளபளத்தன. நாக்கு வெளியே தொங்கிக்கொண்டிருந்தது.

கதவு திறந்ததும் அது பாய்ந்து வந்த தோரணை பயங்கரமாக இருந்தது. இந்திரா பார்த்ததும் பயந்து போய் வீரிட்டாள். கண்களை இறுக மூடிக் கொண்டாள்.

இந்திராவின் தோளில் ஒரு கரம் தொட்டது.

அப்போதும் அவள் கண்களை திறப்பதற்கு பயந்தாள்.

"அது ஒன்றும் செய்யாது டியர். நீ கண்களை திறக்கலாம்."

என்று காதோரம் குரல் கேட்க, இந்திரா பயந்து கண்களைத் திறந்து பார்த்தாள்.

மனோகரால் 'பொஸ்' என்று சொல்லப் பட்ட ஹரிகரன் அவள் தோளில் இருந்து தனது கையை எடுக்காமல் அவள் முகம் அருகில் சிரித்தார்.



அவர் தோளுக்கு மேலாக இந்திரா தேட,

"யாரை மனோகரைத் தேடுகிறாயா நீ? அவன் ஏன் இங்கே கரடி மாதிரி?" என்று சிரித்து "போய் விட்டான். இப்போது எனக்கு நீ. உனக்கு நான்." என்றார் கண்ணடித்துக் கொண்டு.

அவர் அருகில் விசுவாசமாய் வாலை ஆட்டிக்கொண்டு அவளையே பார்த்துக் கொண்டிருந்தது அது.

"உ... உ்ன... உங்களுக்கு என்ன... வே...வேண்டும்..ஏன் என்னை...?"

"கஷ்டப்படாதே டியர். எனக்கு என்ன வேண்டும்? இது கேள்வி. பதில் சிம்பிள். வெரி வெரி சிம்பிள்." என்றவரை இந்திரா விழிகளில் வந்துவிட்ட கண்ணீரோடு பார்க்க,

"நீ...நீதான் வேண்டும். இளமையான நீ. அழகான நீ. சுகமான நீ எனக்கு வேண்டும். இப்போதே வேண்டும்: அதாவது சூடாக வேண்டும்."

என்றார். இந்திராவின் பயத்தால் துடிக்கும் மார்புகளை முறைத்துப் பார்த்துக் கொண்டு,

"நான்... அப்படியானவள்... இ... இல்லை... பிளீஸ்."

கையெடுத்துக் கும்பிட்டாள். கண்ணீர் மார்புச் சட்டையை நனைத்தது.

"உன்னை என்ன விபச்சாரமோ செய்யச் சொல்லுகிறேன்? விருந்து பரிமாறு என்று தானே கேட்கிறேன். இதுக்குப் போய்...அதில் பார் இந்திரா நீ விருந்து தரமாட்டேன், வாழை இலை விரிக்க மாட்டேன் என்றெல்லாம் அடம்பிடித்தாய் என்று வைத்துக் கொள்! உன் கதை நாலு பேருக்கு இல்லை...நாலு இலட்சம் பேருக்காவது குறைந்த பட்சம் தெரிய வேண்டிவரும்."

இந்திரா இப்போதும் அழுதுகொண்டு, கும்பிட்ட கரங்களை அப்படியே வைத்துக் கொண்டு, அவர் சொன்னதின் அர்த்தம் புரியாமல் விழிகளில் கேள்வி தெரிய நின்றாள்.

ஹரிகரன் அவள் தோளில் இருந்து கர்ம் விலக்கி, நேராக கட்டில் அருகே போய், மெத்தை உயர்த்தி ஒரு வீடியோ காசெட் எடுத்தார்.

அறையின் வலது கோடிக்குப் போய், ஒரு திரையை இழுத்துவிட்டார். ரி.வியும், வீடியோ 'டெக்'கும் இருந்தன.

வீடியோ 'டெக்'கின் வயிற்றில் அந்த காசெட்டை செருகி விட்டு, ரி.வியை உயிர்பெற வைத்தார்.

சில நிமிஷங்கள் கரைய சின்னத் திரையில் அந்த காட்சி விரிந்தது.

மனோகரின் வெற்று முதுகு தெரிந்தது. முதுகு அசைய... அங்கே.... இந்திரா... மார்பில் துணியில்லாமல்...

"ஓ...கோட்" இந்திரா கண்களை மூடிக் கொண்டாள். 'மனோகர் நீயா இப்படி?' தவறு என்மீதல்லவா? ஒரு அயோக்கியனைப் போய் நல்லவன் என்று நம்பி......'

இந்திரா பதறிப்போய், உடல் கூசி, உள்ளம் உடைந்து, மூடியிருந்த கண்கள் வழியாக அணை உடைந்த வெள்ளமாய் கண்ணீர் கொட்ட,

மனோகரின் அறையில்,

"யப்பா...எத்தனை வளர்ச்சி."

என்று அவள் கிண்டல் செய்தது,

"சீ...போடா...வேண்டாம் வலிக்கிறது விடு மனோ.."

என்றது எல்லாமே வீடியோவில் பதிவாகியிருந்தது. கண்களை மூடியபோதும் திரையில் இருந்து சத்தம் செவியில் விழ, இந்திரா காதுகளை தன் கரங்களால் மூடிக்கொண்டாள்.

ஹரிகரன் இப்போது அவள் அருகே வந்திருக்க வேண்டும்.

முதுகில் தொட்டு மெல்ல வருட இந்திராவுக்கு கம்பளிப்பூச்சி ஊர்வதுபோல இருந்தது. துள்ளி விலகி முன்னே நகர்ந்தாள்.

"ஒன்றும் தெரியாத பாப்பா. உள்ளே போட்டாளாம் தாழ்ப்பா.. கண்ணையும் காதையும் மூடிக்கொண்டாள். உலகம் இருண்டுவிடுமா? அல்லது மனோகருக்கு நீ புரண்டது பொய்யாகிவிடுமா? ஆதாரம் இருக்கிறது டியர் ஆதாரம்."

இந்திரா முழுவதும் உடைந்துபோய், அழுகையின் ஊடே,

"நான்... உ.... உனக்கு என்ன பிழை செய்தேன்... ஏன் இப்படி....?"

"பொறு டியர். நீ செய்த பிழை என்ன தெரியுமா?" என்று நிறுத்தி,

"நீ அழகாக இருப்பதுதான் பெரும்பிழை இந்திரா.."

என்றார் ஹரிகரன் தன் பிரிய நாயை தடவிக்கொடுத்தபடி.

"என்ன பெரிய ஆதாரம்? அழித்து விடலாம். சுத்தமாக அழித்துவிடலாம். உனக்கு துரோகம் செய்த மனோகரைக்கூட தண்டித்துவிடலாம். ஆனால் அதற்கு ஒரு நிபந்தனை இருக்கிறது. நீ ஒரு வார்த்தை! ஒரேயொரு வார்த்தை 'ஓ.கே' என்று சொல் போதும்."

இந்திரா அழுது சிவந்த விழிகளால் அவரைப் பார்த்தாள்.

"நான் சொல்வதை நீ செய்ய வேண்டும்."

என்ன செய்யவேண்டும் என்பதாய் இந்திரா பார்த்த பார்வை பரிதாபமாக இருந்தது.

"அட... என்னம்மா அப்படிப் பார்க்கிறாய்? உன்னை என்ன உயிரைத்தா என்றா கேட்கப் போகிறேன்...? சேச்சே அப்படியெல்லாம் கேட்கமாட்டான் இந்த ஹரிகரன். என்ன ரோமர் அப்படித் தானே!"

என்றார் நாயைப் பார்த்து. அது அவரது வாயைப் பார்த்துக்கொண்டிருந்தது. ஹரிகரன் இந்திராவை மீண்டும் பார்த்து,

"நான் சொல்லப் போவது சுலபமான வேலை." என்றுவிட்டு, அவளை முழுமையாக பார்த்துக்கொண்டு, உதட்டை நாவால் ஈரப்படுத்திக்கொண்டார்.

"உன் உடைகளை அவசரமேயில்லாமல் ஆறுதலாக ஒவ்வொன்றாக கழற்று. அட..... இதுக்குப் போய் ஏன் இப்படிப் பார்க்கிறாய்? கண்ணகியே வந்தாலும் எரிக்க முடியாது. சீமெந்தும் கல்லும் தரமான இரும்புக் கம்பியும் கலந்து உறுதியாக கட்டப்பட்ட கட்டிடம் இது."

தனது பேச்சை தானே இரசித்து வாய்விட்டு உரத்துச் சிரித்தார் ஹரிகரன்.

"அதில்பார் டியர் இந்திரா! உன் உடைகளை இந்த ரோமரே ஒரேயடியாக பிடுங்கிவிடும். பட் நான் மென்மையானவன். மென்மைகளை இரசிக்கத் தெரிந்தவன். சோ...பூவுக்கு வலிக்கக் கூடாது என்று நினைக்கிறேன். நீயே சொல் இந்திரா இது தப்பா?"

என்றபடி அவள் அருகே வந்தார். கண்களில் வெறித்தனம் அப்பட்டமாய் தெரிந்தது.

கரங்களை விரித்து இந்திராவை தொட முயல, அவள் விலகிப் போய்,

"மனோகர்...மனோகர் என்னை..."

"உன்னை காதலிப்பதாகச் சொன்னான். ஏமாற்றிவிட்டான். அது தானே? அப்படி அவனை சொல்லச் சொன்னதே நான்தானே? சோ...அவன் அப்படிச் சொல்லியிருக்காவிட்டால்தான் ஆச்சரியம். சொன்னது சாதாரணம்."

நெருங்கினார். இந்திரா சுற்று முற்றும் பார்த்துக்கொண்டாள்.

திடீரென்று எங்கிருந்து அத்தனை ஆவேசம் வந்தது என்று தெரியவில்லை.

ஹரிகரனை மார்பில் கைவைத்து முழுப் பலம் பிரயோகித்து தள்ளிவிட்டாள்.

அறையின் வலது கோடியை நோக்கி ஓடினாள்.

ரோமர் அவளை நோக்கி அசுரத்தனமாக பாய்ந்து சென்றது.

(தொடர்ந்து வரும்)

## பேனா நண்பர் அரங்கம்



* எம்.அருச்சனா
* 23
* 208, வேலுவனை வீதி தெமட்டகொட கொழும்பு-09
* புகைப்படம் பிடித்தல், பூந்தோட்டம் வளர்த்தல், தொலைக்காட்சி, பத்திரிகை.



* கே.றினோஸ்
* 17
* 67, மெயின் வீதி அக்கரைப்பற்று-01.
* வழமையான பொழுது போக்குகள்.



* செ.அருளம்மா
* 20
* தம்பாளை பொலனறுவை.
* பத்திரிகை, வானொலி, தொலைக்காட்சி.



* எம்.ரஜினா
* பற்றிக் ரீ றூம், கே.ஜி.றோட் புத்தளம்.
* வானொலி கேட்டல், பத்திரிகை, கதைப் புத்தகம் வாசித்தல்.



* தி.தீபன்
* 19
* BAHNHOF STR-260 4574. LUSLINGEN SWITZERLAND.
* கிரிக்கெட், உதைபந்து விளையாடுதல், ரீ.வி. பார்த்தல்.



* எம்.அஸ்ஹர்
* 23
* P.0.BOX-50 SALALAH.211 SANAIYA CAMP, OMAN.
* பத்திரிகை, வானொலி, கிரிக்கெட்

## வீர மக்கள் தின கவிதைப் போட்டி

'ஐக்கியமே பலம்' என்ற தலைப்பில் சுவிற்ஸர்லாந்திலுள்ள ஐக்கியத்தை வலியுறுத்துவோர் தினமுரசு மூலமாக நடாத்திய கவிதைப்போட்டி முடிவுகள்-

தமிழீழ மக்கள் விடுதலைக் கழக (PLOT) செயலதிபர் அமரர் க. உமாமகேஸ்வரனின் நினைவு தினத்தை முன்னிட்டு இப்போட்டி நடத்தப்பட்டது.

ஆறுதல் பரிசுபெறும் நூறு அதிஷ்டசாலிகளில் 25 பேரின் விபரம் கீழே. ஏனையோரின் பெயர் விபரங்களும் அடுத்துவரும் முரசுகளில் இடம்பெறும்.

1. முத்துமாதவன்-வாழைச்சேனை.
2. தம்பிராசா ஜெயகரன்-மட்டக்களப்பு.
3. கி.அமிர்தவாஹினி-கதிரவெளி.
4. எஸ்.பகாதீன்-புத்தளம்.
5. எம்.ராஜீவ் வாசன்-மட்டக்களப்பு.
6. அம்மாசி ராதாகிருஷ்ணன்-பொகவந்தலாவை.
7. முத்து ரவிராஜன்-மட்டக்களப்பு.
8. செல்வி.எல்.பிரியதர்ஷினி-மட்டக்களப்பு.
9. சி.ரட்னேஸ்வரி-மட்டக்களப்பு.
10. எஸ்.கோபாலகிருஷ்ணன்-மருதானை.
11. ரேணுகா றிபாய்தீன்-ஏறாவூர்-02.
12. ப.அன்னலிங்கம்-செங்கலடி.
13. இ.கேசவன்-கொழும்பு-5.
14. யோசப் அன்ரனி-மூதூர்-7.
15. சிவசாமி செல்வராஜ்-பூண்டுலோயா.
16. என்.சதீஸ்வரன்-கண்டி.
17. கலாஜினி சச்சிதானந்தம்-சீனக்குடி.
18. ச.சார்ள்ஸ்-நுவரெலியா.
19. பி.சிவகௌரி-மன்னார்.
20. த.அருள்மேரி-பசறை.
21. எஸ்.புவிமன்னர்-மட்டக்களப்பு.
22. ஷாரியா ஹனீபா-முருதுகமுல்லை.
23. பி.நவரட்ணம்-பேராதனை.
24. எப்.பிரபாகர்-கண்டி.
25. அ.கௌரிதாசன்-கிண்ணியா.

—அன்புடன்—

ஐக்கியத்தை விரும்புவோர் -சுவிஸ்-

www.padippakam.com

நன்றி - நூலகத்திட்டம்



சிறுகதை

# ஏக்கச்சுமைகள்

-கவிப்பிரியா நிஷா-

எயார்போட்டில் வந்து இறங்கியதும் தன் கண்களையே நம்ப முடியாமல் சுற்றும் முற்றும் பார்த்தாள் ஷகீலா. முன்பிருந்த எயார்போட்டுக்கும் இப்போதிருக்கும் எயார் போட்டுக்கும் இடையே நிறைய வித்தியாசங்கள் தெரிந்தன. பத்து வருடங்களுக்கு முன்பு சவூதி சென்றவள் இப்போதுதான் நாடு திரும்புகிறாள். விமான நிலையத்தைப் பார்த்து வியந்து போனவள் நம் நாடும் முன்னேறி விட்டது என்று நினைத்துக் கொண்டவளாக எயார்போட்டை விட்டு வெளியே வந்தாள்.

தாய் நாட்டு மண்ணில் கால் பதித்த போது அவள் உள்ளத்தில் ஆயிரம் பட்டாம் பூச்சிகள் இறக்கை கட்டிப் பறக்கத் தொடங்கின. என்னதான் வெளிநாட்டில் இருந்து விட்டு வந்தாலும் தாய் நாட்டு மண்ணில் கால் பதித்தபோது அவளுக்குள் அளவிலா ஆனந்தம் ஏற்பட்டது.

வாடகை வேனில் அமர்ந்துகொண்டவள் தன் உம்மாவையும், உடன் பிறப்புக்களையும் நினைத்துப் பார்த்தாள். கண்கள் இலேசாக கலங்கிப் போயின. நிச்சயமாக இது ஆனந்தக் கண்ணீர்தான். நீண்ட இடைவெளிக்குப் பிறகு உம்மாவையும், உடன் பிறப்புக்களையும் பார்க்கப் போகும் சந்தோஷத்தினால் ஏற்பட்ட ஆனந்தக் கண்ணீர்.

ஷகீலா சவூதி சென்றதே தன் உடன் பிறப்புக்களுக்காகத்தான்! அவளது வாப்பா இறக்கும் தறுவாயில் அவளிடம் சில பொறுப்புக்களை ஒப்படைத்துவிட்டுச் சென்றார். தங்கைமார் மூவருக்கும் திருமணம் செய்து வைக்க வேண்டும். குடும்பத்திற்கு ஒரே ஆண் வாரிசான தம்பியை நன்றாக படிக்க வைக்க வேண்டும். இவைதான் அவளது வாப்பா அவளிடம் ஒப்படைத்து விட்டுச் சென்ற பொறுப்புக்கள். வாப்பா தன்னிடம் ஒப்படைத்துவிட்டுச் சென்ற பொறுப்புக்களை அவளால் அலட்சியம் செய்ய முடியவில்லை. தாய்க்கு தலைமகள் ஆயிற்றே. அதனால் அந்த பொறுப்புக்களை சுமக்க வேண்டியது அவள் கடமையாக இருந்தது. அதன் காரணமாகத் தான் அவள் சவூதி சென்றாள். ஷகீலா இந்த நாட்டைவிட்டுப் போய் பத்து வருடங்களுக்கும் மேலாகி விட்டன. இந்த பத்து வருடங்களில் ஒரு தடவையேனும் அவள் இலங்கைக்கு வந்து செல்லவில்லை. அதற்கு அவள் முயற்சிக்கவுமில்லை. தன் கடமை முடிந்த பிறகுதான் நாடு திரும்புவதென்று உறுதி பூண்டிருந்தாள். அவளது இந்த பத்து வருட உழைப்பில் தங்கைமார் மூவருக்கும் திருமணம் செய்து வைத்து விட்டாள். தம்பியையும் படிக்க வைத்துவிட்டாள். தன் கடமையை அவள் செவ்வனே செய்து விட்டாள். அந்த திருப்தியோடுதான் இப்போது நாடு திரும்பி இருக்கிறாள். அவள் நாடு திரும்பும் விஷயம் அவளது வீட்டாருக்கு தெரியாது. தெரிந்திருந்தால் அவளை அழைத்துப்போக எயார்ப்போட்டுக்கு வந்திருப்பார்கள். திடீரென புறப்பட்டதால் அவள் வரும் விஷயத்தை வீட்டாருக்கு அறிவிக்கவில்லை.

வேன் வீட்டு வாசலில் வந்து நின்றது. வேனிலிருந்து இறங்கிய ஷகீலா "உம்மா..." என்று குரல் கொடுத்தாள். வீட்டுக்குள் இருந்து வெளியே வந்த உம்மாவும், தம்பியும் அவளைக் கண்டு ஏகமாய் சந்தோஷித்துப் போனார்கள்.

"மக ஷகீலா எப்படிம்மா இருக்கிறீங்க... சுகமா இருக்கிறீங்களா?"

அவளை ஆரத் தழுவியவாறு ஆனந்தக் கண்ணீர் வடித்தாள் உம்மா. அன்புத் தாயின் இந்த அன்பான அணைப்பு கிடைத்து எத்தனை வருடங்கள் ஆகிவிட்டன? பிரிவு என்பது ரொம்பவும் கொடுமையானது. உம்மாவை அணைத்துக்கொண்டு அவளுக்கு அழ வேண்டும் போலிருந்தது. மெதுவாக திரும்பி தம்பியைப் பார்த்தாள். அவன் ஷகீலா சவூதியிலிருந்து கொண்டு வந்திருந்த சாமான்களை வேனிலிருந்து இறக்கிக் கொண்டிருந்தான்.

"வாங்கம்மா உள்ளே போய் பேசலாம்."

வீட்டுக்குள் வந்தவள் உம்மாவை அணைத்துக்கொண்டு அழுதாள். உம்மாவின் தோற்றம் அவளை அழ வைத்தது.

"ஏம்மா, இப்படி மெலிஞ்சி போய் இருக்கிறீங்க?"

அழுகையினூடே கேட்டாள்.

"உங்களைப் பற்றிய கவலையிலதான் உம்மா மெலிஞ்சிட்டாங்க."

கூறிக்கொண்டே வீட்டுக்குள் நுழைந்தான் தம்பி.

"என்னைப் பற்றிய கவலையா?"

அவள் கேட்கவும், உம்மா அழுது விட்டாள்.

"முதல்ல தாத்தாவுக்கு குடிக்க ஏதாச்சும் கொடுங்கம்மா." என்று கூறிவிட்டு அவள் கொண்டு வந்திருந்த சாமான்களைப் பார்க்கத் தொடங்கினான் தம்பி. உம்மாவுக்கு என்ன கவலை என்பது ஷகீலாவுக்குப் புரிந்தது.

இளைய மகள்மார் மூவருக்கும் திருமணமாகிவிட்ட போதிலும், மூத்த மகளுக்கு இன்னும் திருமணமாகவில்லையே என்ற கவலை உம்மாவுக்கு. அந்தக் கவலையினால் தான் உம்மா இவ்வாறு மெலிந்து போயிருக்கிறாள் என்பதை அவள் புரிந்து கொண்டாள். சகோதரிகளுக்கு வாழ்க்கையை அமைத்துக்கொடுத்த அவளால் அவளுக்கென்று ஒரு வாழ்க்கையை அமைத்துக் கொள்ள முடியாமல் போய்விட்டது. தன் இளமைப் பருவத்தை அவள் தொலைத்து விட்டாள். இப்போது அவளுக்கு வயது முப்பத்தைந்து.

□□□

ஷகீலா நாடு திரும்பியதை அறிந்து அவளது தங்கைமார் மூவரும் தங்கள் குடும்பத்தோடு தாய் வீட்டுக்கு வந்திருந்தார்கள். தங்கைமாரின் குழந்தைகள் "பெரியம்மா பெரியம்மா" என்று அவளைத் தொற்றிக்கொண்டார்கள். அவள் சவூதியிலிருந்து கொண்டு வந்திருந்த சாமான்களை தங்கைமார் மூவரும் பங்குபோட்டுக்கொண்டிருந்தார்கள். அப்போதுதான் உம்மா அந்த விஷயத்தைச் சொன்னாள்.

"தரகர்கிட்ட ஷகீலாவுக்கு மாப்பிள்ளை பார்க்க சொல்லி இருக்கேன்."

உம்மா சொன்னதைக் கேட்டு தங்கைமார் மூவரும், 'கொல்' என சிரித்தார்கள்.

"என்னம்மா சொன்னீங்க.... தாத்தாவுக்கு மாப்பிள்ளை பார்க்கச் சொன்னீங்களா?"

மீண்டும் சிரித்தார்கள்.

"இப்போ எதுக்காக இப்படி சிரிக்கிறீங்க?"

உம்மாதான் கேட்டாள்.

"இந்த வயசில தாத்தாவுக்கு மாப்பிள்ளை பார்க்க சொல்லி இருக்கிறீங்களே! அதை நெனைச்சிதான்மா சிரிக்கிறோம்."

அவர்கள் இவ்வாறு சொன்னதும் உம்மா அழுதவாறு ஷகீலாவின் அறைக்குள் வந்தாள்.

"நீங்க ஏம்மா அழுறீங்க...? அழ வேண்டியவ நான்தான். நானே அழாம இருக்கேன். அப்புறம் நீங்க எதுக்கும்மா அழறீங்க?"

"ஷகீலா...அவங்க சொன்னதையெல்லாம்...?"

"நானும் கேட்டுக்கிட்டுத்தானம்மா இருந்தேன். அவங்க சொன்னதில எந்த தப்பும் இல்லம்மா."

"ஷகீலா"

"ஆமா இந்த வயசில எனக்கு மாப்பிள்ளை பார்க்கச் சொல்லி இருக்கிறீங்களே அதுதான் தப்பு."

"மக உங்க கடமையை நீங்க செஞ்சிட்டீங்க. என்னோட கடமையை நான் செய்ய வேணாமா?"

"நான் கல்யாண வயசையெல்லாம் தாண்டிட்டேன்மா. இப்போ எனக்கு வயசு முப்பத்தஞ்சி ஆகுது. இந்த வயசில எனக்கு கல்யாணம் தேவைதானா? வேணாம்மா எனக்கு கல்யாணம் வேணாம்."

"என்னம்மா இப்படி சொல்லிட்டீங்க. எங்க குடும்பம் இன்னைக்கு அந்தஸ்தோட வாழ்ந்துக்கிட்டிருக்குன்னா அதுக்கு காரணம் நீங்கதான்! உங்க உழைப்புத்தான். உங்க எதிர்காலத்தைப் பற்றி கொஞ்சம் கூட யோசிக்காம இத்தனை வருஷமா எங்களுக்காகவே உழைச்சிப் போட்டீங்க. அப்படிப் பட்ட உங்களுக்கு ஒரு கல்யாணத்தைப் பண்ணி வைக்கலன்னா அந்தப் பாவம் எங்களை சும்மா விடாதும்மா. யார் என்ன சொன்னாலும் பரவாயில்ல. தரகர் பார்த்திட்டு வர்ற மாப்பிள்ளைக்கு உங்களைக் கல்யாணம் பண்ணி வைப்பேன்."

உம்மா இறுதியாகவும் உறுதியாகவும் சொன்னாள். தன்மீது உம்மாவுக்கு இருக்கும் பாசத்தில் துளிகூட தங்கைகளுக்கு இல்லையே என்று எண்ணி மனம் நொந்து போனாள் ஷகீலா.

□□□

தரகர் வந்தார். ஷகீலாவின் வயதிற்கு பொருத்தமான ஒரு மாப்பிள்ளைப் பார்த்திருப்பதாக சொன்னார். அவர் சொன்னதைக் கேட்டு உம்மா உளம் குளிர்ந்து போனாள். ஷகீலாவுக்கு ஏகப்பட்ட மகிழ்ச்சி. தானும் திருமணம் செய்து கணவன் குழந்தைகள் என்று குடும்பமாக வாழப் போவதை நினைக்க அவளுக்கு இருப்புக் கொள்ளவில்லை.

"ஆனா வந்து.."

தரகர் இழுத்தார்.

"ஆனா என்ன தரகர் சொல்லுங்க?"

உம்மா பதற்றத்தோடு கேட்டாள்.

"உங்க மக வெளிநாடு போனதால மாப்பிள்ளை உங்க மகளைக் கல்யாணம் பண்ணிக்க விருப்பமில்லாம இருக்கார். எப்படியாவது மாப்பிள்ளையை சம்மதிக்க வச்சி இந்தக் கல்யாணத்தை செய்து வைக்கிறேன்." என்றார் தரகர்.

"என் கல்யாண விஷயத்தில இந்தளவுக்கு அக்கறை எடுத்ததுக்கு ரொம்ப நன்றி தரகர் நானா. இஸ்லாமிய பொண்ணு எப்படி வாழணும்னு நம்ம மார்க்கம் போதிச்சிருக்கோ அப்படித்தான் இந்த முப்பத்தஞ்சி வருஷமா நான் வாழ்ந்துக்கிட்டிருக்கேன். அவரைக் கல்யாணம் பண்ணிக்க எனக்கும் விருப்பமில்லன்னு போய் சொல்லிடுங்க தரகர் நானா."

கண்களில் நீர் துளிர்க்கப் பேசினாள்.

அவளது மனம் முழுக்க ஏக்கச் சுமைகள்.

'என்னை ஏன் பெண்ணாக பெற்றீர்கள்?' என்று உம்மாவிடம் கேட்க வேண்டும் போலிருந்தது.

கலங்கிய விழிகளோடு உம்மாவை நோக்கினாள். உம்மா தரையில் சரிந்து கிடந்தாள்.

"உம்மா..... உம்மா."

உம்மாவைப் பிடித்து உலுக்கினாள். அந்த அன்புத் தாய் எழுந்திருக்கவேயில்லை.

# ரசிகன்...ஒரு........?

-ஷர்மிளா இஸ்மாயில்-

இரவு வானத்தில் துளிகளாய் நட்சத்திர மின்னல்கள். குளிர்காற்று சில்லென்று உடலை வருடிக்கொடுத்தது. மலைப்பாங்கான பிரதேசத்திற்குரிய இனிய காலநிலையும் காற்றும். மெதுவாக வெளியே வந்து மாமரத்தில் சாய்ந்து கொண்டாள். அப்பால் கீழ் விரிந்து கிடந்த நிலப்பரப்பில் கண்டி மாநகரம் தங்கப் பொட்டுக்களால் ஜொலித்துக்கொண்டிருந்தது. அவள் நின்றிருந்த இடம் அப்படிப்பட்டது- மலையுச்சியில் அவளது வீடு. கண்களால் வெளிச்சப் பொட்டுக்கள் அழகாய்க் காட்டிய மாயாஜால இரவை இரசித்துக் கொண்டிருந்தாள். "ஏய், ஏன் பனித் தூறலில் போய் நிற்கிறே? பிறகு அச்சூ.. ஆச்சூ...தும்மி சாகப் போறே!" அவளது அண்ணனின் குரல்.



"அண்ணா, இங்க வந்து பாரேன்" ஓடி வந்தான். "ஹெலியின் வால் வெள்ளியா? இல்லை வேறேதும் அதிசயமா?" அவன் குரல் முன்னால் வந்தது. "சும்மாயிரு. அங்க பார். டவுன் எப்படி அழகா இருக்கு. கண்ணுக்கு ரொம்ப இனிமையான காட்சியில்ல." அவளை இடைமறித்து நிறுத்தினான். "ஐ...ஐயோ! இதுக்காகவா இப்படி அலறியடிச்சு ஓடிவரச் சொன்னே? எந்த நாளும் பார்க்கின்ற ஸீன் தானே? இன்னிக்கு மட்டும் தான் அழகு தெரிஞ்சுதோ?" அவன் குரல் கேலியாய் ஒலித்தது.

அவள் ஸீரியசாய் இருந்தாள். "அதென்னவோ தெரியல. இத்தன நாளாய் இல்லாத மாதிரி ஒரு அழகு. அப்படி உணர்றன்." சொன்னாள். சொன்னவள் மனதில் அந்தக் கடித வரிகள்.. "சுந்தரமான எழுத்துக்களைச் சொந்தம் கொண்டுள்ளீர்கள். உங்கள் எழுத்துக்களின் அர்த்தம் அழகு. எனக்குப் பிடிக்கிறது. ரொம்பவும்! சுந்தரமான மலையகத்தை சொந்தம் கொண்டுள்ளதாலோ என்னவோ கற்பனையும் அழகான தாய் அமைந்து விடுகின்றது என்று நினைக்கிறேன்.." அவளது கவிதை வரிகளைப் பாராட்டிய மடலது. எழுதியது? அது யாரென்று அவளுக்குத் தெரியவில்லை. ஆனாலும் அவளது ரசிகன்.

"ரசிகன்!" என்று ஒற்றை வரியில் முடித்துவிடும் அவனது விமர்சனங்களை அவளுக்கு ரொம்பப் பிடிக்கும். அவ்வப்போது 'தினமுரசு' பிரசுரிக்கும் அவளது கவிதைகளை அர்த்தப்பூர்வமாய் விமர்சிப்பதில் அவனுக்கு நிகர் அவனே. அவனது விமர்சனங்களுக்காகவே இன்னும் எழுதலாம் போலிருக்கும். அவளது கதையா, கவிதையா, இசையும் கதையுமா- பத்திரிகை, வானொலி இரண்டிலும் அவளது ஆக்கங்களைத் தவறாமல் பார்த்து, கேட்டு விமர்ச்சிப்பதில் தவறுவதேயில்லை. ஆரம்பத்தில் ஆச்சரியப்பட்டவள் இறுதியில் அவனது விமர்சனங்களுக்கு அடிமைப்பட்டவளாய் மாறிவிட்டாள்.

அன்றும் அவளது கவிதை வரிகளை விமர்சித்து மடல் வந்திருந்தது. வாசித்து முடித்த அவள் மனதினுள் ஆயிரம் வண்ணத்துப் பூச்சிகள்.

இப்போதெல்லாம் அந்த ரசிகனின் விமர்சனங்கள் எதுவும் வருவதேயில்லை. ஏன்? அவளுக்கு வருத்தமாய் இருந்தது. வாட்டமாயும் இருந்தது. பேனையைத் தொடுங் கணங்களில் மனம் இடறியது.

ஏன்? என்று கேட்டெழுதவும் அவனது முகவரி இல்லை. இடறும் மனதைக் கட்டுப்படுத்தியவள் 'உதிரிப் பூக்கள்' என்ற தலைப்பில் இசையும் கதையும் ஒன்றை எழுதி முடித்தாள். ரசிகன் இசையும் கதையும் பிரியன். எப்படியாவது கேட்பான். விமர்சிப்பான். என்றெண்ணியவாறு காத்திருந்தாள்.

கதை ஒலிபரப்பாயிற்று. நிறையவே விமர்சனங்கள். விமர்சனங்கள் பலவிதம். ஒவ்வொன்றும் ஒரு விதம். எல்லாவற்றையும் விடுத்து அவனது கையெழுத்தைத் தாங்கிய கடிதவுறையைத் தேடிக் களைத்தாள். "ம்ஹூம்...இல்லை.." அண்ணா உதட்டைப் பிதுக்கினான். "எங்காவது வெளிநாடு போயிருப்பார் உன் ரசிகர். இல்லை நாடு கடத்தியிருப்பார்கள் அவரது வீட்டார்கள்." கேலியாக சிரித்தான். அவள் முறைத்தாள்- பேசவில்லை.

நாட்களின் நகர்வின்போது ஒரு சனி காலை, தபாற்காரன் புன்னகையோடு கொடுத்த கடிதங்களில் அவனது கையெழுத்தும் ஒன்றில். அண்ணனின் சிரிப்பின் பின்னணி ஒலியில் அவசரமாய் உடைத்தாள். வரிகளைப் படித்தவள் கண்கள் இறுதியில் கலங்கிப் போயின. கண்ணீர்துளிகளாய் உருவாகி ஓடையாய் மாறிப்போனது.

"...விதி என்பார்களே, அந்த விதி என் வாழ்க்கையில் விளையாடிய சோகம்! எழுதாமல் இருக்கப் பார்த்தேன். முடியவில்லை. எழுதிவிட்டேன். சோகம் சொல்லி சுமையேற்றிய என்னை மன்னியுங்கள்." என்று முடித்திருந்தான்.

ஆமாம். வேகமான அவனது மோட்டார் சைக்கிள் பயணமொன்றின்போது விபத்தில் சிக்கிய அவன் தலையில் பலமான அடி. உடல் முழுதும் காயங்கள். முக்கியமான சத்திர சிகிச்சைக்கு நாட்குறித்திருக்கிறார்களாம். கரணம் தப்பினால் மரணம் என்கிற நிலையில் உயிர் துடிக்க காத்திருக்கிறான் அவன். 'சுகம் பெற வேண்டும்' என்கிற ஒரே பிரார்த்தனையில் உருகி நிற்கிறது அவள் மனம். தன் இனிய ரசிகனின் வாழ்வெனும் கதை தொடர்கதையா இல்லை சிறுகதையா எனத் தெரியாது தவிக்கிறாள் அவள். முற்றுப் புள்ளியும் 'தொடரும்' சொல்வதும் அந்த இறைவன் கையில்.

பொடிக்கதை

# அடிமேல் அடித்தால்

மருதூர் ஏ. முஹம்மது தமீம்

குழந்தை 'வித்தியம், பெரிலியன், போரன், காபன்' என்று ஆவர்த்தனம் முணுமுணுத்துக்கொண்டே தூங்கிக் கொண்டிருந்தது.

படிப்பு வாசனை அறியாத அந்தத் தாய் ஏசிக்கொண்டிருந்தாள். வீண் வம்பு ஏனென்று திரும்பிவிட்டேன்.

இரண்டாம் நாள்–

சிராய்ப்புக்களை பொத்திப்பிடித்து குழந்தை அழுதுகொண்டிருந்தது.

மூன்றாம் நாள் போனபோது, அந்தத் தாய்

மூக்கை மலர்த்தி புகழ்ந்துகொண்டிருந்தாள்.

"அடி உதவுறமாதிரி காக்கா தம்பியிம் உதவமாட்டான்."

"அடிமேல அடி அடிச்சா அம்மியும் நகரும்."

"என்ன தாத்தா புள்ள எங்க பெயித்து?"

"புள்ளக்கி கதச்சிக்கிரிக்க நேரமில்ல. சோதினயிம் நெருங்கிவிட்டு கடப்ப மூடிக்கி படிக்கிது."



வெட்டு ஒன்றும் துண்டு இரண்டுமாய் தாத்தா பாய்ந்தாள்.

நான்காம்நாள் போனபோது–

தாத்தாவுக்கு நல்ல நித்திரை.

குழந்தை எதையோ 'கிப்ழு' செய்துகொண்டிருந்தது.

இரண்டு நாளாய்,. தூங்காமல் படிக்கிறாளாம்.

நான் வந்ததும் போனதும் அவளுக்குத் தெரியா....

ஐந்தாம் நாள் போனபோது–

தாத்தா குழந்தைக்கு வீசிக்கொண்டிருந்தாள்.

ஆறாம்நாள் போனபோது–

'புள்ளய நித்திர முழிச்சி படிக்க வேணாண்டு செல்லுடாம்பி" என்றாள்.

ஏழாம் நாள் போனபோது–

வீதி/தெரு அமர்க்களமாய்க் கிடந்தது.

ஆட்டோப்பாதம் தெருவில் கோலம் வரைந்திருந்தது.

தாத்தா கதவடியில் நின்றுகொண்டிருந்தாள்.

முன்வீட்டுக் குழந்தையொன்று

இன்னும், இன்னும் பலூனொன்றை ஊதிக்கொண்டிருந்தது.

தாத்தா உற்சாகப்படுத்திக் கொண்டிருந்தாள்.

ஆ...இன்னம்...இன்னம் சோதினயிம் நெருங்கிட்டு இன்னம் இன்னம்.

இந்த ஏழாம்நாளின் பின் பகுதியில் 'முல்லேரியா பஸ்' தாயையும் மகளையும் ஏற்றிக்கொண்டது.

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்

# ஒரு அகதி ...... அலைக்கப்படுகிறான்

**-மருதமுனை முகர்றப்-**

சிறுகதை

தபால்காரன் வரவை நான் ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டிருந்தேன். காலை எட்டு மணி தொடக்கம் பதினொரு மணி வரை வாசல் நிலையில் சாய்ந்தவாறே நின்றுகொண்டிருந்ததால் கால்கள் வலிப்பது போன்றிருந்தது. உள்ளே கிடந்த கதிரையை எடுத்துவந்து அதில் அமர்ந்துகொண்டேன்.

தூரத்து வளைவில் தபால்காரன் சைசிக்கிளை மிதித்து வருவது தெரியவே வீதியில் இறங்கி நின்று கொண்டேன். தபால்காரன் ஒவ்வொரு வீடாக கடிதங்கள் கொடுக்க தாமதிக்க மனம் ஆவலினால் அடித்துக்கொண்டது. அவன் என்னை நெருங்க மறித்து நிறுத்தி எனக்கு ஏதாவது கடிதம் வந்ததா என விசாரித்தேன். அதுவும் கெஞ்சும் பாணியில். அவனது கண்கள் சிவந்து போனது கோபத்தினாலாக இருக்கவேண்டும்.

"என்ன ஐயா, உங்களால பெரிய தொல்லையாப் போச்சு. கடிதம் வந்தா கொண்டு தருவன்தானே? அப்படித்தானே ஒவ்வொரு வீட்டுக்கும் கொடுத்து வாறன். நானும் ஒவ்வொரு நாளும் இதே பதிலச் சொல்லிக்கிட்டிருக்கன். நீங்களும் ஒவ்வொரு நாளும் அதையே திரும்பத் திரும்பக் கேட்டுக்கிட்டிருக்கிங்க, வயதுக்கு மூத்த மனிசன் எண்டு கொஞ்சம் மரியாதை தந்தது தப்பாப் போச்சு, அவசரமெண்டா கொழும்புக்குப் போய் கடிதத்தை எடுத்துக்கிட்டு வாங்க."

அவன் படபடத்து விட்டுப் போவதையே வெறித்துப் பார்த்துக்கொண்டிருந்தேன். ஒருவரும் இதைக் கண்டு கொள்ளாதது சிறிது ஆறுதலாக இருந்தது. அவனிடமிருந்து கொஞ்சமும் எதிர்பாராத இவ் வார்த்தைகளால் தொண்டை கூட வரண்டு விட்டது. எச்சிலை விழுங்கிக் கொண்டேன்.

"என்னங்க, றோட்டில் நிண்டுக்கிட்டு அரை மணி நேரமா எதைப் பார்த்துக்கிட்டிருக்கீங்க? வீதியால போற வாறவங்க உங்கள பைத்தியக்காரன் எண்டு நினைக்கப் போறாங்க, நானும்தான் பார்த்துக்கிட்டிருக்கன், கொஞ்ச நாளா நீங்க நல்லமே இல்ல. சும்மா தனியே இருந்து யோசிக்கிறது, தாள்தாளா எழுதிக் குவிக்கிறது, உங்களுக்குப் பேய் பிசாசு ஏதும் பிடிச்சிப் போச்சோ என்னவோ, ஒரு நல்ல வைத்தியருக்கிட்டக் காட்டிப் பாருங்க."

மனைவியிடம் இருந்து வெளி வந்த வார்த்தைகள் அனுதாப வார்த்தைகளல்ல, என்னை வதைப்பதற்கான கொடிய வார்த்தைகள் என்பது எனக்கு நன்றாகத் தெரியும், தினமும் கேட்கும் இப்படியான விஷ வார்த்தைகளை நான் அலட்டிக்கொள்வதே இல்லை.

உள்ளே சென்று அலுமாரியைத் திறந்து ஃபைல் ஒன்றினுள் இருந்த அந்தப் பத்திரிகையில் பார்வையை ஓடவிட்டேன்.

'அகதிகளாக இடம்பெயர்ந்து வேறு இடங்களில் வாழும் மக்களுக்கு மீளக் குடியமர்வதற்காக உதவிப் பணம் இருபதாயிரம் ரூபா உடன் வழங்கப்படும்.'

பத்திரிகைச் செய்தியில் எதுவித தவறுமில்லை, நான் விண்ணப்பித்ததிலும் எதுவித தவறுமில்லை, ஆனால் விண்ணப்பித்து இரண்டு மாதங்கள் கடந்தும் காரியம்தான் முடிந்தபாடில்லை.

உடுத்துக்கொண்டிருந்த துணியை மட்டும் எடுத்துக்கொண்டு ஒரு பொழுதுக்கிடையில் விரட்டப்பட்டு உண்மையான அகதி என்ற முத்திரை குத்தப்பட்டிருந்தும் அதை உறுதிப்படுத்த கிராம சேவகருக்குக் கொடுத்த பணம் ஆயிரம் ரூபா, அதை மேலொப்பம் இட்டு உறுதிப்படுத்த பிரதேச செயலாளருக்குக் கொடுத்த பணம் இரண்டாயிரம் ரூபா, விண்ணப்பம் அனுப்பி ஒரு மாதம் வரை எதுவித பதிலும் வராததால் மகள் நஸ்றீனின் வளையலை அடகு வைத்து பணம் எடுத்துக்கொண்டு கொழும்பு சென்று அங்குள்ள அதிகாரிக்குக் கொடுத்த பணம் மூவாயிரம் ரூபா.

போக்குவரத்துச் செலவுகள் என்றெல்லாம் சேர்த்து இருபதாயிரம் ரூபா பெறும் முயற்சியில் இப்போதே எட்டாயிரம் ரூபாவுக்கு மேல் செலவாகிவிட்டது.

இப்படிச் செலவுகளும் செய்து நாயாய் அலைய வேண்டியிருக்கும் என்று தெரிந்திருந்தால் இதற்கு முயற்சித்திருக்கவே மாட்டேன். கடைசியாக கொழும்பு சென்று பார்த்தபோது 'எல்லா வேலையும் முடிந்துவிட்டது. காசோலை எழுதினால் சரி' என்று கூறினார்கள். செக்கை வீட்டுக்கு அனுப்பி வைப்பதாகவும் நம்பிக்கையாகத் கூறினார்கள். அதை எதிர்பார்த்தே ஒரு மாதம் கடந்து விட்ட போதும் பதில்தான் எதுவும் கிடைக்கவில்லை.

இவ்வளவு செலவு செய்து விட்டு இனிமேல் முயற்சி செய்யாமல் இருக்கவும் முடியாது. கொழும்பு செல்லும்போது அடகு வைத்த மகள் நஸ்றீன் வளையலும் மனைவியின் நூல் சுற்றிய சம்பாதிப்பில் வாங்கிப் போட்டதுதான், இப்போதே குத்துக்கதைகளால் நச்சரிக்கும் மனைவியிடம் இருந்து எப்படியும் தப்ப முடியாது.



பல மணி நேரமாக சிந்தித்தும் எதுவித வழியும் தெரியவில்லை. தலை உயிர் போகும் அளவுக்கு வலித்தது. இறுதியாக ஒரு தரம் கொழும்பு சென்று பார்த்து வருவது என்று முடிவெடுத்துக்கொண்டேன். எழுநூறு ரூபாவாவது இருக்குமானால் கொழும்பு புறப்பட்டுவிடலாம். வெட்கத்தை விட்டு சிலரிடம் கேட்டுப் பார்த்தேன். அனைவரும் இல்லை என்பதை வேறு மரியாதையான வார்த்தைகளால் கூறினர்.

இறுதியாகக் கை கொடுத்தது. எனது கையில் கிடந்த கைக்கடிகாரம். அந்தக் கைக் கடிகாரம் எனது முப்பத்தைந்து வருட ஆசிரிய சேவைக்காக உடன் கற்பித்த ஆசிரியர்களால் அன்பளிப்பாக அளிக்கப்பட்டது. எனது முப்பத்தைந்து வருட ஆசிரிய சேவையின் ஒரே ஒரு நினைவுச் சின்னம். எவ்வளவு கஷ்டங்கள் வந்த போதும் கைமாறி விடாமல் பாதுகாத்து வரப்பட்டது. இப்போது அது எனக்கு அகதி நரக வாழ்விலிருந்து விடபடுவதை விட பெரிதாகத் தெரியவில்லை.

கொழும்பு வந்து சேர ஏழு மணியாகிப் போனது. ஊரிலிருந்து நேரடியாக பஸ் எடுத்திருந்தால் நான்கு மணிக்கெல்லாம் கொழும்பு வந்து சேர்ந்திருக்கலாம். அதற்கு நூற்றி ஐம்பது ரூபா கொடுக்க மனமில்லாமல் ஒரு ஐம்பது ரூபா மிச்சப்படுத்துவதற்காக மூன்று பஸ் மாறி வந்த களைப்பினால் உடல் முழுக்க வலித்தது. வழமையாக தங்கும் லொட்ஜில் ஐம்பது ரூபா கொடுத்து கட்டிலில் படுத்து இதுவரை பேணி வந்த மானத்தைக் காப்பாற்றிக்கொள்ள ஆவல் இருந்தாலும் கையிலிருந்த பணம் தடுத்து நிறுத்தியது. ஊரவர்கள் காணாத ஒரு லொட்ஜுக்குச் சென்று இருபத்தைந்து ரூபாவில் பாயில் படுத்து அன்றைய இரவை ஓட்டிக்கொண்டேன்.

காலை ஒன்பது மணிக்கு முன்பே அலுவலகத்திற்குச் சென்றுவிட்டேன். சென்ற முறை பணம் கொடுத்த அதிகாரியின் அறை காலியாகவே இருந்தது. அவர் வரும் வரை வாசலில் கிடந்த கதிரையில் அமர்ந்துகொண்டேன். பத்து மணியளவில் கண்ணாடி அணிந்து புதியதொரு அதிகாரி அக்கதிரையில் வந்து அமர திக் என்றது. தாமதியாமல் அவ் அதிகாரியின் அறையில் நுழைந்து பழைய அதிகாரியைப் பற்றி விசாரித்தேன். பதவி உயர்வு பெற்றுச் சென்றுவிட்ட சோகமான பதில் கிடைத்தது. எனது விடயங்களைப் பற்றிக்கூறினேன். பல ஃபைல்களை எடுத்துத் தேடிய அதிகாரி இரண்டாவது லிஸ்ரில் எனது பெயர் கிடப்பதாகவும், அடுத்த மாதம்தான் செக் எடுக்கலாம் என்றும் கூறினார்.

அவ் அதிகாரிக்குக் கிடைத்த 'நியாயமான பதவி உயர்வை' நினைத்து மனதிற்குள் சிரித்துக்கொண்டு அலுவலகத்திலிருந்து வெளியேறி பஸ் நிலையத்தை அடைந்து ஊருக்கு பஸ் பிடித்தேன். சிறிதும் தாமதிக்காமல் சொந்த ஊருக்குத் திரும்புவதற்கான வேலைகளில் மும்முரமாக இருந்தேன்.

□□

கொழும்பு சென்ற வாப்பா பணத்துடன் தான் வந்திருக்கிறார் என்ற நினைப்பில் மகள் மிகுந்த பூரிப்புடன் வேலைகளில் ஈடுபட்டுக்கொண்டிருந்தாள். இளைய மகன் றிஸ்னி அழுதுகொண்டே இருந்தான். அவனைச் சுற்றி அவன் கூட தினம் விளையாடும் நண்பர்கள் அனைவர் கண்களும் கலங்கியபடியே இருந்தன. நண்பர்களை விட்டுப் பிரிய மனமில்லாமல் அழுதுகொண்டிருக்கிறான் என்பதை ஊகித்துக் கொண்டேன். நரகம் போன்ற அகதி வாழ்வை விட்டு அகல மனமில்லாத றிஸ்னியின் குழந்தைத் தனத்தை நினைக்க சிரிப்பாக இருந்தது.

அழுதுகொண்டிருந்த றிஸ்னி முகத்தைத் துடைத்துக்கொண்டு எனது மடியில் வந்து அமர்ந்து கொண்டு வழமைபோல் கேள்விகள் கேட்கத் தொடங்கினான்.

"அகதி எண்டா யாரு வாப்பா?"

"வழமையா இருந்த சொந்த இடங்களை விட்டுப் போட்டு வேறு இடம்போய் வாழுறவங்கதான் அகதிகள்" நான் விளக்கமளித்தேன்.

"அப்ப நாம இப்ப அகதியாவா வாப்பா போகப்போறம்."

இரண்டு வயதாக இருக்கும்போது அகதியாக்கப்பட்டு இப்போது ஆறு வயதைத் தாண்டி நிற்கும் றிஸ்னியின் கேள்வியில் நியாயம் இருப்பது போன்றே தோன்றியது. என்ன பதில் கூறலாம் என்று யோசித்துக் கொண்டிருக்கும்போது நாளை ஊர் திரும்ப பணத்திற்கு எதை விற்கலாம் என்ற சிந்தனையும் அதனுடன் ஒன்றாகக் கலந்தது. ●

---

# தனக்கு [illegible]

**ஹப்புத்தளையூர் எப்.லெனாட்குமார்**

அழுதுகொண்டிருந்த மகளை எப்படி தேற்றுவது என புரியாமல் பதறிக் கொண்டிருந்தாள் தாய் கமலம்.

"மக, நடந்தது நடந்து போச்சி! இதையே நினைச்சி வீணா கவலப்பட்டுக்கிட்டிருந்தா என்ன நடக்கப் போகுது? எப்பவாவது ஒவுட்டு அருமை உன் புருசனுக்கு புரியத்தான் போகுது. வீணா சும்மா அழுதுகிட்டிருக்காம போய் சாப்பிடு."

"இல்லம்மா! அவருக்கு எப்பவுமே அது புரியாதம்மா! சீதனங்கிற ஒரு பெரிய கறுப்பு திரை அவருட்டு கண்ண மறைச்சிக்கிட்டிருக்கு! இந்த நாட்டுல எனக்கு மட்டுமில்லம்மா எத்தனை எத்தனையோ பொம்பளைங்க சீதனங்கிற



பிசாசால கல்யாண வாழ்க்கையையே வெறுத்துட்டிருக்காங்க..."

சோகந்தாள முடியாது தன் மடியில் முகம் புதைத்து குலுங்கி குலுங்கி அழுதுக்கொண்டிருந்த மகள் ரோசினியை பாசத்துடன் வருடிவிட்டாள் தாய்.

□□

"பொம்பள அவளுக்கே அவ்வளவு ரோசமிருந்தா உனக்கு எவ்வளவு ரோசமிருக்கணும்? ஒரு சதங்கூட சீதனங்கொண்டு வராத அவளுக்கு சொகுசான வாழ்க்க வேற கேக்குதோ! சீதனங்கொடுக்க முடியுமுனா திரும்பி வரட்டும். இல்லாட்டி அப்படியே அவள விவாகரத்து பண்ணிடு...! உனக்கு ஒரு பணக்கார பொண்ணா பார்த்து நான் கட்டி வைக்கிறேன்."

சுரேஷின் தாய் கூறி முடிக்க அவனும் சரி என்பதைப்போல தலையாட்டிக்கொண்டிருந்தான்.

"என்னம்மா நீங்க பேசிற கத? அண்ணா தான் புரியாம அப்படிச் செய்துடிச்சினா நீங்களுமா இப்படி பேசிறது? அண்ணிய கல்யாணம் முடிக்கிறப்போ கேட்காத சீதனத்த இப்ப கேட்க ஏம்மா நீங்க ரெண்டு பேரும் நினைச்சிங்க? நீங்களும் ஒரு பொண்ணு தானேம்மா! இதே மாதிரி நிலம நாளைக்கு நாம கட்டிகொடுத்த அக்காவுக்கும் நடக்காதுனு என்னம்மா நிச்சயம்?"

சுரேஷின் கடைசி தங்கை சுரோஷினிதான் கேட்டாள்.

சுரேஷினி பல்கலைக்கழக அனுமதியை எதிர்பார்த்துக்கொண்டிருப்பவள்- சீதனத்தை அழிக்க பாடுபடுபவள். முக்கியமாக பெண்ணுரிமை பெற உழைப்பவள்.

ஆனால் அவளின் பேச்சு அவர்கள் காதுக்கு. எட்டவில்லை.

□□

சுரேஷின் தாய் பதறிக்கொண்டிருந்தாள்.

"பாருடா சுரேஷ்' இவவுட்டு புருசன் செய்திருக்கிற வேலைய? இவள வீட்டுக்குப் போய் சீதனம் வாங்கிகிட்டு வானு அடிச்சி கொடுமைப் படுத்தியிருக்கான்..! பாவி பய! கொஞ்சம் சரி மனிதத் தன்மையே இல்லாம நடந்துகிட்டிருக்கான்..!"

சுரேஷுக்கு எதை சொல்வதென்று புரியாமல் மௌனமாய் நின்றான்.

நடந்ததை, நடப்பதை ஆச்சரியத்துடன் பார்த்துக்கொண்டிருந்த சுரோஷினி தான் பேசினாள்:

"அம்மா அன்றைக்கு நம்ப அண்ணிய, சீதனம் கொண்டு வரலணு நீங்களும் அண்ணனும் சேர்ந்து அடிச்சி, திட்டி அவவ அம்மா வீட்டுக்கு அனுப்புனீங்களே! அந்த நேரம் அவவுட்டு அம்மா எவ்வளவு துக்கப்பட்டிருப்பாங்க! இன்னைக்கு அக்காவுட்டு மாப்பிள்ளைய கண்டபடி ஏசினீங்களே முதல்ல நீங்க செய்த தப்ப யோசிங்க! அவுங்களுக்கு ஒரு ஞாயம்! உங்களுக்கு ஒரு ஞாயமா? உங்கள மாதிரி மாமியார் மாரும் அண்ணாவ மாதிரி புருசன் மாரும் இருக்கும் வரைக்கும் எப்பவுமே பொம்பளைங்க தலை நிமிர்ந்து வாழவே முடியாது!"

கண்களில் முட்டிக்கொண்டு வந்த கண்ணீரை துடைத்தபடி அக்காவின் கரங்களை கெட்டியாக பிடித்துக்கொண்டு அழ ஆரம்பித்தாள் சுரோஷினி.

தாய் சிலையாய் நிற்க, மனம் தெளிவடைந்த சுரேஷ் மனைவி ரோசினியின் வீட்டை நோக்கி நடக்க தொடங்கினான்.

வானிலிருந்து லேசாக தூறிய மழை துளிகள் அவனுடம்பில் பட்டு சீதனப்பேயை முற்றாக சாகடித்துக்கொண்டிருந்தது. ●

---

# வைர நெக்லஸ்

**என்.உதயகுமார்**

கஸ்தூரி கலங்கித்தான் போனாள்.

திடீரென்று இப்படியொரு சோதனையை சந்திக்கவேண்டி ஏற்படும் என்று அவள் கொஞ்சமும் எதிர்பார்க்கவில்லை.

இப்போது எப்படி சமாளிப்பதென்று தெரியவில்லை அவளுக்கு.

"என்ன கஸ்தூரி பேசாமல் நிற்கின்றாய்? போய் அந்த வைர நெக்லஸை எடுத்துக் கொண்டு வாயேன்." பார்வதியம்மாள் மீண்டும் கட்டளையிட்டாள். எப்படி அதை அடுத்துக் கொண்டு வந்து கொடுப்பது?

அதுதான் போலி நகையாயிற்றே.

'இந்த உண்மை மட்டும் பார்வதியம்மாளுக்கும் தெரிந்துவிட்டால் அடுத்த நிமிடமே என்னுடைய மூட்டை முடிச்சுக்களை தூக்கி வீசி எறிந்து பிறந்த வீட்டுக்கு அனுப்பி வைத்து விடுவாவே.'

கஸ்தூரியினது காதல் திருமணம் தான். ஆனால் ராமுவின் தாய் பார்வதியம்மாள் கண்டிப்பாகக் கூறிவிட்டாள். மகளுக்கு வைர நெக்லஸ் போட்டுத்தான் அனுப்பி வைக்க வேண்டும் என்று. ராமுவாலும் தாயை எதிர்த்து ஒன்றும் பேச முடியவில்லை. கஸ்தூரியின் வீட்டவர்கள் இதைக்கேட்டு திகைத்துத்தான் போய்விட்டார்கள். அதுவும் உடன் வைர நெக்லஸ் போடுவதென்றால்..... கல்யாணச் செலவு வேறு இருக்கிறதே! அவர்கள் தயங்குகையில் கஸ்தூரியின் அண்ணன் கோபால் தான் "உங்கள் விருப்பம் போலவே எல்லாம் செய்கின்றோம்" என்று கூறி அவர்களை அனுப்பி வைத்தான். என்ன துணிவில் அவ்வளவு தைரியமாக அப்படிக் கூறினான் என்று கஸ்தூரிக்கு பிறகுதான் தெரிந்தது. அவனது திட்டத்தைக் கேட்டு பயந்துதான் போனாள் அவள்.

"பயப்பிடாதே, எப்படியும் கொஞ்ச நாளில் நான் நெக்லஸ் செய்து தருவேன், அதுவரை இந்த போலி வைர நெக்லஸை வைத்து சமாளித்துவிடு" என்று தயங்கிய அவளிடம் வற்புறுத்தி சம்மதிக்க வைத்தான் கோபால்.


கஸ்தூரியும் ராமுவை கைப்பிடிக்க வேறு வழியின்றி சம்மதிக்க நேர்ந்தது.

ஆனால் இப்படித் திடீரென்று தான் அகப்பட்டுவிடுவோம் என்று அவள் சிறிதும் எதிர்பார்க்கவில்லை.

"எனக்கு உன் தயக்கம் புரியுது கஸ்தூரி, இவர்கள் எனக்கு வேண்டியவர்கள்தான். என்னிடமிருந்த காசையெல்லாம் வட்டிக்கு விட்டேன், அதனால்தான் உன் நெக்லஸை கேட்கின்றேன். பணம் வந்ததும் திரும்ப மீட்டுக்கொள்ளலாம்." பார்வதியம்மாள் மேலும் கூறினாள்.

இந்த நெக்லஸை அடமானம் வைத்தால் நிச்சயம் இதுபோலி என்று கண்டு பிடித்துவிடுவார்களே?

'கடவுளே நான் இப்போ என்ன செய்வது?'



செய்வதறியாது கஸ்தூரி தவித்தாள்.

"ராமுகிட்ட நான் சொல்லிக் கொள்ற எம்மா. நீ பயப்பிடாம நகையை எடுத்துக் கொண்டு வந்து கொடும்மா."

இனியும் பேசாமலிருக்க முடியாது. வேறு வழி தோன்றாமல், நடப்பது நடக்கட்டும். இன்று ராமு வந்ததும் அவனிடம் உண்மையைக் கூறி மன்னிப்புக் கேட்டுவிட வேண்டுமென எண்ணியபடி கஸ்தூரி நெக்லஸை எடுத்துக்கொண்டு வந்து கொடுத்தாள்.

அன்று மாலை வீடு திரும்பிய ராமுவிடம்,

"என்னை மன்னிச்சிடுங்க ராமு. வைர நெக்லஸ் போலியானது என்ற உண்மையை இத்தனை நாளாய் உங்களிடம் மறைச்சிட்டன்" என்று பயந்து பயந்து கண்களில் கண்ணீருடன் தனது கையைப் பிடித்துக் கொண்டு கெஞ்சும் கஸ்தூரியை பார்க்கையில் அவனுக்குப் பாவமாயிருந்தது.

திருமணம் முடித்த மறுநாளே கோபால் அவனிடம் வந்து உண்மையைக் கூறி மன்னிப்புக் கேட்டதும், இரண்டு நாளைக்கு முன்புதான் கோபால் ஆபிஸிற்கு வந்து அசல் வைரநெக்லஸை கொடுத்து விட்டுப் போனதையும், அவன் அதை கஸ்தூரிக்குத் தெரியாமல் மாற்றி வைத்ததையும் நினைக்க, ராமுவிற்கு தன் மனைவியின் மனசை நோகடித்துவிட்டோமோ என்று தோன்றியது.

தன் மார்பில் முகத்தைப் புதைத்துக் கொண்டு அழும் அவளை ஆறுதலுடன் தடவிக் கொடுத்தான் அவன். ■

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்

தருவது
ரதிகன்



# துயர் சொன்னாள் தோழி



விடை பகன்றாள்.

"வேண்டியவரை தந்தேன் அல்லவா? அதுதான் இதழ் சிவப்பும் உங்களிடம் வந்துவிட்டது. என் இதழ் வெளுத்துவிட்டது."

குறும்பான பேச்சுத்தான் என்றாலும் கரும்புச் சுவை தோற்கும் இதழ் பானச் சுவையில் வீழ்ந்து பருகியது அதிகம்தான். அதனால் அமுத இதழ் பொன் நகையாள் அலை வந்து முத்தமிட குளிர்ச்சி பெறும் கடற்கரையைப் போல் நானும், அவள் வந்து முகம் காட்ட அகமெல்லாம் குளிர்ந்துவிடும் நிலையறிவேன்.

கார்மேகம் மழை பொழியும். அவள் கார் கூந்தல் அசைய என் மனம் மகிழும்.

என்றெல்லாம் நினைத்தபடி விரைந்து வந்தான் வீரமகன்; ஆனால் காதல் என்னும் களிப்பான களத்திலே வீழ்ந்த மகன்.

அது என்ன பேச்சுக்குரல்? அதில் என்ன சந்தேகம்? உயிர்மூச்சு நீடிக்க எவளொருத்தி காரணமோ அவளின் குரல்.

ஆகா... என்ன தவம்! தேடி வந்த எனவே உடனே தோழி பேசத் தொடங்கினாள்.

"போடி இன்னுமா நம்புகிறாய் உன்னவர் வருவார் ஓடோடி என்று? கண்ணாளர் என்கிறாய் கல் அவர் நெஞ்சம் என்றுணராயோ நீ? மன்னவர் என்கிறாய் உனை நினைக்காத மனம் அவர் சொந்தம் தெரியுமா உனக்கு? ஆருயிர் என்கிறாய் ஆனால் அவரோ உன் உயிர் துடிக்கும் என்று அறிந்தும் யாருயிர் துடித்தால் எனக்கென்ன என்றல்லவோ நாடி வராதிருக்கிறார்!"

தோழியின் பேச்சு செவியில் விழ வந்தவன் செடி மறைவில் மறைந்து கொண்டான்.

அவளுக்கோ தோழி ஏன் இப்படி பேசுகிறாள் என்று புரியவில்லை.

தோழியோ விடாமல் தொடர்ந்தாள்,

"வானப் பெண் சூரியனை வழியனுப்பும் மாலைப் பொன் நேரம் காணக்கிடைக்காத காதலனை நினைத்து நீ வருந்துவதை காட்டுமடி உன் விழியோர ஈரம்! மதமார்பில் பூசிய சந்தனத்தை இனி எதற்கு? ஏன் எனக்கு? மனதுக்குள் இருந்தவனே மறந்து போனான். மார்புக்கு சந்தனமோ இனித் தேவை? என்றுரைத்து அழித்துவிட்டு விழிக்குடத்தை கவிழ்த்து நீ கொட்டிய நீர் வரப்புக்கட்டி வைத்திருந்தால் பெரும் குளமாய் சேர்ந்திருக்கும்."

என்றெல்லாம் தோழி சொல்ல, செடி மறைவில் இருந்தவனோ வேர் அறுந்த கொடி வீழ்ந்து வாடிய நிலை அடைந்தான்.

இதனைத்தான்- தன் தலைவியின் ஆறாத சோகத்தை தலைவன் காதுபட தோழி எடுத்துரைக்கும் பாங்கைத்தான், கடைச்சங்க தமிழ் நூலாம் நாலடியார் ஒரு பாட்டில் நமக்குரைத்துள்ளது. அந்தப் பாடல் இதுதான்:

**"ஓலைக் கணக்கர் ஒலியடங்கு புன் செக்கர்**
**மாலைப் பொழுதில் மணந்தார் பிரிவு உள்ளி**
**மாலை பரிந்திட்டு அழுதாள் வனமுலை மேல்**
**கோலம் செய் சாந்தம் திமிர்ந்து."**

அதிகாரம்-40, பாடல்-397.

# இலக்கிய நயம்

பத்துத் திங்களாகிவிட்டது. பவழச் செவ்வாய் இதழாளைப் பிரிந்து.

நினைத்தது மனம். பார்த்துவிட துடித்தன விழிகள். மனமும், விழிகளும் கொண்ட அவசரத்தை புரிந்ததுபோல விரைந்தன அவன் கால்கள்.

பொழிந்த பொருள் உண்மைதான் என்று உணர்ந்தான்.

அருந்தும்போதுதான் கள் மயக்கம் தலைக்கேறும். கொல் விழியாள் சுவையிதழில், அவள் வெண் பற்களில் ஊறி வருமந்த பானம் ஒருமுறை அருந்திவிட்டால்

தேவமகள், காணத்துடித்து வந்த கானமயில், கண்டுவிட்டால் காத தூரம் ஓடிவந்த களைப்பெல்லாம் தீர களிப்புத்தரும் சிந்து நகைக் காரியவள். எதிர்வந்தாள் பார் மனமே! இதுவன்றோ பெரிய தவம்!

தூரத்தே கேட்கும் காலடியோசையை

விடைபெற்றபோது சுளையாகப் பெற்ற முத்தம் இப்போதும் இனித்தது.

'இச்' ஒலி இன்னும் செவியில் கேட்டுக்கொண்டிருப்பதுபோல மனம் உணர்ந்தது.

கனி முத்தம் தரு முன்னர் சிவந்திருந்த இதழ்கள், கனி முத்தம் தந்த பின்னர் நிறம் மாறிப்போனதென்ன? அன்றே - அப்போதே கேட்டான் சந்தேகத்தை.

வெட்கித்தான் போனாள். எனினும்

எப்போது நினைத்தாலும் சித்தத்தில் மயக்கம் வரும்.

அடடாவோ.... அடடா! மின்னல் இடை தொட்டு மெல்ல அணைத்திட்டால், செவ்வானம்போல் முகம் வெட்கி நிறம் காட்ட, அவள் சிணுங்கும் அழகுக்கு நிகர் சொல்ல வார்த்தையுண்டோ?

மார்போடு மார்பணைந்து கொள்ளுமந்த மந்தகாச நேரத்தில் மலர்விழிகள் மூடியவள் விடும் மூச்சு போதும் என் உயிர்மூச்சு ஓயாமல் இருப்பதற்கு.

வைத்தே வருவது யார் என்று செவியறியும்.

மனமறிந்த மன்னவனின் பாத ஓசையதை மன்னவளின் செவியறியாதோ?

வதனம் வானத்து மாலை மயக்க சிவப்பாகியது.

"வருகிறாரடி."

என்றாள் வாயிதழ் துடிக்க! தோழியோ குறும்புக்காரி.

தன் பிரியமானவள் பிரிவு வேதனையில் சுமந்திட்ட கொடும் துயரம் அறிந்து வருந்திய நெஞ்சக்காரி.

## குறுக்கெழுத்துப் போட்டி இல–73

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 1 | | 2 | | ■ | 3 | ■ |
| | ■ | | ■ | 4 | | 5 |
| | 6 | ■ | 7 | ■ | | |
| ■ | 8 | | | | ■ | |
| 9 | | ■ | | ■ | 10 | |
| 11 | | 12 | | ■ | | |
| | ■ | | ■ | 13 | | ■ |

### இடமிருந்து வலம்

1. இதில் துவாரம் இருந்தால் மழைக்காலத்தில் அவதிதான்.
4. வாடிய இலைகள் இப்படியும் அழைக்கப்படும்.
8. ஏதாவது ஒரு தேவை குறித்து குறிக்கப்படும் ஒரு பகுதி.
11. கண்ணனோடு மோதியதால் அழிந்தவன் இவன்.
13. நமது தேசிய உணவிற்கு இதுவே ஆதாரம்.

### மேலிருந்து கீழ்

1. வாளுக்கு இது தேவை.
2. துப்பாக்கியோடு தொடர்புடையது.
3. இது படையினருக்கும் உண்டு, பாடசாலைச் சிறுவர்களுக்கும் உண்டு.
5. இதுவும் மகிழ்ச்சியின் வெளிப்பாடுதான்.
6. இதுவும் பசுமைக்குத்தேவை.
7. குன்னக்குடி வைத்தியநாதனுக்கு இதுதான் பிடிக்கும்.
9. இது வெள்ளை நிறத்தில் கிடையாது.
10. இதன் நிமித்தமும் மோதல்கள் வருவதுண்டு.
12. கிரகங்களில் ஒன்று.

இதற்குரிய சரியான விடையைக் கூப்பனில் நிரப்பி அஞ்சலட்டையில் வெட்டி ஒட்டி 05.11.1994க்கு முன்னர் எமக்குக் கிடைக்கும்படி அனுப்பிவையுங்கள். அனுப்பிவைக்க வேண்டிய முகவரி:

குறுக்கெழுத்துப் போட்டி இல-73
தினமுரசு வாரமலர்
த.பெ.இல. 1772
கொழும்பு.

சரியான விடையை எழுதி அனுப்புபவர்களில் பத்து அதிஷ்டசாலிகள் தெரிவு செய்யப்பட்டு, ஒவ்வொருவருக்கும் தலா ரூபா 50/= பரிசளிக்கப்படும்.

### குறுக்கெழுத்துப் போட்டி இல-71க்கான சரியான விடைகள்:

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 1 மூ | லி | 2 கை | ■ | 3 இ | ஞ் | 4 சி |
| க் | ■ | ப் | ■ | 5 ரு | சு | த் |
| 6 கு | ப் | பை | ■ | ம் | ■ | த |
| த் | ■ | ■ | 7 நி | பு | ண | ர் |
| 8 தி | 9 யா | ன | ம் | ■ | ■ | ■ |
| ■ | ப் | ■ | 10 ம | று | ப் | பு |
| 11 ற | பு | ப் | தி | ■ | 12 வா | லி |

### குறுக்கெழுத்துப் போட்டி இல.71இல் வெற்றி பெற்ற அதிஷ்டசாலிகள்

1. செல்வி. இ.சுகன்யா
கொழும்பு-12.
2. வஹீதா சகாப்தீன்
மத்துகம.
3. என்.சாரங்கன்
இரத்தினபுரி.
4. எம்.பர்ஷான் இஸ்மாயில்
கட்டுகஸ்தோட்டை.
5. மு.ஜெயராணி
ஹட்டன்.
6. செல்வி.ஜி.நளீபா
ஹட்டன்.
7. சி.மதியழகன்
மட்டக்களப்பு.
8. என்.எம்.பைஸர்
காத்தான்குடி.
9. திருமதி.கே.பரமேஸ்வரி
பதுளை.
10. முகமட் ரஹீம்
கலஹா.

இவ் அதிஷ்டசாலிகள் ஒவ்வொருவருக்கும் பரிசாக தலா ரூபா 50/= வழங்கப்படும்.

ஸ்போர்ட்ஸ்

# நம்பிக்கையான துடுப்பாட்டம் டெண்டுல்கர் கூறுகிறார்



"ஒருநாள் போட்டிகளின் வெற்றி-தோல்வியை யாரும் அலச முடியாது. என்னைப் போன்ற மிடில் ஓடர் (மத்திய வரிசை) துடுப்பாட்டக்காரர் 30வது அல்லது 40வது ஓவரில் இறங்கி விளையாட ஆரம்பிக்கும்போது பந்தை அடித்து விளையாடுவதா அல்லது பொறுமையாக நின்று விளையாடுவதா என்று முடிவு செய்வதில்லை. எந்த முடிவு எடுத்தாலும், ஒன்று ஓட்டமெதுவும் எடுக்க முடியாது அல்லது சீக்கிரம் அவுட்டாகி விடுவோம். ஒருநாள் போட்டிகளில் சிறந்தவராக இருப்பவருக்கு ஆட்டத்தின்மீது சீரான கவனம் இருக்க வேண்டும். எனக்கு அது இருக்கிறது. என்னுடைய விளையாட்டு நுட்பம் என்றுமே சரியாகவே இருக்கிறது. நான் ஒரே மாதிரியாகவே அவுட் ஆவதில்லை என்ற உண்மையே ஒருநாள் விளையாட்டுக்களில் உள்ள சிரமங்களை எடுத்துக்காட்டிவிடும். என்னால் ஒருநாள் கிரிக்கெட் ஆட்டங்களிலும் சோபிக்க முடியும்" இவ்வாறு உறுதிபடக் கூறியுள்ள டெண்டுல்கர் சமீபத்தில் துவக்க ஜோடியில் சேர்க்கப்பட்டார்.


மிடில் ஓடர் (மத்திய வரிசை) துடுப்பாட்டக்காரராக இருந்த அவரது சிரமங்கள் எல்லாம் களைந்து எறியப்பட்டன. அவர் சொன்னது போலவே புத்திக் கூர்மையுடன், பொறுமையுடன் விளையாட்டு நுட்பத்துடன் எல்லாவற்றிற்கும் மேலாக மன உறுதியுடன் ஒருநாள் சர்வதேச போட்டிகளில் கலந்து கொண்டார்.

முடிவாக அவரது தன்னம்பிக்கையும் கை கொடுத்தது. சமீபத்திய சிங்கர் கோப்பை உலகத் தொடர் போட்டிகளில் அவுஸ்திரேலியாவை எதிர்த்து விளையாடியபோது 43 பந்துகளில் முதல் 50 ஓட்டங்களை எடுத்தவர் தொடர்ந்து 121 பந்துகளில் தனது முதல் சதத்தைப் பெற்றார். முடிவில் 8 பவுண்டரிகளும், 2 சிக்ஸர்களும் உள்ளடங்கிய 110 ஓட்டங்களை எடுத்துத் தனது சபதத்தை நிறைவேற்றினார்.

# மீண்டும் ஆடும் மரடோனா

அமெரிக்காவில் இந்த ஆண்டு நடைபெற்ற உலகக் கோப்பை கால்பந்து போட்டியின்போது ஆர்ஜென்டினாவைச் சேர்ந்த மரடோனா தடை செய்யப்பட்ட போதைப் பொருளை உட்கொண்டது கண்டுபிடிக்கப்பட்டதால் அவருக்கு 15 மாத சர்வதேச தடை விதிக்கப்பட்டது தெரிந்ததே.

இந்தத் தடைக்காலம் முடிவடைந்ததும் மரடோனா முன்புபோல் கால்பந்து விளையாட்டில் ஈடுபடுவாரா? என்ற சந்தேகங்கூட உலகெங்கிலும் உள்ள கால்பந்து இரசிகர்களின் மனதில் எழுந்தது.



இதற்கிடையே, கால்பந்தாட்டத்தில் விளையாடத்தானே தடை, பயிற்சியாளராக ஆவதற்குத் தடை விதிக்க முடியாதே என்பதுபோல ஆர்ஜென்டினாவில் உள்ள 'போகா ஜுனியர்ஸ்' என்ற கால்பந்தாட்ட விளையாட்டுக் கிளப்பின் உதவிப் பயிற்சியாளராக மரடோனா சேர்ந்தார்.

அதன் பின்னர், இந்த மாதம் ஆர்ஜென்டினாவில் உள்ள சமூக நல அமைப்பு ஒன்று நிதி திரட்டும் நோக்கத்திற்காக நட்பு ஆட்டக் கால்பந்து போட்டியொன்றில் மரடோனா விளையாட வேண்டும் என்று வேண்டுகோள் விடுத்ததால், அதனை ஏற்றுக்கொண்ட மரடோனா அந்தக் கால்பந்தாட்டப் போட்டியில் பங்கேற்று விளையாடினார். கால்பந்தாட்டக் களத்தில் அதிரடி மன்னனான மரடோனாவின் மின்னல் வேக ஆட்டத்தினை மீண்டும் ஒருமுறை காணும் அரிய வாய்ப்பு ஆர்ஜென்டினா கால்பந்து இரசிகர்களுக்கு மட்டும் கிடைத்து விட்டதே.

**இவ்வாரம் (30.10.94 ஞாயிறு மாலை 7.00மணி) எம்.ரி.வியில் மகாபாரதம் தொடரைப் பார்க்கும் உங்கள் கரத்தில் முரசும் இருக்கட்டும்.**

# மகாபாரதம்

அங்கம் 52

அழகு தமிழில் தருவது- இராஜகுமாரன்

**காலத்தின் குரல்:** பழமையில்லாமல் புதுமைகள் இல்லை. பழமையைப் பேணுதல் புதுமைக்கு உரமே! பண்டை நடைமுறைப் பண்புகள் யாவுமே இன்றைய நிலைக்கு ஏற்புடைத்தாகுமா? பாண்டவர் ஐவரை பாஞ்சாலி அடைந்தமை பண்டைய முறைக்கு பாதகமாகா..! இன்றைய நிலைக்கு அது நலமாகுமா? கன்னி ஒருத்தியை கணவர் பலரால் கடிமணம் புரிதல் காலத்துக்கேற்புடை காரியமல்ல. கொண்ட மனைவியை பந்தயமாக்கிட பாரினில் இன்று பாதையுமில்லை.மகாபாரதம் எனும் மாண்புறு காவியம் மனுக்குலத்துக்கின்று படைத்திடும் பண்புகள் ஏற்புடைத்தாயின் ஏற்பது நலம் தரும். காலத்துக்கொவ்வாக் கருத்துக்கள் நீக்கி நன்மைகள் மட்டுமே நாடுவதறிவாம்.

-காட்சி தொடக்கம்-

பாண்டவர்களின் வனவிடுதிக்கு இரதத்தில் வரும் கிருஷ்ணர் கவலையுடன் தனித்திருக்கும் அர்ச்சுனனை நெருங்கித் தொடுகிறார்.

**அர்ச்:** வாசுதேவா!

**கிருஷ்:** கவலைப்படக் காரணம் இல்லையப்பா காண்டீபா! பாஞ்சாலியின் துயில் பறிக்கப்பட்டது என்றால் பாரதப் பண்பன்றோ படு குழியில் வீழ்ந்தது! நாகரிகக் கூறு நலமிழந்து போனது! கலாசாரக் கோலங்கள் பொலிவிழந்து போயின! முக்காலும் இதற்கு வெட்கித் தலை குனிந்து வேதனைக் கடலாடி விம்மி அழ வேண்டும். பார்த்தனே நீ இந்தப் பார்க்கடலாம் பெருங்கடலின் ஒரு துளிதான். ஒரு துளியால் பெரும் பொறுப்புத்தனை தாங்கும் தகுதியேதுண்டா? விதித்தவழி மீறி வேறேதும் ஆகாது.

**அர்ச்:** கவலை கொள்ளக் காரணம் எதுவுமில்லை என்று கூறி எனைத் தேற்ற எண்ணுகிறாய்! மான பங்கத்தால் பட்ட மனப்புண்ணின் வேதனையால் ஊனுறக்கம் மறந்து உருக்குலைந்து ஏங்குகிறேன். போர் தொடுத்துப் பழி தீர்க்கப் புறப்பட்டாலும் அண்ணன் ஆணையிட்டுத் தடுக்கின்றார். தான் விட்ட தவறுக்கு தண்டனைதான் இதுவென்று பிராயச்சித்தம் தேடும் நிலையில் அவருள்ளார்.

**கிருஷ்:** பாண்டவரில் மூத்தவர்தான்! ஆனாலும் பகடையிலே எவரையும் பணயமாக வைத்தாட அவருக்கு உரிமை இல்லை. காண்டவப் பிரஸ்தத்தை காண்பவர் கண் மொய்க்கும் கவர்ச்சி நாடாக்கியதில் உங்களுக்கும் பங்கு உண்டு. ராஜசூய யாகத்தின் ஏகபோக உரிமை அவருக்கு மட்டுமல்ல; அண்ணனுடன் தம்பிமார் அனைவருக்கும் உண்டு. பாஞ்சாலியைத் தானும் பந்தயப் பொருளாக்கும் தனி உரிமை அவர்க்கில்லை. தன்னுடைய உரிமைகளின் எல்லைகளை மீறி எடுத்த முடிவுக்கு அவர் கழுவாய் தேடட்டும். சூதாடும் சபைதனிலே தீதான முடிவுதனை உமதண்ணன் எடுக்கையிலே உங்களில் எவரேனும் தடுக்க நினைக்கவில்லை. பாஞ்சாலி மட்டும்தான் பதைபதைத்துக் குரல் கொடுத்தாள், அவமானம் என்னும் ஆலகால நஞ்சு அகழ்ந்தே எழுவதற்கும் நீங்கள் அத்தனை பேரும் பங்காளிகளானீர்! கழுவாய் தேடுவதில் உங்களுக்கும் பங்குண்டு!

**அர்ச்:** கழுவாய் தேடுவதற்கும் கால எல்லை உண்டன்றோ? கர்ணனைக் கொல்வதற்குக் கடுஞ் சபதம் பூண்டுள்ளேன். துரியோதனன் தொடையைத் துண்டாடி உடைப்பதற்கும் துச்சாதனன் மார் பிளந்து பச்சிரத்தம் தனை எடுத்து பாஞ்சாலி அவிழ் கூந்தல் பாங்காய் முடிப்பதற்கும் அண்ணனவன் பீமன் அருஞ் சபதம் பூண்டுள்ளான். எங்கள் சபதங்கள் ஈடேறும் நாள்வருமா? கோழைகளின் வரிசையிலே காலம் எமைச் சேர்த்திடுமா? வாசுதேவ கண்ணா! தடை இன்றி விடை கூறு!

**கிருஷ்:** துரியோதனன், சகுனி, துச்சாதனன், கர்ணன் தீய செயல்களுக்காய் துயர்ப்படவும் வேண்டும். இவர் தம் குருதி வெள்ளம் குடிக்க துடித்து நிற்கும் பூமியவள் தாகம் தணிவதற்கு யுத்தம் ஒன்று சாத்தியமே! போர்தான் முடிவென்றால் அவரே தொடங்கட்டும்! பாண்டவரே போருக்கு பாதை அமைத்தனர் என்ற பழியதற்கு இடம் தருதல் பண்புடைமை ஆகாது! அமைதி வழி தேடிடுவோம். சமாதானப் பாதைக்கு சார்பு நிற்க மறுத்தால் சமர் புரியத்தான் வேண்டும். வருங்காலத்தை எண்ணி வருந்த வேண்டாம் விஜயா! நானே நீயாக நீயே நானாக நாமொன்றாய்த் தானுள்ளோம். உன் எதிரி என் எதிரி, உன் நண்பன் என் நண்பன். பார்த்தனாய் நீ இருக்க அந்தப் பரந்தாமன் நானானேன். நடக்க வேண்டியதெதுவோ நடந்தேயாகிட வேண்டும். அவமான ஆழியதை அறமதனால் கடைந்தால் அற்புதமாய் அமிர்தம் ஆங்கே ஊற்றெடுக்கும்.

**அர்ச்:** காலத்தை எண்ணிக் காத்திருக்க வா கண்ணா?

**கிருஷ்:** காத்திருக்கச் சொல்லவில்லை! ஆயத்தங்கள் அனைத்தும் தொடக்கத்தான் கூறுகிறேன்!

**திரௌ:** (வந்துகொண்டே) என்னுடைய பங்களிப்பு இதில் என்ன கண்ணா?

**கிருஷ்:** தீயினிலே அவதரித்த தூயவள் நீ அம்மா! இழிவேதும் உன்னைத் தீண்ட முடியாதன்றோ? மனிதாபிமானம்தான் மாண் பிழந்து போனதன்று. கதிரவனைத் தொட்டு கறைப்படுத்திடலாமோ? பஞ்சபெரும் பூதங்களை இழிவாக்கி இகழ்வதற்கு எவரால்தான் முடியும்? மானிட சமுதாயம் என்று முனைப் போற்றுமம்மா! மாயத்திரை விலகி மாண்புடனே புகழ் பெறுவாய்!

**திரௌ:** உண்மையே உருவான உயர் குணக்குன்றே! உலகங்களனைத்துக்கும் கருப்பொருளானவன் நீ! நித்தியத்தின் தத்துவமே! நிலைபெற்ற வித்தகனே! காலை உதித்தெழுந்து மாலையதில் மறைகின்ற கதிரவன் நீயன்றோ! உன்னை உறு துணையாக ஏற்றுவிட்ட என்னை அன்று உன் மத்தர் துயிலுரிந்து உளமகிழ்வுற்றிருந்தார்கள். துச்சாதனன் எந்தன் சிகைதனைப் பிடித்திழுத்தான். சூத்திர குலத்துதித்த கர்ணனவன் என்னை விலை மாதே என்றழைத்து விழி கலங்க வைத்திட்டான்! கங்கையின் மைந்தர் என்ற பீஷ்மர் குலத்தில் புகுந்த மறு வீட்டுப் பெண் எந்தன் மானம் பறித்தார்கள்! (அழுகிறாள்)
கொடுமைகள் அத்தனையும் கவுரவ வம்சத்தின் குலப் பெருமை காத்து நிற்கும் திருதராட்டிர மன்னர் திருச் சபையில் நடந்ததன்று! வில்லுக்கே விஜயனென்றும் மல்லுக்கு பீமனென்றும் மங்காப் புகழ்படைத்த என் கணவர் ஐவரும் அமைதி கடைப்பிடித்து அசையாதிருந்தார்கள்! அவமானம் தாங்காமல் அழுது புலம்பினேன் நான். அத்தனையும் கண்டும் அவலக் குரல் கேட்டும் அரண்டெழவில்லை இவர்!

அர்ச்சுனன் திரௌபதியின் அருகில் சென்று அவளைத் தேற்ற முயல்வதை கிருஷ்ணன் தடுக்கிறார்.

**கிருஷ்:** உன்னை இழிவாக்கி இன்புற்றிருந்தோரின் இறுதி வெகு தூரமில்லை. உயிரற்று வீழும் அவருடலின் மீது அழுது புரண்டிடுவார் அவர் பாரியாரும். காம்பிலிய நாட்டுக்கு உன் மகனை அனுப்பி வைத்தாய்! நல்லதே செய்தாய். சுபத்திரையும் துவாரகைக்கு அபிமன்யுவுடன் ஏகி அமர் புரியும் வித்தைகளை அறிவதற்கு வழியுண்டு.



**திரௌ:** யுத்தமொன்று மூழ்வதற்கு ஏத்தனங்களேது முண்டா?

**கிருஷ்:** யுத்தமொன்றை என்றும் நான் விரும்பி வரவேற்பதில்லை!

**யுதிஷ்:** (வந்து கொண்டே) நீ விரும்பவில்லையானால் யுத்தம் வருவதற்கு வேறு வழி ஏதுண்டு?

**கிருஷ்:** நான் விரும்பும் படியேதான் எல்லாம் நடக்கிறதா? பாஞ்சாலி துயிலுரிதல் என்னுடைய எண்ணமதா? அவள் கூந்தல் அவிழ்ந்தபோதே போருக்கு பாதை தயார்! துரியனவன் பொறாமை, திருதராட்டிரன் ஆசை அத்தனையும் சேர்ந்த அன்றே போர் முனைக்கு பறை அறைந்ததாயிற்று. சோர்ந்திருக்க வேண்டாம்! அண்மித்து வருகிறது அளப்பரிய போர் ஒன்று. அர்ச்சுனா உன் எதிரே யார் பொருத வருவர் என்று எண்ணிப் பார் இப்போது! துரியனவன் தரப்பில் துரோணரும் இருப்பார்! கங்கையின் மைந்தரும் அவரருகே நிற்பார். அணி அணியாய் நிற்கும் எதிரணியின் வரிசையிலே அஸ்வத்தாமனும் இருப்பான்; கிருபரும் கர்ணனும் ருக்மியும் ஜயத்ரத மன்னனும் துரியனுடன் ஓரணியில் நிற்பார்கள். இரு நாடுகளுக்கிடையே ஏற்படும் போரல்ல..! எக்காலும் எங்கேனும் எண்ணித் துணியாத முக்காலமும் அறியா மூர்க்கமான போர் நடக்கும். ஆகவேதான் அர்ச்சுனா! இந்திரனிடம் சென்றிப்போ தெய்வீக அஸ்திரங்கள் அத்தனையும் சேர்த்து வரப் புறப்படு நீ இன்று!

துரியோதனன் ஆங்கே துரிதகதி தனிலே போருக்கு வேண்டிய அத்தனையும் சேர்த்து ஆயத்தமாகிறான்.

-காட்சி மாற்றம்-

வனத்தில் அர்ச்சுனன் கடுந்தவம் புரிகிறான். அவன் முன்னே இந்திரன் தோன்றுகிறான்.

**இந்தி:** அர்ச்சுனா! உனக்காக இன்னும் எத்தனை நாளிகைதான் காத்திருக்க வேண்டும்?

**அர்ச்:** மன்னியுங்கள் பிரபோ!

**இந்தி:** கானகத்தில் வாழும் நீ கடுந்தவம் இயற்றி இப்போ ஆயுதங்கள் கோருதற்கு அவசியமும் ஏனோ?

**அர்ச்:** வீரனுக்கு உயிர் மூச்சு வில்லும் வேலும் தானே!

**இந்தி:** தெய்வீக ஆயுதங்கள் மகேசுவரனின் சொத்து! பரமசிவன் மனம் கனிந்தால் பாசுபத அஸ்திரத்தை பாசமுடன் பெறலாம். அந்தப் பரம் பொருளை எண்ணித் தவத்திலிரு! அவனிதனில் உனை வெல்ல எவராலும் முடியாதே!

-காட்சி மாற்றம்-

துரியோதனன் சிந்தனையிலாழ்ந்தவனாய் உலவுகின்ற வேளையிலே பேரொலி எழுகிறது. பூதம் ஒன்று அவன் முன்னே தோன்றுகின்றது. பின்னர் மனித உருக்கொள்கிறது.

**துரி:** வந்தாயா நண்பனே! உன்னை எதிர்பார்த்திருந்தேன்!

துரியோதனன் கை ஒசை செய்ய கைதிகளுடன் காவலன் வருகிறான்.

**துரி:** (தொடர்ந்து) இத்தனை பேரும் உனக்கேதான் உரியவர்கள். உன் பசி அடங்கும்வரை உண்டு மகிழ்ந்திடுவாய்! சிறை நிறைந்து வழிகிறது. துரோகிகளின் தொகை அங்கே பெருகிக் கிடக்கிறது.

**பூதம்:** அது போதும் எனக்கு! எது வேண்டும் உனக்கு?

**துரி:** அர்ச்சுனனை அழித்துவிடு! ஆரணியம் தன்னில் அவன் தெய்வீகக் கணைகள் பெற தவமியற்றி வருகின்றான். தொலைத்து விடு அவனை!

பூதம் கட்டளையை ஏற்று மறைகிறது.

□□□

அர்ச்சுனன் சிவனை நோக்கி மீண்டும் தவமியற்றுகிறான். துரியோதனனால் ஏவப்பட்ட பூதம் பன்றி உருக்கொண்டு பார்த்தனைத் தாக்குதற்கு வர அர்ச்சுனன் அதன் மீது பாணம் தொடுக்கின்றான். பன்றி இறக்கிறது. ஆனால் அதன் உடம்பில் தான் எய்த அம்போடு மற்றுமொரு அம்பு பாய்ந்திருப்பதைக் கண்டு திகைத்து விடுகின்றான். அப்போது வேடன் ஒருவன் அவ்விடம் வருகின்றான்.

**அர்ச்:** இரண்டாவது அம்பை எய்தவன் நீயா? நான் தானே கொன்றேன்!

**வேடன்:** இவ் அம்புக்குரியவன் நான். நானேதான் கொன்றேன். உன் அம்பை எடுத்து விட்டு அப்பாலே போ வாலிபனே!

**அர்ச்:** உயிர் வாழ வாஞ்சையற்று குதிக்கின்றாய் இப்போ நீ! என் அம்புக்கிரையாகும் எண்ணம் இருக்குமெனில் இங்கேயே நின்றுவிடு! தப்பிப் பிழைத்திடும் எண்ணமிருந்தால் நீ தயங்காமல் ஓடிப்போ!

**வேடன்:** வீண் பெருமை பேசி வாய் வீச்சில் என்ன பயன்? உன் குருவால் நீ பெருமையுற்றால் அக்குருவை வணங்குகிறேன். வம்சத்தால் பெருமையுற்றால் உன் வம்சப் பெருமைக்கு மதிப்புமில்லை மாண்புமில்லை. வில்லுக்கு வீரனென் றால் சொல்லோடு நிற்காமல் வில்லுக்கே வேலை கொடு! உன்னுடைய அம்புகளின் அதிசய சக்தியினை அறியவும் வாய்ப்புக்கொடு!

அர்ச்சுனன் பாணங்களைப் பொழிவதற்கு முன்பே வேடன் தனது பாணங்களை ஏவி அர்ச்சுனனை செயலிழக்க வைக்கிறான். அப்போது தன்னுடைய வில்லுக்கும் தனக்கும் ஏதோ அமானுஷ்ய சக்தி ஏற்படுவதை உணர்ந்து வேடனிடம் நெருங்கி மரியாதை செய்கிறான்.

**அர்ச்:** சங்கரனோ பிதாமகரோ இந்திரனோ என் குருவோ அன்றி வேறெவரும் இந்நிலைக்கு எனை ஆக்க என்றென்றும் முடியாது. துரோணரும் அல்ல நீர்! பிதாமகரும் அல்ல வென்றால் அந்தச் சங்கரனே எனை ஆள இங்குற்று வந்தனரோ!

அர்ச்சுனன் வணங்க வேடன் உரு மறைந்து அங்கே வேத முதல்வன் அந்தச் சிவனுருவில் தோன்றுகிறான்.

**சிவன்:** அர்ச்சுனா! உன் அன்பதனை உரிமையுடன் ஏற்றேன். வேண்டும் வரம் கேள்!

**அர்ச்:** எல்லாம் அறிந்தவர் நீர்! எமக்கு அவரிழைத்த அநீதிகளும் அறிந்தவர் நீர்! பாண்டவரின் உரிமையுடன் மனுக்குலத்தின் மாண்பினையும் பாதுகாக்கும் பொருட்டு பாசுபதம் என்னும் அஸ்திரத்தைத் தந்தருள்க!

**சிவன்:** வாசுதேவ புத்திரனும் வானலோக இந்திரனும் வகையான பாடங்கள் சுவையோடு புகட்டினரோ?

**அர்ச்:** தானே நானாக-நானே தானாக இணைந்தொன்றாய் இருப்பதான இணக்கத்தைக் காட்டி என்னை இயக்கி வைத்தான் கண்ணன்.

**சிவன்:** அர்ச்சுனா! அது போதும்! கண்ணனுக்குத் தோழன் என்றால் எந்தனுக்கும் அன்பன் தான்.

இவ்வாறு கூறிய சிவன் கைகளை நீட்ட அவற்றில் பாசுபதாஸ்திரம் தோன்றுகிறது. அதனை அர்ச்சுனனிடம் தருகிறார்.

**சிவன்:** பாசுபத அஸ்திரத்தை ஏற்றுக்கொள் அன்பா! இந்திரனிடம் சென்று வேண்டுவதைப் பெற்றுக்கொள்.

□□□

**காலத்தின் குரல்:** பாசுபதம் ஏற்ற பார்த்தன் இந்திரனிடம் சென்றான். தெய்வீக சக்தி கொண்ட அஸ்திரங்களைப் பெற்றான். தந்தையுடன் சிலகாலம் தனையன் இருக்கட்டும். துவாரகையில் சுபத்ரை அபிமன்யூவுடனிருந்து தனிமை தவிர்க்கின்றாள். அஸ்தினாபுரம் செல்வோம்- தேசம் பல சுற்றி வெற்றிவாகை சூடி மன்னவரின் பொன் முடிகள் பலவற்றைப் பெற்று பவனி வருகின்றான் வீரனவன் கர்ணன். விழாக்கோலம் பூண்டு வரவேற்கப்படுகின்ற வியத்தகு காட்சிதனை விருப்புடனே காண்போம் நாம்!

அஸ்தினாபுரி அரண்மனை– கர்ணன் வெற்றி பெற்ற கிரீடங்களுடன் சபைக்கு வருகின்றான்.

**காவலன்:** வீராதி வீரன்! அங்கத்துக்கதிபன் கர்ணமா மன்னன் அவைக்கு வருகின்றார்!

**துரி:** பார்த்தீர்களா அப்பா! என் நண்பன் வீரத்துக்கு ஈடு இணையுண்டோ!

எங்கும் வாழ்த்தொலி கேட்கிறது. துரியோதனன் சென்று கர்ணனை அணைத்து வரவேற்கிறான்.

**திருத:** வெற்றி வாகை சூடி வந்த அங்க தேச மன்னவனே! அன்பான என் வாழ்த்துக்களை ஏற்றுக் கொள்ளுவாய்.

**கர்ண:** பாரத நாடெங்கணுமே பாராளும் தகுதி இன்று மாமன்னர் தங்களுக்கும் இளவரசர் மற்றும் இணைந்திருப்போர் எவர்க்குமன்றி இனி எவரும் மணிமடியை தாங்கிடவும் தகுதியில்லை.

**திருத:** பெரியப்பா! அன்றொரு நாள் எழுந்த வினாவுக்கு கர்ணனவன் பதிலிறுத்தான். இளவரசர் துரியனவன் இனிவரும் காலமதில் கர்ணனவன் அரவணைப்பில் அச்சமின்றி வாழ்ந்திடுவான்.

**பீஷ்ம:** இல்லை மாமன்னவனே! இன்றும் நான் மாறவில்லை. ஒன்றைத்தான் கூறுகிறேன்! பாண்டவரை மீட்டு வந்து பண்புடனே பகை நீக்கி ஒன்றிருக்க ஏற்றதொரு ஒப்பந்தம் செய்து வைத்தல் நாட்டுக்கும் நன்றாகும்– நம் இளவல் துரியனுக்கும் நலன் பயக்கும்! உலகனைத்தும் சென்று உயர் வெற்றி பெற்றாலும் அங்கத்துக்கதிபன் அர்ச்சுனனுக் கீடாகான்!

**துரி:** (கோபாவேசத்தில் கத்தியவண்ணம்) இல்லை பிதாமகரே! அங்க நாட்டான் ஆற்றலிலே அரைப் பங்கு ஏற்றமதும் அர்ச்சுனனுக்கில்லை. தெய்வீக சக்தி கொண்ட அஸ்திரங்களைத் தேடி அர்ச்சுனன் சென்றானாம். எந்தனுக்கு எல்லாமே என் நண்பன் கர்ணன்தான்! தெய்வீக சக்தி கொண்ட எந்தன் தேவ சக்தி அவனேதான்!

-காட்சி மாற்றம்-

அஸ்தினாபுரி–துர்வாச முனிவரும் ஏனைய ரிஷிகளும் உணவருந்தும்போது துரியோதனனும் சகுனியும் பரிமாறி உபசரிக்கின்றனர்.

**சகுனி:** அருந்துங்கள் மேலும் அருந்துங்கள்! அத்தனையும் தங்கள் அனைவருக்கும் ஏற்றவைதான்.

துரியோதனன் சகுனியை ஒரு மூலைக்கு அழைத்துச் செல்கிறான்.

**துரி:** இந்த முனிவர்கள் விரைவாகப் போக வேண்டும். ஏற்ற வழி பாருங்கள் இப்போதே மாமா!

**சகுனி:** துர்வாச முனிவரை நாம் துரத்திவிட முடியாது. விரும்பும் வரை தானிருப்பார். பொறுத்திருக்க வேண்டும். இடைநடுவில் தடை போட்டால் கொடுஞ் சாபம் கொடுத்திடுவார்.

இருவரும் முணுமுணுப்பதை அறிந்த துர்வாச முனிவர் சந்தேகப்படுகிறார்.

**துர்வா:** காந்தார நாட்டரசா! முனிவர்களை உபசரிக்கும் முறைமை இது தானோ? ஆதரிக்கும் ஆர்வம் அடியோடு போயினதோ?

**சகுனி:** அவ்வாறு கூறாதீர் அருந்தவப் பெரியீரே! தவத்தால் உயர்ந்த தங்கள் தாழ் பணிந்து உபசரித்தல் இளையவர் எம் பேறன்றோ!

**துர்வா:** அத்தகைய அடையாளம் துரியனிடம் காணவில்லை!

**சகுனி:** சினம் தவிர்க்க வேண்டுகிறேன். சிறியவன் இவன் சொல்லும் செய்தி ஒன்று கேளுங்கள். பாண்டவர்கள் இப்போ வனத்தில் வசிக்கின்றார். அவர்கள் இங்கிருந்தால் அரிய விருந்து வைத்து அன்புடன் உபசரிப்பர். அன்னவர்க்கும் தங்கள் ஆசி ஆர்வமுடன் கிடைத்திருக்கும். அந்தச் சேதி தன்னைத் தான் என்னிடம் இவன் சொன்னான்.

**துர்வா:** அறிந்தேன் நற்செய்தி! அன்னவர்கள்மீது அளப்பரிய பாசம் வைத்திருப்பது கண்டு வாஞ்சை மிகக் கொண்டேன். ஆரண்யம் நாம் சென்று அவர்களையும் காண்போம். அவர் விருந்தும் உண்போம். கவலை தவிர்த்திருங்கள்!

-காட்சி மாற்றம்-

வனத்தில் பாண்டவரின் விடுதி- இலையில் இருக்க திரௌபதி உணவு பரிமாறுகிறாள். அவள் முகத்தில் படரும் சோகம் கண்டு விடுகிறார் யுதிஷ்டிரர்.

**யுதிஷ்:** பாஞ்சாலியின் முகத்தில் படரும் சோகம் ஏனோ?

**திரௌ:** வனவாசம் புகுந்த அந்த முதல் நாளை நினைக்கின்றேன்! அஸ்தினாபுரி வாழும் அத்தனை பேர் கண்களும் கண்ணீரை உகுத்தன. நான்குபேர் மட்டும் நகைப்புடனே நின்றார். துரியோதனன், கர்ணன், துச்சாதனன், சகுனி இவர்கள் நால்வரையும் எண்ணித்தான் பார்த்தேன்.

**சகாதே:** கல்நெஞ்சம் படைத்த கபோதிகள் நால்வரதும் கண்களில் ஈரமுண்டோ? கானகத்தில் நாங்கள் இங்கு கதி கலங்கி நிற்பதாக கற்பனையில் இருப்பர். கவலை ஏன் அவர் பற்றி?

**திரௌ:** இங்கு உங்கள் நிலை கண்டு என் மனது ஏங்காதோ?

**யுதிஷ்:** கண்டாலும் எதையும் நீ காணாது போனாலும் பதின்மூன்று ஆண்டுகள் நாம் படவேண்டியது இதுதான்! இக்காட்சி தனைக் காண ஏக்கம் பெருகுமெனில் காம்பிலிய நாட்டுக்கு போயிருக்கலாம் அன்பே! பதின்மூன்று ஆண்டுகள் எம் வனவாசம் முடிந்த பின்னர் பிசகின்றி உனை அழைப்போம்!

**திரௌ:** பிரிந்து செல்வதைப் பற்றிப் பேசவில்லை ஐயா! சூதாடும் சபையில் அன்று சுடர்விட்டெழுந்த அந்தக் கோபத்தீ எங்கே குளிர்ந்துவிட்டதோ என்று பேதலிக்கின்றேன் இன்று. போரைப் பற்றி ஏதும் பேசவில்லைத் தாங்கள். கொடு நெருப்பாலும் உருகா பனிக்கட்டியாகி விட்டீர்! தம்பிமார் படும் துயரம் பாராதிருக்கின்றீர்! வீரர்க்கு அணிகலனாம் வெங்கோபம்! அதனைத்தான் தொலைத்துவிட்டு வாழாதிருக்கின்றீர்!

**யுதிஷ்:** சினத்துக்கும் அணையுண்டு பாஞ்சாலி நீ அறிவாய். கண்ணற்றவன் எறியும் கல்லுக்கு இலக்கில்லை. கோபமும் அத்தகைய குருட்டு முறையாகும். சீற்றம் கொள்வதையும் சிறப்பாக வழி வகுத்தால் சீரிய நெறி தோன்றும்- சிறந்த பலன் கிடைக்கும். தம்பியவன் துரியன் பொறாமைக்கடி பணிந்தான். அவன் விடும் பிழைக்காக அவன் வழியில் நாம் நடத்தல் அடுக்குமா? அடுக்காது! பொறுத்திருப்பதே இன்று பாஞ்சாலி நம் கடமை! மன்னிப்பதே தர்மம்! மன்னிப்பதே யாகம்! மன்னிப்பதே வேதம்! மன்னிப்பதே பிரம்மம்! மன்னிப்பதே சத்தியம்! மன்னிப்பதே தபம்! வீரர்களின் வலிமை மன்னிப்பிலே அடக்கம். ஆகவேதான் நான் அந்த மன்னிக்கும் பண்பினை என் பாதையதாய்த் தேர்ந்தெடுத்தேன்!

**திரௌ:** என் நிலையைப் பாரீரோ எந்தனது நாயகரே! கோழை என்று கூறத்தான் சிறியவளால் இயலுமா? தர்மத்தின் திருவுருவாய்த் திகழ்கின்ற பேரரசே! அதர்மத்தை வரவேற்று அதற்கடிமை ஆகுதலை தர்மம் என்றே ஏற்ற தங்களால் முடியுமா? துரியோதனன் என்றால் அவன் அதர்மத்தின் அவதாரம் என்பதுதான் அர்த்தமன்றோ?

**யுதிஷ்:** பாஞ்சாலி! கோபத்தின் கோரத் தீ பரவாமல் தடுதிடப்பார்!

**பீமன்:** (சினந்தவனாக) சீற்றத்தின் வேகத்தை தணித்திடச் சொன்னீர்கள் அண்ணா! அன்றந்த அவை நடுவே பாஞ்சாலி தன் முடியை பற்றி இழுத்தான் அந்த துச்சாதனன் என்னும் துர்மதியான். துரியோதனன் அவன் தன் தொடையினைத் தட்டிவிட்டான். கவுரவ குடும்பத்தின் முதியோரும் இளையோரும் கண் குளிரப் பார்த்த அந்தப் பொல்லாத காட்சியதே என்றும் என்னை உலுக்கிறது. அதை நினைத்தே என் நெஞ்சம் வெஞ்சினத்தில் வேகிறதே! எப்படித்தான் நான் மறப்பேன்! எவ்வாறு பொறுத்திருப்பேன்!

இவ்வாறு கூறிய பீமன் உணவினை உண்ணாமல் எழுந்து வெளியேறுகிறான். நகுலனும் சகாதேவனும் தொடர, திரௌபதியைத் தனியே விட்டு யுதிஷ்டிரரும் எழுந்து செல்கிறார்.

**பின்னணிப் பாடல்:**

தாலை இழிவு செய்தல் தரணிக்கே பேரிழுக்கு
தாயாகும் பெரும்பேறு பெண்மைக்கே அரும் பேறு
தூயபெண்மை தனைச்சிதைத்து துயரத்தீ பரவவிடில்
தாய்மனதும் தாங்காது தரணியதும் பொறுக்காது.
உரிய பழி தீராது எரிநெருப்பும் அணையாது.
பெருமைமிகு பாரதத்தின் அறச் சிறப்பும் நிலையாது
கடுஞ் சபதம் ஏற்றவர்கள் பெரு வீரரானதனால்
கொடுஞ்சமரினாலன்றி கொடுமைகளும் ஓயாது!

(தொடர்ந்து வரும்)

எம்.ரி.வி. தொலைக்காட்சி நிறுவனத்தின் உரிமை பெற்று மகாபாரத கதை வசனம் வெளியிடப்படுகிறது.

www.padippakam.com

